கல்கி

ஸ்பீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



பொண்ணு தர யோசிக்கிறாங்க..!

KALKI • 17.01.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



சினிமா ஸ்பெஷல்!



வீழ்ச்சி?

ஃப்ரெஷ்ஷா இரண்டு தொடர்கள்:

மாண்புமிகு மனம்

வாமன தேசங்கள்

பொங்கல் சிறப்பிதழ்!

SRIMATHI SUNDARAVALLI MEMORIAL RESIDENCY

"SUBHASHRAYA" - A HOME FOR ELITE SENIOR CITIZENS

CHENNAI - 600063

Heaven On Earth





RIGHT PLACE FOR ELDERS



Spiritualism



Peace



Honour



Comfort



Luxury



Health

With the Heart to Serve

We Welcome you

Moppedu Road, Alapakkam, New Perungalathur, Chennai-600063
Phone No : 044-2279 2002-04 Fax : 044-2279 2009
E-mail : ssmeto@dataone.in Website : www.ssmhome.in

கிரேஸியைக் கேளுங்கள்



✱ ஜி.என்.பி.

● **ஜே.துரைராஜ்,**
சென்னை

டிசம்பர் சங்கீத இசை விழா எப்படி?

சங்கீத சூப்பர் ஸ்டார் ஜி.என்.பி அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி, எனது நண்பன் எஸ்.பி.காந்தன் எழுதி இயக்கி, ஸ்வாதி சொல்யூஷன்ஸ் வெளியிட்ட 'இசை வசீகரா' என்ற டி.வி.டி. ரிலீஸ் செய்யப்பட்டது. சங்கீதத்தில் ஏ அண்ட் பி கூடத் தெரியாத என்னை ஜி.என்.பி. அன்று இசைபட வாழ வைத்தார். அவரது பிருகாக்களைக் கேட்டுவிட்டு, கோயிலுக்குப் போன நான் 'ஓம் முருகா' என்பதற்குப் பதில் 'ஓம் பிருகா ஓம் பிருகா' என்றுதான் சொல்ல முடிந்தது. என்னைப் பொறுத்தவரையில் ஜி.என்.பி.யின் விரிவாக்கம் 'கந்தர்வநாதப் பிரும்மம்' அந்த மேதையைப் பற்றி அடியேன் எழுதிய வெண்பாவும் அந்த டி.வி.டி.யில் இருப்பது. இந்த கிரேஸிக்குக் கிடைத்த க்ரேசி (Gracy) அருள்தான். அந்த வெண்பா இதோ:

'சந்திரனும் சூரியனும் சேர்ந்து ரசிக்கின்ற
மந்திர சித்ரா பௌர்ணமியே - உந்தன்
இசையால் உலகை அசைத்த, விந்தை
விசையே வசீகரா வாழ்'

● **சங்கரி, ஈரோடு**

ராமாவதாரத்துக்கும், கிருஷ்ணாவதாரத்துக்கும் என்ன வித்தியாசம்?

வித்தியாசமான ஒற்றுமை ஒன்று உண்டு. 'மரா மரா' என்று வேடன் சொல்ல ஆரம்பம் ஆனது ராமாவதாரம். 'ஜரா ஜரா' என்ற வேடன் கொல்ல நிறைவடைந்தது கிருஷ்ணாவதாரம்!

● **அபராஜிதா கண்ணன்,**
சென்னை

வியப்புக்கும், மலைப்புக்கும் என்ன வித்தியாசம்?

எல்லாமே இளமையில் வியப்பு... முதுமையில் மலைப்பு!

● **சாமுண்டி, காரைக்கால்**

முதுமை இனிமையானதா?

இனிது இனிது இளமை இனிது... அதனினும் இனிது இளமையில் அவ்வையின் முதுமை!

● **அ.அப்துல்காதர்,**
மே.தாம்பரம்

இப்போதெல்லாம் மரபுக் கவிதைகள் எழுதுவது குறைந்துவிட்டதே?

கவிதையில் மட்டும்தானா! ஒரு காலத்தில் அகிலமெல்லாம் வியாபித்திருந்த மரபு இப்போது அணுவில் மட்டும்தான் உள்ளது!

● **எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு சரியான ஜோடி கே.ஆர்.விஜயாவா... பத்மினியா?

சிவாஜிக்கு ஜோ



நாகேஷ்! திருவிளையாடல் படத்தில் கிரேஸி தருமியின் கேள்விகளுக்கு, திரு 'வாசகன்' சிவன் பதிலளிக்கும் நீளமான காட்சியை, இந்த ஜோடி ஒரே ஷாட்டில்

முடித்தது.

● **பி.ஆர். மயிலப்பன், ஈரோடு**

டியர் கிரேஸி... நீங்கள் மல்லிகைப் பூ மன்னனா... ரோஜாப்பூ ராஜாவா?

வாடாத காகிதப்பூ காமெடியன்!

● **ஜி.ரெஜினாபானு, பழனி**

காதலின் தூதுக்கு எது பெஸ்ட்... விழியா? தோழியா?

விழியை நம்ப முடியாது; காதலுக்குக் கண்ணு கிடையாது. தோழியை நம்பக்கூடாது; காதலுக்குப்



போட்டி உண்டு. சிரமத்தைப் பார்க்காம பொடி நடையாகப் போய் அந்த 'ஐ லவ் யூ'வைச் சொல்லித் தொலைச்சிடுங்க!

● **எம்.அசோக்ராஜா, திருச்சி**

வாஸ்து பார்க்காத இடம் ஏதும் இருக்கிறதா?

வீடு வரை வாஸ்து; வீதி வரை தோஸ்து; காடுவரை ஆஸ்து (ஆஸ்திக்குப் பிள்ளை); கடைசியில் எல்லாமே 'வேஸ்ட்டு' (Waste) ⊙

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



"என்ன மாமா... சௌக்கியமா?" என்றபடி வந்து அமர்ந்தார், ஒரு டப்பிங் ஷெட்யூலில் பிஸியாக இருந்த கார்த்தி. "யெஸ் பருத்திவீரன்" என்றதும், "இல்லை... இல்லை... இந்த வருஷம் நான் 'ஆயிரத்தில் ஒருவன்'" என்று தொடங்கினார்.

'பருத்தி வீரன்' கார்த்தி, 'ஆயிரத்தில் ஒருவன்' கார்த்தி - என்ன வித்தியாசம்?

"பருத்தி வீரன் கார்த்தி சினிமாவுக்குப் புதுசு. அந்தப் படம் முழுக்க முழுக்க அமீர் சாரின் உழைப்பு. 'ஏய் முத்தழகு'ன்னு என்னை ஏரியா ஸ்லாங்ல பேச வைச்சதும் அமீரின் சாதனை.

ஆயிரத்தில்

பொண்ணு தர யோசிக்கிறாங்க!

ஒருவன் வேற களம். ஃபேன்டஸியான கதை. கற்பனை உலகத்தை செல்லுலாய்ட்ல சொல்லப் போறாரு செல்வராகவன். ஹாலிவுட்ல 'மம்மி'யைப் பார்த்து பிரமிச்ச மக்கள், தமிழில் ஆயிரத்தில் ஒருவனைப் பார்த்து பிரமிக்கப் போறாங்க. மூணு வருஷம் என் கேரக்டரைக் கொஞ்சம் கொஞ்சமா செதுக்கி, வித்தியாசமான கெட்டப்புல வரப் போறேன். சமூகம், இலக்கியம், வரலாறுன்னு பல்வேறு விஷயங்களை உன்னிப்பா கவனிச்சு செஞ்சிருக்காரு செல்வா. தமிழ் சினிமாவில் காலம் முழுக்கப் பேசக்கூடிய படைப்பா ஆயிரத்தில் ஒருவன் இருக்கும்.''

சூர்யா, கார்த்தி இதில் தமன்னா யாருக்கு சூப்பர் ஜோடி?

''தமன்னா யார்கூட நடிச்சாலும் சூப்பராகத்தான் இருக்கும். அவங்க கெமிஸ்ட்ரி அப்படி வொர்க்அவுட் ஆகும்.''

பெரிய நடிகரோட பசங்க என்கிற பந்தா இல்லாம எப்படி உங்க இரண்டு பேரால கேஷுவலா இருக்க முடியுது?

''காரணம் எங்க அப்பாதான். ஸ்கூல்ல நாங்க படிக்கும்போது, பஸ்ல, சைக்கிளில் தான் போவோம். எளிமையா வாழறது தான் உயர்றதுக்கு ஒரே வழின்னு சொல்லிக் கொடுத்தவர் அப்பா. நானும், அண்ணனும் படிச்சு முடிச்சிட்டு ஒரு கம்பெனிக்கு வேலைக்குப் போனோம். அதனால நடுத்தர மக்களோட கஷ்டங்கள் எங்களுக்குப் புரியும். ஐயாயிரம் ரூபாய் சம்பாதிக்கறதுக்குள்ள போதும், போதும்ன்னு ஆகிடும். அதனால வெட்டி பந்தா எங்ககிட்ட பார்க்க முடியாது.

அப்பா ஓவியரா வாழ்க்கையைத்

தொடங்கி, நடிகரா உயர்ந்து, இன்னைக்குப் பெரிய இலக்கியவாதியா மாறியிருக்காரு. எத்தனையோ ரசிகர்கள் மாதிரி அப்பாவை நாங்களும் ரசிக்கிறோம். அப்பாவின் விஷய ஞானத்துக்கு அவரின்



இடைவிடாத தேடல்தான் காரணமாக இருக்க முடியும்.''

அண்ணி ஜோதிகா எப்படி இருக்காங்க?

''அண்ணி வீட்ல அண்ணியா இருக்காங்க. பெரிய நடிகை என்கிற மாதிரியோ, வேறு கலாசாரப் பின்னணியிலிருந்து வந்தவங்க என்கிற மாதிரியோ இருக்க மாட்டாங்க. வீட்ல அண்ணி, அம்மாவுக்கு அடுத்த ஸ்தானம்ன்னு சொல்வோம். அதைச் சரியா புரிஞ்சுக்கிட்டு செயல்படறாங்க.''

அண்ணன் சூர்யாவிடம் கற்றுக் கொண்ட விஷயங்கள்...

''எனக்கு முதல் படமே பெரிய ஹிட்டாகிட்டதால ஃபீல்டில் கஷ்டம் தெரியலை. ஆனால், அண்ணன் ரொம்பப் போராடி வந்திருக்காரு. அவரோட உழைப்பு, நேர்மை என பல அம்சங்கள் என்னைக் கவர்ந்திருந்தாலும், மனித நேயம்தான் நான் அவரிடம் கற்றுக் கொண்ட முக்கியமான குணம். அவரது சம்பாத்தியத்தில் பத்து சதவிகிதம் ஏழை எளிய மக்களுக்கு ஒதுக்கியிருக்கிறார். அது மட்டுமல்ல; சமூகத்தின் அடித்தட்டு மக்களோடு பழக நேரத்தையும் செலவிடுவார். ஒரு மூத்த அண்ணனா, தங்கச்சிக்குக் கல்யாணம் செய்து வைத்தது, தான் விரும்பிய பெண்ணை பெரியவங்க சம்மதத்தோட கல்யாணம் பண்ணிக்கிட்டதுன்னு நிறைய விஷயங்களில் அண்ணன்தான் எனக்கு ரோல் மாடல்.''

அப்போ உங்க கல்யாணமும்...?

''அதை ஏன் சார் கேட்கறீங்க. 'பருத்தி வீரன்'ல என் கேரக்டரைப் பார்த்திட்டு எனக்குப் பொண்ணு தரவே யோசிக்கிறாங்க. 'ஆயிரத்தில் ஒருவன்' கேரக்டரைப் பார்த்தா, இன்னும் யோசிப்பாங்க. பொண்ணு தரவே யோசிக்கிறப்போ, யார் என்னை லவ் பண்ணப் போறாங்க...? எனக்கு அம்மாதான் பொண்ணு பார்க்கிறாங்க. அம்மா ஓ.கே சொல்ற பொண்ணுக்குத்தான் நானும் ஓ.கே. சொல்வேன். ஆனா சினிமா ஃபீல்டுல என்னை அடையாளப்படுத்தின பிறகுதான் அந்த ஓ.கே!''

ஓ.கே...ஓ.கே...

– ராகவ்குமார்

கன நிழல்!



பாவனா நடித்த படங்கள் அவ்வளவாக ஜெயம் கொள்ளாததால், அம்மணி அப்செட்டோ அப்செட்! தல இருக்கும் 'அசல்' படத்தில் தானும் இருப்பது நல்ல விஷயம் என்பதால் பட்சி 'பட்'டுன்னு தலை ஆட்டிருச்சாம். 'அசல்' வந்து அம்மணியை அசத்தினால் ரொம்ப சந்தோஷம்தான்!

– வம்புமாமா





அவனருளால் அவனடியை
அடைந்திட்ட அன்னையே
நின் நினைவாய் நலப்பணிகள்
நிறைபடவே நிதம்தொடர்வோம்

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

57வது ஆண்டு விழா

Utthukuli Cooking Butter • Agmark Ghee
Edible Oil • All Brand Sunflower Oil
Vanaspathi • Agmark Gingelly Oil
Special Cow Ghee • Pure Cow Butter

ESTD: 1953-2010 **ஸ்ரீ வடபழனி ஆயில் ஸ்டோர்ஸ்**

SRI VADAPALANI OIL STORES

Advisor:
K. Venu Chettiar

Proprietor:
V. Koteeswaran

296, (Old 161), Royapettah High Road,
Mylapore, Chennai - 600 004.
Tel: 2499 1835 Res: 2466 1213
Cell: 94441 22242, 98407 71151



2011 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு தமக்குப் பின்னால் சுமார் 50 லட்சம் இளைஞர்களை அணி திரட்ட வேண்டும் என்று தமது மக்கள் இயக்கப் பொறுப்பாளர்களை முடுக்கி விட்டார் நடிகர் விஜய். அவரது நோக்கம் அரசியல் களத்தில் தனித்தே குதித்து விடுவது அல்லது சூழலுக்கு ஏற்ப காங்கிரஸில் இணைந்து விடுவதுதான். தம் அரசியல் நோக்கத்துக்கு உரம் சேர்க்கும் விதமாக தயாராகிக் கொண்டிருந்த 'வேட்டைக்காரன்' படத்தில் அரசியல் 'நறுக்' வசனங்களையும் சேர்த்தார். தமக்கு ராஜ்ய சபா உறுப்பினர் பொறுப்போ அல்லது இளைஞர் காங்கிரஸ் தலைமைப் பொறுப்போ கொடுத்தால், காங்கிரஸில் இணைந்து விடுவதாக ராகுலைச் சந்தித்துத் தெரிவிக்கவும் செய்தார். இந்த விஷயங்கள் நடந்து நான்கே மாதங்கள் ஆகியுள்ள நிலையில் விஜய் தரப்பு இப்போது நொந்து நூடுல்ஸாகப் போயிருக்கிறது என்கிறார்கள். ''எங்கள் 'வேட்டைக்காரன்' வீணாகப் போய்விட்டானோ என்ற கவலை எங்களைத் தொற்றிக் கொண்டிருக்கிறது. அவர் அரசியலில் இறங்குவதை விடுங்கள். திரை எதிர்காலமே தடைகளைச் சந்திக்குமோ என்றுகூட சந்தேகம் எழுகிறது'' என்கிறார் விஜய்யின் மக்கள் இயக்கப் பொறுப்பாளர் ஒருவர்.

''ஒரு படத்துக்கு விஜய் வாங்கும் சம்பளம் எட்டு கோடி'' என்று சொல்கிறார் ஒரு பத்திரிகையாளர். ''ஒரு முறை லயோலா கல்லூரி மாணவர்கள் எடுத்த கருத்துக் கணிப்பில் ரஜினியைவிட பாப்புலராக விஜய்



வீணாகிப்போனானா வேட்டைக்காரன்?

இருப்பது தெரிய வந்தது. விஜய் படங்களின் வெற்றி ஃபார்முலாவே இரட்டை அர்த்தப் பாடல்கள், ஆபாச நடனங்கள். பறந்து, பறந்து அவர் போடும் சண்டைக் காட்சிகள்தான். இவற்றுடன் அரசியல் பஞ்ச் டயலாக்குகளைச் சேர்த்து அசத்தலாக வேட்டைக்காரன் கொண்டு வந்தார் விஜய். இந்தப் படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகளின்போதுதான் ராகுலுடனான சந்திப்பு நிகழ்ந்தது'' என்று சொல்லி நிறுத்தி நமது சஸ்பென்ஸைக் கூட்டினார் அவர்.

''விஜய் அரசியலுக்கு வரக் கூடாதென்றோ அல்லது அவரது வேட்டைக்காரனை, சாதாரண மற்றொரு படமாக மாற்றிவிடும் நோக்கிலோ திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏவி.எம். தயாரித்துக் கொண்டிருந்த படத்தை அவுட் ரைட்டாக சன் பிக்சர்ஸ் வாங்க முடிவு செய்தது. ஏவி.எம். இதற்கு ஆர்வமாக இருந்தாலும், விஜய் தரப்பு அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. ஆனால், சன் மீடியாவின் பலம், படம் ஓடத் துணையாக இருக்கும் என்று விஜய்யின் அப்பா சந்திரசேகர் ஓ.கே சொல்லிவிட்டார். ஒரே இரவில் பிஸினஸ் முடிக்கப்பட்டது. ஒரு பெருந் தொகைக்கு படத்தை சன் பிக்சர்ஸ் வாங்கியது. அதே சமயத்தில் சென்னைக்கு வந்த ராகுல், 'விஜய் இளைஞர் காங்கிரஸில் பணிபுரியும் தகுதிக்கான வயதைக் கடந்துவிட்டார்' என்று சொல்லி காங்கிரஸுக்கு அவர் வருவதற்கு பிரேக் போட்டார். இதற்கிடையில் காங்கிரஸில் அவர் இணையப் போவதாகக் கிளம்பிய பரபரப்பு காரணமாக புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களும், வெளிநாடு வாழும் தமிழர்களும் 'வேட்டைக்காரனைப் புறக்கணிப்போம்' என்று எச்சரிக்கை விட்டனர். படத்தின் உலக மார்க்கெட்டுக்கு ஆபத்து வந்து விடுமெனப் பயந்த விஜய், 'இப்போதைக்கு அரசியல் இல்லை' என்று அறிக்கை விட்டுக் கழன்று கொண்டார்'' என்று முடித்தார் அந்தப் பத்திரிகையாளர்.

விஜய் மூட் அவுட்! விறுவிறு ரிப்போர்ட்

பிறகு அடுக்கடுக்காக நடந்த சம்பவங்களை விவரித்தார் மக்கள் இயக்கப் பொறுப்பாளர் ஒருவர்: ''படத்தை வாங்கியவுடன் முதல் இடி 'அரசியல் பஞ்ச்' டயலாக்குகள் வெட்டப்பட்டதுதான். இது ஒரு பக்கம் இருக்க தமது ரசிகர்களை தீபாவளிக்கு ஏமாற்றக்கூடாதென்று இரவு பகலாக ஒத்துழைப்பு கொடுத்துப் படத்தை முடித்தார் விஜய். ஆனால், சன் பிக்சர்ஸ் 'தீபாவளிக்குப் படம் ரிலீஸ் இல்லை' என்று அறிவித்து விட்டது. முதல் முறையாக விஜய் இமேஜ் 'சன்'னால் டேமேஜ் ஆனது.

விஜய் படத்தை சன் ஓரங்கட்டியதற்குக் காரணம், குடும்ப உறுப்பினர் உதயநிதியின் படமான 'ஆதவன்' தீபாவளிக்கு ரிலீஸ் ஆனதுதான்! 'ஆதவன்' படுத்துவிடப் போகிறதே என்ற பயத்தில், வேட்டைக்காரனைத் தள்ளி வைத்து விட்டார்கள். டைரக்டர் (சந்திரசேகர்) கலாநிதி மாறனைச் சந்தித்து, 'நவம்பரிலாவது ரிலீஸ் செய்யுங்கள்' என்று வேண்டுகோளை வைத்தார். அதுவும் நடக்கவில்லை. கடைசியில், டிசம்பர் 18 அன்றுதான் ரிலீஸ் செய்தார்கள். வழக்கமாக விஜய்க்குத் தனியாகப் படத்தைப் போட்டுக் காண்பிப்பார்கள். ஃபோர் ஃப்ரேம் தியேட்டரில் விஜய் காத்துக் கொண்டிருக்க, 'திரையிடப் போவதில்லை' என்று செய்தியனுப்பி அவரைக் கடுப்படித்தார்கள்'' என்று முடித்தார் அந்தப் பொறுப்பாளர்.

''ஒரு வழியாக தமிழ்நாட்டில் 230 திரைகளில் வேட்டைக்காரன் உலா வந்தான். 26 கோடிக்கு வாங்கிய படத்தை 45 கோடிக்கு விற்றார்கள். சன் தொலைக்காட்சி படத்தின் பிரோமோவில் கலக்க, முதல் வார கலெக்ஷன் 15 கோடி. பிரோமோவில் முதல் சில காட்சிகளில் 'இளைய தளபதி'

டைட்டில் மிஸ்ஸிங்'' என்கிறார் திரைப்படங்கள் மார்க்கெட்டிங் குறித்த தமிழ்நாடு சினிமா என்டர்டெயின்மென்ட் பத்திரிகையின் ஆசிரியர் ராமானுஜம். ''இன்னமும் ஓடிக் கொண்டிருப்பதால் படம் வசூலை அள்ளிக் கொட்டுமே'' என்று அவரிடம் கொக்கியைப் போட்டோம்:

''படத்தின் வெற்றி என்றால் தயாரித்தவர், வாங்கியவர், விற்றவர்... எல்லா தரப்புக்குமே மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும். வேட்டைக்காரன் விஷயத்தில் சன் பிக்சர்ஸ் கையிலிருந்து வாங்கியவர்கள் நிலை கேள்விக்குறியாக உள்ளதே?

பொங்கலோடு பெரும்பாலான திரைகளில் படத்தைத் தூக்க இருக்கிறார்களாம். படத்தின் ஓட்டத்துக்கு சன் மீடியா பெரிய பலம் என்றாலும், மற்ற தொலைக்காட்சிகள், ஊடகங்கள் துணையில்லாதது பலவீனம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆங்காங்கே படம் வசூல் குறையவே, விஜய் நேரடியாகப் போய் ரசிகர்களுக்குக் காட்சியளிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். கலாநிதி மாறனைச் சந்தித்து, 'முக்கியமான நகரங்களில் பொங்கலுக்குப் பிறகும் படம் ஓடும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். 45 கோடிக்கு விற்கப்பட்ட படம் குறைந்தது 55 கோடியாவது வசூல் அள்ள வேண்டும். அது நடக்குமா என்று திக்திக்குடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது விஜய் தரப்பு. ஏனென்றால் அப்படி வசூலாகவில்லை என்றால் அடுத்த படம் வியாபாரம் ஆவது மிகவும் சிரமம்'' என்று முடித்தார் ராமானுஜம்.



"விஜய் சுறா மீது சவாரி செய்து வெற்றி உலா வரத் துடித்துக் கொண்டிருக்கிறார்"

அரசியல் நறுக் டயலாக்குகளை கட் செய்து ரிலீஸைத் தாமதப்படுத்தியதுதான் இந்த நிலைக்குக் காரணம் என்று கடுப்பாகிவிட்டார்கள் விஜய் ரசிகர்கள். மற்றொரு பக்கம் விஜய்யின் அரசியல் பிரவேச ஆசையும் கருகிப் போயிருக்கிறது.

''வேட்டைக்காரன் வெற்றிப் படமா? விஜய் விரக்தியடைந்திருக்கிறாரா?'' என்று எஸ்.ஏ.சந்திரசேகரிடம் கேட்டோம்.

''வசூலை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு படத்தைப் பற்றி இப்படிக் கேட்பது வியப்பாக உள்ளது. பெரும்பாலான திரைகளில் பொங்கலின்போது படத்தை எடுத்துவிடுவதாக வரும் செய்தி சரியல்ல. படம் தீபாவளிக்கு ரிலீஸ் ஆகாததற்குக் காரணம் போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள்தானே தவிர வேறெதுவுமில்லை. நீளம் கருதியோ, வேறு பல தொழில்நுட்பக் காரணங்களுக்காகவோ இயக்குநர் சில காட்சிகளை நீக்கியிருக்கக் கூடும்'' என்று முடித்துக் கொண்டார் அவர்.

இந்நிலையில் ஏதோ சதி என்று முணுமுணுக்கிறார்கள் ரசிகர்கள். அடுத்த படமான 'சுறா'வை அரசியல் மசாலாவோடு களம் இறக்க முடிவெடுத்திருக்கிறார் விஜய் என்கிறார்கள். அந்தப் படத்தையும் தங்களுக்கே விற்க வேண்டுமென்று சன் தரப்பு கேட்க, தயாரிப்பாளர் சங்கிலி முருகனோ, 'நோ' சொல்லிக் கொண்டிருக்கிறாராம். குழம்பிப் போயிருக்கிறார் விஜய். வேட்டைக்காரனை வோட்டுக்காரனாக மாற்ற முயன்று தோற்றுப் போன (தோற்கடிக்கப்பட்ட?) விஜய் சுறா மீது சவாரி செய்து வெற்றி உலா வரத் துடித்துக் கொண்டிருக்கிறார்.

– ப்ரியன்

கதை எழுதியிருந்தா அட்மிஷன்!

நடிப்பு, எடிட்டிங், இயக்கம், ஒளிப்பதிவு இவற்றைச் சொல்லித்தர கல்லூரிகள் உள்ளன. திரைக்கதை எழுதுவதற்கான பயிற்சி...? அதற்குரிய ஆறு மாத காலப் பயிற்சியை இந்த ஆண்டு முதல் தொடங்குகிறது ராஜீவ்மேனனின் 'மைண்ட் ஸ்க்ரீன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபிலிம் டெக்னாலஜி' இயக்குநர் கம் ஒளிப்பதிவாளர் ராஜீவ்மேனன் பேசுகிறார்...

''சினிமாவுக்கு அஸ்திவாரமே நல்லதொரு ஸ்க்ரிப்ட்தான். ஏற்கெனவே எங்களிடம் சினிமாடோகிராஃபியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இன்று திரையுலகில் நுழைந்து கேமராமேன்களாக முத்திரை பதித்துள்ளனர். இதுதான் எங்களை திரைக்கதைப் பயிற்சியிலும் காலடி எடுத்து வைக்கத் தூண்டியது.''

ஆறே மாதத்தில் என்ன சொல்லிக் கொடுத்துவிட முடியும்?

''இன்றைக்கு சினிமாத் துறை ஏராளமான படித்த இளைஞர்களை ஈர்க்கிறது. என்ஜினியரிங்,



* ராஜீவ்மேனன்

எம்.பி.ஏ. படித்தவர்கள் எல்லாம் சினிமாவுக்கு வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களின் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்குக் குறைந்தபட்சம் ஒரு புரொஃபஷனல் குவாலிஃபிகேஷன் அவசியம் என நினைக்கிறார்கள். சினிமாவில் நுழைய ஆர்வமாக இருக்கும் இளைஞர்களோ, நாலு வருடங்கள் என்ஜினியரிங் காலேஜில் படித்த பிறகு, ஃபிலிம் இன்ஸ்டிடியூட்களில் சேர்ந்து இன்னும் மூன்று வருடங்களை வீணாக்க விரும்பவில்லை. எனவே, திரைப்படக் கல்லூரிகளில் மூன்று வருடங்களில் என்ன சொல்லித் தருகிறார்களோ, அதை ஆறு மாதங்களில் கற்றுக் கொடுக்கும்படியாக எங்கள் கோர்ஸை உருவாக்கியிருக்கிறோம்.

நான் சொல்வதை நேர்மையான ஒரு விமர்சனமாக எடுத்துக் கொள்ள வேண்டும். தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஃபிலிம் இன்ஸ்டிடியூட்களில் படிக்கும் மூன்று வருடக் காலத்தில் சினிமா பற்றிய தியரிக்காகவும், மரத்தடியில் டீ குடித்தபடி அரட்டைக்குமாக கணிசமான நேரம் செலவிடப்படுகிறது. எனவே, அந்த மூன்று வருடப் படிப்பை ஆறு மாதத்தில் சொல்லிக் கொடுப்பது சிரமம் இல்லை.''

> “ஆறு மாதப் பயிற்சிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் ஃபீஸ்!”

கதை, ஸ்க்ரிப்ட் எழுதுவதெல்லாம் கிரியேட்டிவிடி இல்லையா! அதைப் போய் பாடம் மாதிரி எப்படிச் சொல்லிக் கொடுக்கமுடியும்?

''ஆஸ்கார் விருது பெற்ற ஏ.ஆர். ரஹ்மான் மிகத் திறமையானவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் முறைப்படி இசை கற்றுக்கொண்டு தன் திறமைக்கு மெருகூட்டிக் கொண்டதால்தான் உலக அளவில் பிரகாசிக்க முடிகிறது. நாங்களும் எழுத்துத் திறமையுள்ளவர்களுக்கு அந்தத் திறமையை மெருகூட்டவே இந்தப் பயிற்சியை ஆரம்பித்திருக்கிறோம். இந்தப் பயிற்சியில் சேருவதற்கான தகுதியே, விண்ணப்பிப்பவர்கள் குறைந்தபட்சம் இரண்டு கதைகள் எழுதி, ஏதாவது பத்திரிகையில் பிரசுரமாகி இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு திரைக்கதை எழுதுகிற கலையைச் சொல்லிக் கொடுத்து, திறமையைக் கூர்மைப்படுத்துகிறோம்.

தற்கால இலக்கியத்தில், புக்கர் விருது வென்ற கிரண் தேசாய், அரவிந்த் அடிகா போன்ற எழுத்தாளர்கள் 'கிரியேடிவ் ரைட்டிங்' பயிற்சி பெற்றவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

ஒரு திரைப்படத்தின் ஸ்க்ரிப்ட் இந்த வடிவத்தில்தான் இருக்க வேண்டும் என்று வரைமுறைகள் வந்து விட்டன. எழுதி விட்டால் மட்டும் போதாது; அதைச் சட்டப்படி பதிவுசெய்து பதிப்புரிமை பெற்றுக் கொள்ள வேண்டும்; இப்படி எத்தனையோ விஷயங்கள் இன்று வந்து விட்டன.''

மொழி ஒரு பிரச்னையாக இருக்காதா?

''இருக்காது. இன்ஸ்டிடியூட்டில் பாடமொழி ஆங்கிலம். ஆங்கிலத்தில் திரைக்கதை எழுதும் தொழில் நுணுக்கத்தைக் கற்றுக் கொண்டு, நீங்கள் எந்த மொழியில் வேண்டுமானாலும் கதை, திரைக்கதை எழுதிப் பழகலாம். திரைக்கதை எழுதுவதற்கு சாஃப்ட்வேர் கூட வந்துவிட்டது.''

ஆறு மாதப் பயிற்சிக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் ஃபீஸ் அதிகமில்லையா?

''அப்படித் தோன்றலாம். ஆனால் நூற்றுக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்தாலும், இருபது பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதாலும், பயிற்சி மாணவர்களுக்கு கூட்டாக ஒரு படம் எடுக்கும் அனுபவமும் கிடைக்கும் என்பதாலும் இது அவசியமாகிறது.''

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**



கல்கி



2010 ஜனவரி 17
விரோதி தை 4
மலர் : 68
இதழ் : 25

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


தப்பித் திரியும் பயங்கரவாதிகள்!


நாட்டின் பாதுகாப்பை ஐம்பதாயிரம் ரூபாய்க்குள் அடக்கிவிட முயன்றுள்ளது நமது அரசாங்கம்! ஆம்! செங்கோட்டையைத் தகர்க்க சதி தீட்டிய மூன்று பாகிஸ்தான் பயங்கரவாதிகளைத் தப்பியோட அனுமதித்து விட்டு, அவர்களைப் பற்றிய தகவல் தருவோருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பரிசளிப்பதாக அறிவித்துள்ளது!

பத்தாண்டுகளுக்கு முன்பு தீட்டப்பட்ட சதித்திட்டத்தைக் கண்டுபிடித்தபோது, அவர்களிடம் ஏராளமான போதைப் பொருளும் நவீன வெடி மருந்தும் இருந்தபோதிலும், நமது நீதி அமைப்பு இந்தக் குற்றவாளிகளுக்குச் சில ஆண்டு சிறைத் தண்டனைதான் வழங்கியிருக்கிறது. அந்தத் தண்டனைக் காலமும் முடிவுற்றுவிட, அவர்களை மீண்டும் பாகிஸ்தானுக்கே திருப்பி அனுப்பவும் ஏற்பாடுகள் நடந்துள்ளன. அவ்வாறு திரும்பச் செல்வதற்காக, காவல் துறையின் கட்டுப்பாட்டில் காத்திருந்த சமயத்தில்தான் தப்பியோடி யிருக்கிறார்கள் இந்த மூவரும்.

இந்தச் சம்பவத்தால் எழும் சந்தேகங்கள், அதன் பின் மிகப் பெரிய சதி இருக்கக்கூடும் என்று உணர்த்துகின்றன:

* தாய்நாட்டுக்குத் திரும்ப விரும்பாமல் பாகிஸ்தானியர் மூவரும் ஏன் தப்பியோட வேண்டும்? இந்தியாவிலேயே மறைந்திருந்து மேலும் சதிச் செயல்களில் இறங்கவா? அவர்களைக் கண்காணிக்க ஒற்றை சப்-இன்ஸ்பெக்டர் மட்டுமே பணியில் இருந்தது ஏன்? தண்டனைக் காலம்தான் முடிந்துவிட்டதே என்ற சமாதானத்துக்கு





இடமில்லை; பாக் திரும்பும் வரை மூவருக்கும் காவல்துறைதானே பொறுப்பு?

✱ இந்த மூவரும் தாய்நாட்டுக்குத் திரும்ப அனுப்பப்படுவதற்கு முன், பாக் தூதரகம் மூலம் அந்நாட்டுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அதற்குரிய அரசாங்க நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பாக். தூதரகமும் சரி, அரசும் சரி, இவர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பப்படப்போவது குறித்து எந்தத் தகவலும் இல்லை என்கின்றன. அவர்களுக்கு முறையாகத் தகவல் தெரிவிக்கப்படாதது ஏன்?

✱ கண் கோளாறு என்று புகார் சொன்ன கைதிகளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற சப்-இன்ஸ்பெக்டர், பின்னர் ஏன் அவர்களை உணவகத்துக்குக் கூட்டிச் சென்றார்? அங்கு அவர்களைத் தனியே இருக்க விட்டுவிட்டு இயற்கை அழைப்புக்கு அவர் சென்றது எந்தத் தைரியத்தில்? அவர்கள் தப்பிவிட்டனர் என்று அறிந்தும் அவர் பதற்றமடையாதது ஏன்? அந்தத் தகவலை மேலிடத்தில் தெரிவிக்க அவர் பதின்மூன்று மணி நேரம் இடைவெளி அளித்தது எதற்கு?... கூட்டி-கழித்துப் பார்க்கையில், பயங்கரவாதிகள் மூவரும் தப்புவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றே முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களைத் தப்ப அனுமதித்த சப்-இன்ஸ்பெக்டர் திலமுனி சிங் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களை மேலும் கடுமையாக்கி, உடனுக்குடன் நீதி வழங்கப்பட வழிவகை செய்யவேண்டும். தோல்வியுற்ற பயங்கரவாத முயற்சியும் கூட நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதச் செயலுக்கு இணையாகத் தண்டிக்கப்படும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதோடு, எல்லா அம்சங்களிலும் அரசின் செயல்திறன் மேம்பட வேண்டும். இல்லையேல், ப.சிதம்பரம் விரும்புவது போல் உள்துறை அமைச்சகத்தை இரண்டாகப் பிரித்தும் பயனில்லை; நான்காகப் பிளந்தும் பயனில்லை! ○


தீபு - கோபு
ஹாய்... வா கோபு... ஹவ் ஆர் யு?
ஃபைன்... ஒரு பொங்கல் கவியரங்கத்துக்குப் போறேன். நீயும் வர்றியா...?
எனக்குக் கவிதை எழுதத் தெரியாதே...!
சிம்பிள்... நான் சொல்லித் தர்றேன்... சாம்பிளுக்கு ஒண்ணு சொல்றேன்... கவனி....
ம்... சொல்லு
இரண்டு எழுத்தில் ஒரு கவிதை 'தீபு' ஒரு எழுத்தில் ஒரு கவிதை...
'தீ'ன்னு சொல்வானோ?
'தீ'! இப்படித்தான் சிம்பிளா எழுதணும் புரியுதா...?
புரியுது... நா சொல்றேன். இரண்டு எழுத்தில் ஒரு கவிதை 'கோபு'. ஒரே எழுத்தில் ஒரு கவிதை 'கோ'!
கருத்து: கார்த்தி படம்: கதிர்

சூர்ய சக்தி

குழந்தைகளுக்குத் தாய் ஸ்தன்யபானம் பண்ணுவிக்கிற மாதிரி லோகமாதா அத்தனை ஜீவராசிகளுக்கும், தாவரங்களுக்குங்கூட சூர்ய சந்திரர்களின் கிரண தாரைகளால் பாலூட்டுகிறாள். தாவரங்களுக்கும் ஜீவன் உண்டு. ஜகதீஷ் சந்திரபோஸ் இந்த (சென்ற) நூற்றாண்டு ஆரம்பத்தில் இதை ஸயன்ஸ்படி நிரூபித்துக் காட்டுவதற்கு ரொம்ப முன்னால், வேத காலத்திலிருந்தே தாவரங்களுக்கு உயிரும் உணர்ச்சியும் உண்டு என்பது நமக்குத் தெரியும்.

'சூர்ய சந்திரர்களின் பிரகாசத்தால் உணவூட்டுகிறாள்; உயிரூட்டுகிறாள்' என்றால் என்ன அர்த்தம்? தாவரங்கள் நேராகத் தாங்களே ஜீவ சத்தை சூர்யனிடமிருந்து பெறுகின்றன. அதோடு நிற்காமல் பரோபகாரமாக, இப்படி நேரே சூர்யனிடமிருந்து ஜீவ சத்தைப் பெற முடியாத நமக்காகவும் தாவரங்களே நாம் அடுப்பு மூட்டிச் சமைக்கிற மாதிரி சூர்ய உஷ்ணத்தில் அந்த சூர்ய சக்தியையே நமக்கு ஜீரணமாகிற மாதிரி ரூபத்தில் சேமித்து வைத்துக் கொள்கின்றன.

சூர்ய சக்தியாலேயே biosphere என்கிறதாக இந்த லோகம், ஜீவ லோகமாக இருக்கிறது. சூர்யனுடைய வெளிச்சத்திலே ஓயாமல் ரிலீஸாகிக் கொண்டேயிருக்கும் சக்தி ஸகல அணுக்களுக்குள்ளேயும் வியாபித்தும், தாவர வர்க்கத்தில் மேலே சொன்னாற்போல 'ஃபோட்டோஸிந்தஸிஸ்' உண்டாக்கியுந்தான் ஜீவ ப்ரபஞ்சத்தை நடத்துகிறது என்று இப்போது ஸயன்ஸில் சொல்வதை எத்தனையோ யுகம் முந்தியே நம்முடைய வேத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. தாவரம் மாதிரியே நாமும் நேரே அந்த சக்தியைப் பெறுகிறதற்குத்தான் காயத்ரி முதலான மந்த்ரங்களைக் கொடுத்திருக்கிறது. (ஸயன்ஸுக்கும்) பல படி மேலே போய் தேஹ சக்தியோடு நிறுத்திக் கொள்ளாமல் புத்தி சக்தி, பரமார்த்திகமான ஸாதனா சக்தி ஆகியவற்றையும் அவனிடமிருந்து க்ரஹித்துக் கொள்வதற்கு காயத்ரியைக் கொடுத்திருக்கிறது. அங்கே 'ஸவிதா', 'ஸாவித்ரி' என்று நம்மைப் பெற்றெடுத்து வாழ்வு தருகிற ப்ரியமான தாயாகவே சூர்ய சக்தியைச் சொல்லியிருக்கிறது. இந்த சக்தியும் ஆதி சக்தியான பராசக்தி என்ற மூலமான தாயாரின் அங்கந்தான் - பாலூட்டும் அங்கந்தான் - என்கிறார் ஆசார்யாள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



கல்கியின் காலேஜ் விஸிட்!

அமைதியும் பசுமையும் காதலர்கள் போல கைகோத்து நடக்கும் கோவை மேட்டுப்பாளையம் சாலையில்... கிராமத்துச் சிற்பிகளின் சரணாலயம் போல கம்பீரமாய் தன் கல்விச்சேவையை அறிவித்தபடியே ஜோதிபுரத்தில் நிற்கிறது பயனீர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி. நடந்து முடிந்த செமஸ்டர் எக்ஸாம் களைப்புக்குப் பின் கல்கியின் ஜாலி விஸிட்டுக்காக காலேஜுக்குள் என்டர் ஆனோம். மார்கழி இளம் பனியாய் மனசைக் குளிரூட்டிய... அந்த விஸிட்டின்போது சிக்கிய டேலன்ட் ஸ்டூடண்ட்களின் எவிடன்ஸ் சில...

'காலேஜ் பக்கங்களை கலர்ஃபுல் ஆக்க வருகை தரும் கல்கி குழுவே... வருக... கிர்ரடிக்க வைக்கும் கேங்ஸ்டர்களே...' என்ற ரீதியில் கோரஸாக வெல்கம் பாட, எஸ்கேப்பாகப் பார்த்த நம்மை இழுத்துப் பிடித்தனர். "இருங்க ஸார்... பயப்படாதீங்க... சும்மா ஒரு பெப்புக்குத்தான்" என்றவாறு போஸ் கொடுக்க, கிடைத்தது ஒரு க்ளிக்!



சினிமா ஊறுகாய் மாதிரி...



எனக்குப் பிடிச்ச கவிதை... எங்க கல்லூரி ப.குணசேகரன் எழுதிய 'அவசர அறிவிப்பு' தான்!

தமிழக மக்களைக் காக்க
'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்'
ஈழத்தில் கிடைக்குமா
'இனக் காப்பீட்டுத் திட்டம்.'





இளைஞனே!

இமயம் குடை பிடிக்கும்...

கங்கை உன் கால் நனைக்கும்...

வெற்றி உன் விலாசம் தேடும்... நீ

முயற்சியைச் சுவாசி அது போதும்!

- அகிலாண்டேஸ்வரி

(நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்)



கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு -
அன்று
'செல்' இருந்தால் செல்லுமிடமெல்லாம் அழைப்பு
- இன்று
கண்ணும் கண்ணும் நோக்கினால் காதலென்பது
அன்று
நோக்கியா இல்லாமல் காதலென்பதேது இன்று
காந்தியம் பேசி அடிமை விலங்கை
அறுத்தெறிந்தோம் அன்று
கைப்பேசிக்கு அடிமையாய்
ஆகிவிடுவோமோ இன்று?!

- ந.நிவேதா,

பி.எஸ்ஸி, மூன்றாம் ஆண்டு





கட் அவுட்டுக்குப் பாலை ஊத்துறவன் மென்டலு!

தலைமுடியைக் கலராக்கிக்கற, டாட்டூஸை உடம்புல வரைஞ்சிக்கற, காலர் டியூனிலிருந்து கடைசி காலம்வரை பாதிக்கிற சினிமா அவசியமா அவசியமில்லையான்னு விவாதிக்க அதிலிருந்து சில துளிகள்...

● ஸ்டூடன்ட்ஸ் ஃபாலோ பண்ணும் ஸ்டைலை விடுங்க... இந்தியாவின் பெருமைகளுள் ஒன்று நமது கமலின் சினிமா சாதனை. இது சாதாரணமானதா? அதே மாதிரி நாமளும் சாதிக்க சினிமா தூண்டுது இல்லே?

- குணசேகரன்

● அண்ணாதுரை, எம்.ஜி.ஆர்., கலைஞர், ஜெயலலிதா... நமது அரசாங்கங்களே சினிமா என்கிற அஸ்திவாரத்தின் மேல்தான் கட்டப்பட்டுள்ளது. மக்களுக்குக் கிடைக்கும் எல்லா பலன்களுக்கும் இந்த சினிமாவும் ஒரு காரணம்.

- சிவராசன்

● கிளாஸ் பாடத்தையும் செமஸ்டர் பேப்பரையும் புத்தியில வெச்சு எப்பவும் ஜெபம் பண்ணா நல்ல ஸ்டூடண்டும் மென்ட்டலாத்தான் ஆவாங்க. ரிலாக்ஸ் இல்லேன்னா நடமாடும் இயந்திர மனுஷன்தான்.

- சிவபிருந்தா

● சினிமா பாத்துத்தான் சாதிக்க முடியுமா? விஞ்ஞானிகள், தலைவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் சாதனை படைக்கலையா...? சினிமா ஒரு டைம்பாஸ்... பாப்கார்ன்... அவ்வளவுதான்.

- கோகிலவாணி

● அண்டா குண்டா வித்துப்போட்டு
அம்மா தாலிய அடகு வெச்சு
காலேஜுக்கு அனுப்புறாங்க பாவமா...
இவன்
கட் அவுட்டுக்கு பாலை
ஊத்துறான் மென்ட்டலா

- நவநீதம்

● படிக்கிறப்போ தங்கம் போன்ற
காலத்தை சினிமாவுக்குத்
தாரை வார்த்துட்டா
காலேஜ் காலம் முடிஞ்சதும்
தியேட்டர்ல பிளாக்ல
டிக்கெட் விக்க வேண்டியதுதான்.

- சாம்ஸன் வேதநாயகம்

முடிவு: எல்லாத்துக்கும் ஒரு லிமிட் இருக்கு! அதை மீறாம பாத்துக்கணும். சாப்பாட்டுக்கு சைட் டிஷ்ஷா ஊறுகாய் இருக்கலாம். அதையே மெயின் டிஷ் ஆக்கினா ஆரோக்கியம் பாதிக்கும். அப்படித்தான் சினிமாவும்...



எதிர்ல தம்பி குணசேகரன் சொன்ன மாதிரி அவ்வை சண்முகிதான் இந்த கெட்டப்புக்கு இன்ஸ்பிரேஷன்!

பின் தங்கிய கிராமத்தில் அரசுப் பள்ளியில் படித்து இக்கல்லூரியில் முதுநிலை கணினி விஞ்ஞானப் பாடத்தில் இரண்டு தங்கப் பதக்கங்களை பாரதியார் பல்கலைக் கழக வெள்ளிவிழாவில் பெற்றவர். கல்லூரிக்குப் பெயர் வாங்கித் தந்ததால் கல்லூரியிலேயே பேராசிரியை வேலையைக் கொடுத்திருக்கிறது பயனீர் கல்லூரி.

- என்.காஞ்சனா,
எம்.சி.ஏ



முன்பதிவு

என் படுக்கையைப் பத்திரப்படுத்துங்கள்
அடுத்து என் மகன் வருவானென்று
இறக்கும் முன் எழுதிவிட்டுச் சென்றாள்
அந்த முதியோர் இல்லத்து முனியம்மா

- இரா. சாம்சன் வேதநாயகம்,
பி.சி.ஏ இரண்டாம் ஆண்டு



படிச்ச காலேஜிலேயே வேலை!

‘‘எங்கள் கல்லூரியின் முதல்வர் கல்கியில் அரை நூற்றாண்டு வாசகர். கல்கியின் அத்தனை எழுத்துகளையும் திரட்டி வால்யூம்களாகப் பாதுகாத்து வருகிறார். இப்போ இருந்து நாங்களும்தான்...’’



"ரிகர்சல்லே ஃபோட்டோ எடுக்கறாங்களே..." "அதுதான் நேச்சுரல் ப்யூட்டியாம்!"





"சிப்பியாகச் செயல்படுது!"

சுகுணா தேவராஜ்
செயலர் -
பயனீர் கலை
அறிவியல் கல்லூரி

"கிராமங்களிலிருந்து கல்வி வரத்தைப் பெற எங்கள் கல்லூரியைத் தேர்ந்தெடுத்து வருவதால் அவர்களுக்கு அன்பான ஆதரவையும் கட்டுப்பாட்டுடன்கூடிய கல்வியையும் மட்டுமே வழங்குகிறோம். ஒருபோதும் அபராதத்தையோ அதிகாரத்தையோ திணிப்பது இல்லை. அரசு வழங்கும் கல்வி உதவித் தொகையை மட்டுமன்றி தனியாரிடமிருந்தும் முன்னின்று வாங்கித் தருகிறோம். தமிழ் வழி பயிலும் கிராம மாணவர்களின் மொழிப் பிரச்னையைத் தீர்க்க சிறப்பு ஆங்கிலப் பயிற்சி வகுப்பு கட்டணமின்றி நடத்துகிறோம். வேலை வாய்ப்பு ஆலோசனை மையம், பர்சனாலிட்டி டெவலப்மென்ட் வகுப்புகள் நடத்தி வேலை வாய்ப்புகளைப் பெற்றுத் தருகிறோம். இன்னமும் தினமும் காலை நேரப் பிரார்த்தனைக் கூட்டம் கல்லூரியில் நடந்துகொண்டிருக்கிறது. மனதுக்கும் செயலுக்குமான ஒழுங்கமைப்பைக் கவனத்தில் கொண்டு, இந்தக் கல்லூரியில் செமஸ்டர் தேர்வுக்கான முன்மாதிரி தேர்வுகளும், 85 சதவிகிதத்துக்கும் அதிகமானவர்களின் 'ஃபுல் அட்டென்டன்ஸ்'ும் குறிப்பிடத்தக்க அம்சம்" என்கிறார் கல்லூரி முதல்வர் **கே.ஆர்.கார்த்திகேயன்.**

"எங்கள் கல்லூரியில் படிக்க வரும் மாணவ மாணவிகளில் 85% பேர் முதல் தலைமுறையாகப் பட்டப்படிப்புக்காக கிராமத்திலிருந்து வந்துள்ளவர்கள். அவர்கள் 92% முதல்தரமான தேர்ச்சியைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர். இந்த விசேஷ காரணத்துக்காகவே குறைந்த கட்டணத்தில் நிறைந்த கல்விச் சேவையின் மூலம் கிராமங்களைக் கல்வியால் வளமாக்குகிறோம். ஆயிரக் கணக்கான நூல்களைக் கொண்ட நூலகமும் இலவச பஸ் வசதியும் எங்கள் கல்லூரியின் பிரத்யேக பலம்.



கணினி பட்டப் படிப்பிலும் மேலாண்மை பட்டப்படிப்பிலும் முதல்தரமான மாணவ முத்துக்களை உருவாக்க இந்தக் கல்லூரி சிப்பியாகச் செயல்படுகிறது."

செய்தி சித்திரம்:
ஆர்.பாலா, கோவை

திருமுருகாற்றுப்படை அரசு
வாகீச கலாநிதி
தமிழ்க் கவி பூஷணம்
உபந்நியாச கேசரி
திருநெறித் தவமணி
கந்தர் அலங்காரச் செம்மல்
தமிழ் முனிவர்
செந்தமிழ்ச் செல்வர்
என ஏராளமான
பட்டங்களும்:
பதக்கங்களும் பெற்ற:

பழமைக்கும்
புதுமைக்கும்
பாலமாகத் திகழ்ந்த
'கலைமகள்' ஆசிரியர்



கி.வா.ஜ.

எழுதியவை

பங்கிம் சந்திர சட்டர்ஜி
சரத் சந்திர சட்டர்ஜி
தாரா சங்கர் பானர்ஜி
ரவீந்திரநாத் டாகுர்
நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்
இன்னும் ஏராளமான பிறமொழி எழுத்தாளர்களை
தமிழ மக்களிடையே
உலவ விட்டு ...
கலைமகள்
ஆனந்த விகடன், கல்கி குமுதம்
அமுதசுரபி போன்ற இதழ்களில்

நாவல்கள், சிறுகதைகள்
பல எழுதி இலட்சக்கணக்கான
வாசகர்களின் உள்ளத்தில் இடம் பெற்ற



த.நா.குமாரசாமி

எழுதி –
மொழிபெயர்த்த

Creative Studio

நூற்றுக்கணக்கான புத்தகங்கள்

எழுதியவர் மறைந்தாலும் **எழுத்து** மறையவில்லை
காலம் கடந்தாலும் **கருத்து** சிதையவில்லை
நீங்கள் வாங்கினால் உங்கள் **தமிழ்த் திறமை வளரும்**
நாங்கள் விற்றால் எங்கள் **தமிழ் தொண்டு சிறக்கும்**

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(புஎண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மைலாப்பூர் - 600 004 தொலைபேசி: 24641314
www.alliancebook.com email: srinivasan@alliancebook.com

30.12.09-10.1.2010
சென்னைப் புத்தகக் காட்சியில்
ஸ்டால் **P22**க்கு வருகை தாருங்கள்

'அவ்வையார்' படத்தில் சிறுவனாக வரும் முருகப் பெருமான், அவ்வையிடம் 'சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்பார்... 'சுடாத பழமே போடு' என்று பதில் சொல்வார் அவ்வை!

இப்போது முருகப் பெருமான் என் முன் தோன்றி... 'சுடாத படம் வேண்டுமா, சுட்ட படம் வேண்டுமா?' என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். நான் 'சுடாத படம் கொடுங்கள்' என்று கேட்டால், முருகப் பெருமானால்கூட எனக்கு ஒரு 'சுடாத படம்' காட்ட இயலாது!

ஏனெனில் 1940களிலிருந்து 2009 முடிய தமிழில் வெளிவந்துள்ள 5000க்கும் அதிக மான படங்களில் பெரும்பான்மை யானவை பிற நாட்டுப் படங்களிலிருந்தோ, பிற மாநிலப் படங்களிலிருந்தோ அல்லது ஏற்கெனவே தமிழில் தயாரிக்கப்பட்ட படங்களிலிருந்தோ சுட்ட படங்களாகத் தான் இருக்கின்றன.

'Reynauds' என்ற ஆங்கில எழுத்தாளரின் புகழ் பெற்ற 'Soldier's Wife' என்ற நாவலைத் தழுவி, எந்தவொரு உரிமமும் பெறாமல், 'போர்வீரன் மனைவி' என்ற பெயரில் 1938ல் வெளி வந்தது. அதுதான் ஆரம்பம். பிள்ளையார் சுழி!

ஏற்கெனவே ஒரு மொழியில் வெளி வந்த படத்துக்கான உரிமத்தை அதன்

சுட்ட படம் வேணுமா?

* அசலும் - நகலும் (அஞ்சலி)









✱ ஒரிஜினல் - அவ்வை சண்முகி

சுடாத படம் வேணுமா?

தயாரிப்பாளரிடமிருந்தும் கதாசிரியரிடமிருந்தும் முறையாகப் பெற்று மற்றொரு மொழிப் படமாக உருவாக்குவதில் (Remake) தவறேதுமில்லை. அவ்வகையிலும் நூற்றுக்கணக்கான தமிழ்ப் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழில் வெற்றி பெற்றவை பிற மொழியிலும் மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஆனால், பிற நாட்டுப் படங்களையோ பிற மொழிப் படங்களையோ முறையாக உரிமம் பெறாமல், சுட்டு தமிழில் மறு ஆக்கம் செய்வது என்ன நியாயம்?!

அவ்வாறு மறு ஆக்கம் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான சுட்ட படங்களை 1957-லிருந்து என்னால் ஆதாரத்துடன் சுட்டிக்காட்ட முடியும்.

சாம்பிளுக்காக சில திரைப்படங்களைக் கொடுத்துள்ளேன். (பெட்டிச் செய்தியில் பார்க்க:)

இப்போதெல்லாம்... ''உள்ளே டிஸ்கஷன் நடந்துகொண்டிருக்கிறது. டைரக்டர், தயாரிப்பாளர்லாம் 'பிசி'யாக இருக்கிறார்கள்...'' - என்று யாராவது சொன்னால், 'உள்ளே வெளிநாட்டுப் படங்களின் டி.வி.டிக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

'பிரதாப முதலியார் சரித்திரம்' தொடங்கி இன்றுவரை, ஆயிரக்கணக்கான நாவல்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. 'குளத்தங்கரை அரசமரம்' தொடங்கி இன்று

அறந்தை மணியன்

உருவங்கள் மாறலாம் (1983)	- Oh God!
நாயகன் (1987)	- Godfather
அபூர்வ சகோதரர்கள் (1989)	- Twins
அஞ்சலி (1990)	- Annie
குணா (1991)	- Tie Me Up Tie Me Down
தேவர் மகன் (1992)	- Godfather - III
திருடா திருடா (1993)	- Butch Cassidy and Sundance Kid
மகளிர் மட்டும் (1994)	- Nine to Five
மகாநதி (1994)	- Hardcore
சதி லீலாவதி (1995)	- She Devil
அவ்வை சண்முகி (1996)	- Mrs.Doubtfire
காதல் கோட்டை (1996)	- Shop Around the Corner
அருணாச்சலம் (1997)	- Brewster's Millions
காதலா காதலா (1998)	- Too Much
அலைபாயுதே (2000)	- Barefoot in the Park
கண்டுகொண்டேன்	
கண்டுகொண்டேன் (2000)	- Pride and Prejudice
தெனாலி (2000)	- What about Bob
12B (2001)	- Sliding Doors, Run Lola Run
பஞ்சதந்திரம் (2002)	- Very Bad Things
விருமாண்டி (2004)	- Life of David Gale
நியூ (2004)	- Bug
பாய்ஸ்	- Hot Bubblegum, American Pie
அன்பே சிவம்	- Planes, Trains and Automobiles
காதல் கொண்டேன்	- Fear




... கண்டுகொண்டேன்




✱ கண்டுகொண்டேன்...

வரை இலட்சக்கணக்கான சிறுகதைகள் அச்சேறியிருக்கின்றன. இங்கு கிடைக்காத கதையா? அவற்றிலிருந்து திரைப் படம் உருவாக்கத் தகுதியான கதைகளைத் தேர்ந்தெடுத்து, அந்தக் கதாசிரியருக்கு கௌரவமான தொகை கொடுத்து உரிமை வாங்கி, முறையாகப் படமெடுக்கலாமே? அல்லது ஒரிஜினலாகக் கதையைக் கற்பனை செய்து கொள்ளலாமே?

ஏன் பிற நாட்டுப் படங்களைச் சுட்டு, கைகளையும் சுட்டுக் கொள்கிறார்கள்?





✱ ப்ரூஸ்டர்ஸ் மில்லியன்ஸ்... ... புதிதாக தமிழில்



கிரிக்கெட்டுக்கு சினிமா தேவையா?





இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கும் சினிமா நட்சத்திரங்களுக்கும் இடையே எப்போதும் நட்பு, காதல், சர்ச்சை எல்லாம் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்போது ஐ.பி.எல். உள்ளே நுழைந்து, சினிமாக்காரர்களை கிரிக்கெட் அணிகளின் முதலாளி களாக்கி அவர்களைப் பீடத்தில் அமர வைத்திருக்கிறது.

சினிமா, கிரிக்கெட் இரண்டுமே மயக்கங்களை வாரியிறைக்கும் உலகம். நடிகைகள் கிரிக்கெட் வீரர்களைத் துரத்தித் துரத்திக் காத லிக்கிறார்கள். கிரிக்கெட் வீரர் ஒருவரை பாய் ஃபிரெண்ட் ஆக்கிக் கொண்டால் அது அவர்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய சாதனை என்று கருதுகிறார்கள். மன்சூர் அலிகான் பட்டோடி - ஷர்மிளா தாகூர், கபில்தேவ் - சரிகா, விவியன் ரிச்சர்ட்ஸ் - நீனா குப்தா, ரவி சாஸ்திரி - அம்ரிதா சிங், அசாருதீன் - சங்கீதா பிஜ்லானி, சவுரவ் கங்குலி - நக்மா, யுவ்ராஜ் சிங் - கிம் சர்மா, தோனி- லக்ஷ்மிராய் என்று நீள்கிறது கிரிக்கெட் - சினிமா காதல் ஜோடிகளின் பட்டியல். சமீபத்தில்கூட, 'ஸ்ரீசாந்த் என் பாய் ஃபிரெண்ட்' என்று வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டு ஒரு நடிகை பெருமை யடித்துக்கொண்டார்.

சினிமாவுக்கு கிரிக்கெட்டின் பெரிய ரசிகர் கூட்டம் தேவையாக இருக்கிறது. அதனால்தான் ஒவர்களின் இடைவெளியில் சினிமா

விளம்பரங்கள் வருகின்றன. 'பா' அமிதாப், கமெண்ட்ரி பாக்ஸில் அமர்ந்துகொண்டு பேட்டி தருகிறார். ஹிந்தி சினிமாவால் சீந்தப்படாமல் இருந்த மந்த்ரா பேடிக்கு பெரிய திருப்புமுனையே அவர் கிரிக்கெட் தொகுப்பாளராக மாறியபோதுதான்.

ஐ.பி.எல். வரவினால், வெளியே நின்று கிரிக்கெட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சினிமாக்காரர்கள் இப்போது கிரிக்கெட் வீரர்களுக்கு அறிவுரை சொல்லும் தகுதிநிலையை அடைந்துவிட்டார்கள். அணித்தேர்வில் இருந்து ஆட்ட நுணுக்கங்கள் வரை அவர்களுடைய பங்களிப்பு நீள்கிறது. ஆனால் கொல்கத்தா அணியில் ஏற்பட்ட பல குழப்பங்களின் போது அதன் மையப்புள்ளியாக இருந்தவர் ஷாருக் கான். கவாஸ்கரை ஷாருக் கான் விமர்சித்ததையும் அணியின் தொடர் தோல்விகளால் கடுப்பாகி அவர் தென் ஆப்பிரிக்காவை விட்டுக் கிளம்பி வந்ததையும் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஒரு ஷாருக் கானும் ஷில்பா ஷெட்டியும் வந்துதான் கிரிக்கெட்டுக்கு விளக்கேற்றி வெளிச்சம் கொடுக்க வேண்டிய நிர்பந்தமும் இல்லை. ஆனால் இந்திய கிரிக்கெட்டில் நிஜம் வேறாக இருக்கிறது. தோனியும் ஹேடனும் பிளிண்டாஃபும் உள்ள ஓர் அணியைப் பிரபலப்படுத்த விஜய்யையும் நயன்தாராவையும்தான் அழைக்கிறார்கள். ஆஸ்திரேலியாவிலோ தென் ஆப்பிரிக்காவிலோ இந்த நிலை இல்லை. மைதானம், வீரர்கள், ஒளிபரப்பு... இவை தரமானதாய் அமைந்தால் வெளிப்பூச்சுக்கு அவசியமில்லை. இவற்றில் ஓட்டைகள் இருப்பதால்தான் இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கு அனாவசியங்கள் அத்தியாவசியமாக இருக்கின்றன. இந்த நிலை மேலும் நீடிக்கும் என்பதை நினைக்கும் போதுதான் இந்திய கிரிக்கெட்மீது ஒருவித சலிப்பு ஏற்படுகிறது.

- ச.ந.கண்ணன்



துணிச்சல்

கதை: காதலன் காதலியைக் கொல்லத் துடிக்கிறான். காதலி காதலனைக் கொல்லத் துடிக்கிறாள். ஏன்...? ஏன்...? அதுதான் மீதிக் கதையை எதிர்பார்ப்போடு நகர வைக்கிறது. இடையிடையே சலிப்புகள் குறுக்கிட்டாலும்; சில அனாவசியங்கள் தலையிட்டாலும்; சில முகச்சுளிப்புகள் கதையைச் சிதறடித்தாலும்.

ப்ளஸ்:

* அருண் விஜய் இப்போதெல்லாம் நடிக்க ஆரம்பித்து விட்டார்.
* ஆக்ஷன், காதல் காட்சிகளில் வெவ்வேறு அருண்!
* பத்மப்ரியாவின் தோற்றத்தை ஞாபகப்படுத்தும் ஹீரோயின் முன்ஜால், நடிப்பில் பரவாயில்லை.
* கன்னிங் கேரக்டரின் சூடு தாங்காவிட்டாலும் ஃபேஸ் எக்ஸ்பிரஷனால் சமாளிக்கிறார் முன்ஜால்.
* சிங்கமுத்துவின் காமெடியில் இன்னும் சரக்கு தேவை.

மைனஸ்:

* வில்லன் ரமன்னாவின், அரதப் பழசான வில்லத் தனம்! அவரது நடிப்பைப் பார்த்தால் ரொம்பப் பாவம்!
* வையாபுரி, எப்படா ஸ்க்ரீனை விட்டுப் போவார் என்று எரிச்சல் ஏற்படுகிறது.
* 'துரோகியே ஒழிந்து போ'தான் க்ளைமாக்ஸ் என்பது, இன்டர்வெல்லிலேயே தெரிந்துபோவது திரைக்கதை ஓட்டை.
* மியூஸிக் - பின்னணியிலும் பாடல்களிலும் தெளிவில்லை.
* டைரக்டர் ஏ.மஜித் பாவம், கதையை இழுஇழுஇழு என்று இழுத்திருக்கிறார்.

துணிச்சல் - விவேகம் பத்தாது.

- மகிமைராஜன்

பில்கேட்ஸோட பார்ட்னர் ஆகலாம் வர்றீங்களா?



✱ கோயம்புத்தூரில் நடந்த எம்.எஸ்.பி. சந்திப்பு

வெற்றியின் உயரம் 150 பாயிண்ட்ஸ்!

நீங்க கல்லூரி மாணவரா...? நவீனத் தொழில்நுட்பங்கள் பற்றித் துளியூண்டு தெரியுமா? சரளமாக ஆங்கிலம் பேச முடியுமா? ஆமாம் என்றால் உங்களை பார்ட்னராக ஆக்கிக் கொள்ள பில்கேட்ஸ் தயார்! பில்கேட்ஸுக்கு பார்ட்னரா என ஜெர்க் ஆகாதீர்கள்.

உலகின் சிறந்த 2500 மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் இறங்கியுள்ளது. அதற்கென அந்நிறுவனம் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தும் போட்டிதான் மைக்ரோசாஃப்ட் ஸ்டூடண்ட் பார்ட்னர்ஸ் ப்ரோக்ராம். (சுருக்கமா எம்.எஸ்.பி. ப்ரோக்ராம்).

தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.எஸ்.பி(MSP)க்களுள் ஒருவரான பொறியியல் மாணவி கே.இந்துஜாவின் வார்த்தைகளாகவே கேட்கலாம்.

எம்.எஸ்.பியாகத் தேர்வாவதில் என்ன பயன்?

''நிறைய இருக்குங்க. முக்கியமா மைக்ரோசாஃப்ட்ல வேலை கிடைக்க வாய்ப்பு அதிகம். அதாவது மைக்ரோசாஃப்ட் இண்டர்வியூல போக வேண்டிய கட்டங்கள் குறையும். அது மட்டுமில்லை... வேற எந்த நிறுவனமா இருந்தாலும் எம்.எஸ்.பி. என்றாலே வெல்கம் கார்ப்பெட்தான். காலேஜ்ல கிடைக்கிற

கே. இந்துஜா



கௌரவமும், மரியாதையும்... அடடா! காலரைத் தூக்கி விட்டுக்கலாம். மைக்ரோசாஃப்ட் சாஃப்ட்வேர்கள், சான்றிதழ் பயிற்சிகளும் இலவசமா கிடைக்கும். உலகம்பூரா உள்ள எம்.எஸ்.பிக்களை மீட் பண்ற வாய்ப்பும் கிடைக்கும். தமிழ்நாடு அளவுல அந்த மாதிரி ஒரு மீட்டிங் கோயம்புத்தூர்ல நடந்தது.''

எம்.எஸ்.பி. ஆகறதுக்கு ஸ்டூடண்ட்ஸ் என்ன செய்யணும்?

'www.studentpartners.com என்ற இணைய தளத்தில் முதலில் பதிவுசெய்யணும். பதிவு அங்கீகரிக்கப்பட்டால், மேற்கொண்டு என்ன செய்யணும்னு அவங்களே மின்னஞ்சல் மூலமா வழிகாட்டுவாங்க. ஸ்டூடண்ட்ஸ் அவங்க கல்லூரிக்காக இணையதளத்தில் ஒரு கிளப் ஆரம்பிக்கணும். அதற்கு டெக் கிளப்(tech club)னு பெயர். ஏற்கெனவே உங்க கல்லூரி சார்பில் யாரேனும் தொடங்கியிருந்தா புதுசா மீண்டும் தொடங்கத் தேவையில்லை... அப்புறம் ஏதோ ஒரு மைக்ரோசாஃப்ட் தொழில்நுட்பம் பற்றி 2-3 நிமிட வீடியோ பதிவுசெய்து யு-டியூப்ல போடணும். நீங்க செலக்ட் ஆகியிருந்தா விவரம் மின்னஞ்சலில் வரும். அதோடு முடியலை. நீங்க இந்தச் சவாலுக்குத் தகுதியானவர்தானா என்பதை, குறிப்பிட்ட மதிப்பெண்கள் எடுத்து நிரூபிக்கணும். இந்த முறை 150 பாயிண்ட்ஸ் ஃபிக்ஸ் செஞ்சிருந்தாங்க. என்னோட இப்போதைய வெற்றியின் உயரம் இந்த 150 பாயிண்ட்ஸ்தான்'' என்கிறார் இந்துஜா.

உங்க வெற்றியின் உயரத்தைத் தொட்டுப் பார்க்க ஒரு ட்ரையல் எடுத்துக்கலாமே... என்ன... ரெடியா ஸ்டூடண்ட்ஸ்!

தொகுப்பு: **கார்த்திகா ரஞ்சன்**

ஸ்டார்ட், காமெரா, கல்யாணம்!



வருகின்ற 2010ல் தமிழ்சினிமா உலகம் பெரும் திருமண விருந்தை எதிர்நோக்கியிருக்கிறது. டைரக்டர், நடிகர், நடிகை என இந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மட்டுமே குறைந்தது ஆறு திருமணங்கள் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஃபிலிம்மேக்கர் கம் நடிகர் தருண்கோபி, ஜானுலிங்கேஸ்வரியையும், டைரக்டர் கம் நடிகர் ஜகன்நாத், தாட்சாயனியையும், 'பசங்க' புகழ் பாண்டிராஜ் தமது உறவினர் வஸந்தியையும் திருமணம் செய்ய இருக்கின்றனர்.

இந்த லிஸ்ட்டில் கருப்பு, நவ்யா நாயர் மற்றும் ஸ்ரீதேவிகாவும் உள்ளனர். காமெடி நடிகர் கருப்பு பிசியோதெரபிஸ்ட்டான சங்கீதாவையும், நவ்யா நாயர் ஒரு கம்பெனியில் ஹைலெவல் எக்ஸிக்யூட்டிவ்வாக இருக்கும் சந்தோஷ் மேனனையும், ஸ்ரீதேவிகா பைலட்டான ரோஹித் ராமச்சந்திரனையும் மணக்க இருக்கின்றனர்.

திருமணத்துக்குப் பிறகும் நடிக்க விருப்பம் என்கின்றனர் நவ்யா நாயர், ஸ்ரீதேவிகா இருவரும். என்றாலும், ''வாழ்க்கைத் துணைவர் கூறுகின்ற இறுதி முடிவையே தேர்ந்தெடுப்போம்.'' என்கின்றனர்! இருவரும் தங்களது திருமணத்தை கேரளாவில் நடத்தத் திட்டமிட்டுள்ளனராம்! **—மணிகண்டன்**

ஸின்த்தால் சின்ன பேக்

இப்போது ரூ.6-ல்



ப்ரூஸ் லீயின் வழித்தோன்றல், ஜாக்கி சான். அவர் ப்ரூஸ் லீயிடமிருந்து சினிமாவின் சூட்சமங்களைக் கற்றுக் கொண்டவர். இருவரும் 'தி ஃபிஸ்ட் ஆஃப் ஃப்யூரி' படத்தில் ஒன்றாக நடித்திருக்கிறார்கள் என்றால் நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். படப்பிடிப்பில் நடந்த புகழ் பெற்ற சம்பவம் இது:

ப்ரூஸ் லீயின் முதல் படமான தி பிக் பாஸ், ஹாங்காங் சினிமா உலகுக்கு மறக்கமுடியாத படம். இதன் வெற்றிக்குப் பிறகுதான் ஹாங்காங் சினிமாவில் அபாரமான குங்ஃபூ சண்டைக் காட்சிகள் இருக்கும் என்கிற பெயர் கிடைத்தது.

'தி பிக் பாஸ்' வெளியானபோது ஜாக்கி சான் சினிமாவுக்குள் நுழையப் போராடிக் கொண்டிருந்தார். படம் பார்த்துவிட்டு வாழ்க்கையில் ஒருமுறையாவது ப்ரூஸ் லீயைப் பார்த்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார் ஜாக்கி சான். இன்ப அதிர்ச்சியாக ப்ரூஸ் லீயின் அடுத்த படமான 'தி ஃபிஸ்ட் ஆஃப் ஃபியூரி'யில் சண்டைக் கலைஞர்களில் ஒருவராக நடிக்கும் வாய்ப்பே கிடைத்துவிட்டது.

ச.ந.கண்ணன்

படப்பிடிப்புத் தளத்தில் ப்ரூஸ் லீயை நேரில் பார்க்க ஹாங்காங்கின் அத்தனை திரைக்கலைஞர்களும் வந்திருந்தார்கள். ப்ரூஸ் லீ படப்பிடிப்புத் தளத்துக்குள் நுழைந்தபோது வாய்க்குள் ஈ நுழைவது கூடத் தெரியாமல் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி படமாக்கப்படும்வரை லீயின் அருகில் செல்லக் கூட ஜாக்கி சானால் முடியவில்லை. க்ளைமாக்ஸ் காட்சியில் ப்ரூஸ் லீக்கும் வில்லனுக்கும் பலத்த சண்டை நடக்கும் காட்சியில் லீ வில்லனை மாடியிலிருந்து தள்ளிவிட வேண்டும். கிட்டத்தட்ட இரு பது அடி உயரத்திலிருந்து வில்லன் கீழே விழ வேண்டும். ஆபத்து அதிகம் என்பதால், வில்லனாக நடித்தவர் டூப்பைப் பயன்படுத்தச் சொல்லிவிட்டார். 'யார் குதிக்கப் போறீங்க?' என்று ப்ரூஸ் லீயே முன் வந்து கேட்டார். பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் பயன்படுத்தாமல் குதிக்க வேண்டும் என்பதால் ஸ்டண்ட் மாஸ்டரும் அவருடைய சீனியர் ஸ்டண்ட்மென்களும் மறுத்தனர்.



* ப்ரூஸ் லீ



* ஜாக்கி சான்

யார் குதிக்கப் போறீங்க..?

'சார் நான் பண்றேன்' என்று முன்வந்தார் ஜாக்கி சான். ஸ்டண்ட் மாஸ்டர் கடுப்பானார். 'என்ன விளையாடுறியா? கீழே தவறி விழுந்தா ஒரு எலும்புகூட மிஞ்சாது. உன் ஆர்வக் கோளாறை இங்கே காட்டாதே. அப்புறம் நான்தான் நாலுபேருக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும்' என்று சீறினார். ஜாக்கி சான் பொறுமையாகப் பதில் சொன்னார்: 'மத்த ஸ்டண்ட் மேன்களுக்குக் குடும்பம் இருக்கு. நான் தனிமரம். எனக்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டால்கூட கேட்க நாதி கிடையாது (அப்போது ஜாக்கி சானின் பெற்றோர் ஆஸ்திரேலியாவில் இருந்தார்கள்.) ப்ரூஸ் லீ மனசுல இடம்பிடிக்க இதை விட நல்ல வாய்ப்பு கிடைக்காது சார்.'

விவரம் அறிந்த ப்ரூஸ் லீ, ஜாக்கி சானுக்கு ஆதரவு தெரிவித்தார். ''வில்லனுடைய முக ஜாடையும் உடல்வாகும் ஜாக்கி சானுக்கு இருக்கின்றன, மேலும் தைரியமாகப் பேசும் இளைஞனை ஊக்குவிக்க வேண்டும்'' என்றார். ஜாக்கி சானுக்கு சந்தோஷம் கொள்ளவில்லை.

காட்சி எடுக்கப்படும் முன், ஜாக்கி சானின் அருகே வந்து 'குட் லக்' சொல்லி வாழ்த்தினார் ப்ரூஸ் லீ. 'ரோலிங்' குரல் கொடுத்தார் இயக்குநர்.

குதித்து விட்டார் சான்! கண் விழித்து மேலே பார்த்தார். அவரைச் சுற்றி நின்று கொண்டிருந்தவர்களின் நடுவே ப்ரூஸ் லீ இருந்தார். அவர் கண்களில் மகிழ்ச்சி! அவசர அவசரமாக எழுந்தார் ஜாக்கி சான். 'வெரி குட். கீப் இட் அப்' என்று ஜாக்கி சானின் முதுகில் தட்டிக் கொடுத்தார் லீ. அந்தத் துணிவிலிருந்து துவங்கிய வெற்றிப் பயணம் தொடர்ந்து ஏறுமுகம்தான் என்று இந்தச் சம்பவத்தைச் சொல்லி இன்றைக்கும் பெருமைப்பட்டுக் கொள்கிறார் ஜாக்கி சான்!



சம்பூர்ணம் ஒவ்வொரு பாட்டிலாய் எடுத்து வைத்தபடி புனிதாவிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

''இதோ பார்... புனிதா...! இது புளிக்காய்ச்சல். நல்லெண்ணெயை விட்டு கண்டக் காய்ச்சியிருக்கேன். ஒரு மாசம் வெச்சிருந்தாலும் கெட்டுப்போகாது. அரை ஸ்பூன் போட்டுக்கிட்டாலே போதும். ஒரு தட்டு சாதத்தைப் பிசையலாம். ஆனா... பாட்டிலுக்குள்ளே கொஞ்சம் ஈரம் போனாலும் போதும்; அடுத்தநாளே ஒரு மாதிரி வாசம் வந்துடும். ஈரம் போகாமே பார்த்துக்கணும். பொற்கொடிகிட்டே சொல்லிடு...''



ராஜேஷ்குமார்

''சரி... ஆன்ட்டி....!''

''அப்புறம்... இது பூண்டு வெங்காயம், இது மாங்காய்த் தொக்கு, இது இஞ்சித் துவையல், அப்புறம் இந்த பாலீதின் பொட்டலங்களில் இருக்கிறதெல்லாம் ரசப்பொடி, மிளகாய்ப் பொடி, கொத்து மல்லிப்பொடி, அந்த ப்ளாஸ்டிக் பையில் கொஞ்சம் சீடை, கொஞ்சம் முறுக்கு, தேன்குழல் இருக்கு. எல்லாத்தையும் சிரமம் பார்க்காமே பொற்கொடிகிட்டே கொண்டு போய்க் குடுத்துடு. அப்படியே... நீயும் உனக்கு வேண்டியதை எடுத்துக்கோம்மா... பொற்கொடி மாதிரி நீயும் எனக்கு ஒரு பொண்ணுதான்.''

''சரி, ஆன்ட்டி!'' புனிதா தலையாட்டிக்கொண்டு இருக்கும்போதே சம்பூர்ணத்தின் கணவர் பொன்னுரங்கம் உள்ளே வந்தார். ஒரு கிராமத்துப் பெரியவருக்குரிய தோற்றம். சற்றே முரட்டுத்தனத்தை வெளிப்படுத்தும் முகம், நரை கிராப், மேல் உதட்டை மறைக்கிற அளவுக்கு மீசை, காதுகளில் பவளக்



நீலிகோணாம்பாளையமும் நியூஜெர்ஸியும்

கடுக்கன்கள், கை வைத்த பனியன், கதர் வேஷ்டி.

''என்னம்மா புனிதா! அப்பாவுக்கு இப்போ எப்படியிருக்கு?''

''ஒரு பிரச்னையும் இல்ல அங்கிள்... அப்பாவுக்கு வந்தது ஒரு மைல்ட் ஹார்ட் அட்டாக்தானாம். அம்மாதான் பயந்து போய் ஆர்ப்பாட்டம் பண்ணிட்டாங்க. நானும் என்னவோ ஏதோன்னு நியூஜெர்ஸியிலிருந்து புறப்பட்டு வந்துட்டேன். நேத்திக்குத்தான் புறப்பட்டு வந்தமாதிரி இருக்கு. பதினைந்துநாள் ஓடிப் போச்சு. நாளைக்கு ஃப்ளைட் ஏற வேண்டியது தான்...!''

பொன்னுரங்கம் பெருமூச்சொன்றை விட்டார்.

''வெளிநாட்டுக்குப் படிக்க அனுப்பி வெச்சாலே இப்படித்தாம்மா. ஒரு நல்லது கெட்டதுக்கு உடனே புறப்பட்டு வர முடியாது. எம் பொண்ணு பொற்கொடியை அமெரிக்காவுக்கெல்லாம் அனுப்பிப் படிக்க வெக்க எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டம் இல்லேம்மா. ஏதோ இந்த நீலிகோணாம்பாளையம் கிராமத்திலிருந்து நீயும் அமெரிக்காவுக்குப் படிக்கப் போனதால தைரியமாய் அனுப்பி வெச்சேன்.''

புனிதா சிரித்தாள். ''என்ன அங்கிள்... இப்படி சலிச்சுக்கறீங்க? பொற்கொடி அங்கே ரொம்ப நல்லா சந்தோஷமாய் இருக்கா. போற போக்கைப் பார்த்தா பொற்கொடி யூனிவர்ஸிடி ரேங்க் ஹோல்டரா வருவா போலிருக்கு...''

''எப்படியோ படிச்சு நல்லபடியாய் ஊர் வந்து சேர்ந்துட்டா போதும்மா! இனி ஒரு மூணு மாசத்துல படிப்பு முடிஞ்சுடுமாம்மா?''

''முடிஞ்சுடும் அங்கிள்! இது பிப்ரவரி. மே மாசம் கடைசியில் நானும்

பொற்கொடியும் இங்கே இருப்போம்!'' புனிதா பேசிக் கொண்டிருக்கும்போதே, வாசற் பக்கம் ஏதோ குரல் கேட்கவே பொன்னுரங்கம் நகர்ந்தார்.

சம்பூர்ணம் தான் தயாரித்த உணவு அயிட்டங்களை ஒரு கேரி பேக்கில் போட்டுக் கொடுத்தாள்.

''கஷ்டப்பட்டு செஞ்சது... எதையும் வீண் பண்ணிடாதீங்க.''

''வீண் பண்ண மாட்டோம் ஆன்ட்டி. ஏன்னா இது எங்களுக்குப் புதையல் மாதிரி!'' சொன்ன புனிதா, வாசல் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டு சட்டென்று குரலைத் தாழ்த்தினாள்.

''ஆன்ட்டி! அங்கிள்... இப்போ உள்ளே வருவாரா?

''ஏன்... எதுக்குடி கேட்கிறே?''

''உங்ககிட்டே ஒரு ரெண்டு நிமிஷம் பேசணும்.''

''பேசு!''

''ஆன்ட்டி! விஷயம் கொஞ்சம் விவகாரமானது.''

சம்பூர்ணம் முகம் மாறினாள். ''என்ன புனிதா! ஏன் என்னவோ மாதிரி பேசறே. உடம்பு சரியில்லாத உன்னோட அப்பாவை நினைச்சுக் கவலைப்படறியா?''

''இல்ல ஆன்ட்டி! நான் பொற்கொடியைப் பற்றி கவலைப்படறேன்!''

''புனிதா! நீ என்னம்மா சொல்றே?''

''ஆன்ட்டி! இதை ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கணும். அப்படி சொல்லியிருந்தா பொற்கொடிக்கு நான் விரோதமாகியிருப்பேன். இனியும் நான் சொல்லாமே இருந்தா அது உங்களுக்கும் எனக்கும் நடுவில் ஒரு பெரிய விரோதத்தை வளர்த்து விட்டிருமோன்னு பயப்படறேன். அதான் இன்னிக்கு உங்ககிட்டே சொல்றதாய் முடிவு பண்ணிட்டேன்.''



சம்பூர்ணத்தின் முகத்தில் இப்போது ரத்தமே இல்லை

''நீ...நீ... என்ன சொல்லப் போறே?''

''ஆன்ட்டி! பொற்கொடி தன்னோட படிக்கிற ஃப்ரெட்ரிக் என்கிற ஓர் அமெரிக்க இளைஞனை லவ் பண்றா. மொதல்ல விஷயம் யார்க்கும் தெரியாமே இருந்தது. இப்போ யூனிவர்ஸிடியில் பாதிப் பேர்க்கு தெரிஞ்சிடுச்சு. இது தப்புன்னு நான் அவளுக்கு எடுத்துச் சொன்னபோது அவ அதைக் காதிலேயே போட்டுக்கலை. உன்னோட அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சா என்னாறதுன்னு கேட்டேன். ஒண்ணும் ஆகாது. மொதல்ல கத்துவாங்க. அப்புறம் மிரட்டுவாங்க. அப்புறம் அழு

வயதானவர் இரு மழலைக்குச் சமம் - **ஷேக்ஸ்பியர்**

ஒரு குழி 10,000 ரூபாய்

கன்னத்தில் குழி விழும்படி சிரித்தால் அழகுதான்! ஹிந்தியில் ப்ரீத்தி ஜிந்தா, தமிழில் லைலான்னு இவங்க கன்னக்குழியில் விழுந்த ரசிகர்கள் ஏராளம். கன்னத்தில் குழி விழுவதை காஸ்மெடிக் சர்ஜரி மூலம் ஆபரேஷன் செய்து செயற்கையாக வரவழைக்கத் துவங்கி விட்டனர். ஆபரேஷன் முடிந்த பதினான்காவது நாளில் கன்னத்தில் குழி தெரியுமாம். செலவு பத்தாயிரம்தாங்க!

- ராஜிராதா

வாங்க. கடைசியில் கெஞ்சிப் பார்த்துட்டு எனக்கும் ஃப்ரெட்ரிக்குக்கும் கல்யாணத்தைப் பண்ணி வெச்சுடுவாங்க! எத்தனையோ ஃபேமிலியில் நடந்ததுதான் என்னோட ஃபேமிலியிலும் நடக்கப் போகுதுன்னு அலட்சியமா சொல்றா.''

சம்பூர்ணம் அதிர்ந்து போனவளாய் ஒரு கையை வாய்க்கும் இன்னொரு கையை நெஞ்சுக்கும் கொடுத்தாள்.

''அடிப்பாவி! உன்னை இதுக்குத்தானா அமெரிக்காவுக்குப் படிக்க அனுப்பினோம்? அந்த மனுஷனுக்குத் தெரிஞ்சா ரெண்டு துண்டாய் வெட்டிப் போட்டுடுவாரே! நான் என்ன பண்ணுவேன்?''

''ஆன்ட்டி! டென்ஷன்படாதீங்க. இன்னிக்கு இராத்திரி பொற்கொடி உங்ககிட்டே பேசும் போது இதமா புத்திமதி சொல்லுங்க. அவளை மிரட்டிப் பணிய வைக்க முடியாது. அங்கிளுக்குத் தெரியாமலேயே இந்த விஷயத்தைக் கையாளுங்க.''

சம்பூர்ணத்தின் கண்களை அழுகை கிறியது.

''நா...நா... சொன்னா... அவ... கேப்பாளா...?''

''அது நீங்க பேசற விதத்தைப் பொறுத்து இருக்கு. மறுபடியும் சொல்றேன் ஆன்ட்டி! அவளை மிரட்டிப் பணிய வைக்க முடியாது. கொஞ்சம் கெஞ்சல், கொஞ்சம் அழுகை, இந்த அஸ்திரங்கள்தான் அவளை வழிக்குக் கொண்டு வரும். அங்கிள் வர்றார். நான் கிளம்பறேன் ஆன்ட்டி! சொன்னது ஞாபகம் இருக்கட்டும்.''

புனிதா கேரி பேக்கை எடுத்துக்கொண்டு கிளம்பி விட, சம்பூர்ணம் பக்கத்தில் இருந்த நாற்காலிக்குப் போய் ஜடமாய்ச் சாய்ந்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் நியூஜெர்ஸியிலிருந்து பொற்கொடி ஃபோன் செய்தபோது, பொன்னுரங்கம் வீட்டில் இல்லை. சம்பூர்ணம் மட்டும் இருந்தாள். வழக்கமாய் அந்த நேரத்துக்கு ஃபோன் வரும்போது சம்பூர்ணம் ஒரு சின்னப் பெண்ணைப் போல் ஓடிப்போய் ரிஸீவரை எடுப்பாள். இன்றைக்கு ரிஸீவரை எடுக்கும்போதே கையும் மனமும் நடுங்கின.

''ஹ...ஹலோ...!'' சொன்னபோது குரலும் நடுங்கியது. மறுமுனையில் பொற்கொடி உற்சாகமாய்க் குரல் கொடுத்தாள்.

''என்னம்மா! ஏதாவது கைவேலையாய் இருந்தியா? ரிஸீவரை எடுக்க இவ்வளவு

உலகில் எதுவுமே நிலையானதல்ல; மரணமும் வரிகளும் தவிர.
- பெஞ்சமின் பிராங்க்ளின்

நேரம்?''

''அது...அது...வந்து...'' மேற்கொண்டு சம்பூர்ணம் பேச முடியாமல் அப்படியே வாயடைத்தவளாய் நின்றாள்.


''அம்மா!''

''ம்...''

''உனக்கு இன்னிக்கு என்னாச்சு? ரிஸீவரை எடுத்ததுமே ஸ்விட்ச் போட்ட மாதிரி ரெண்டு மூணு 'பேரா க்ராஃப்' பேசுவியே. அதெல்லாம் என்னாச்சு? மறந்து போயிட்டதா?''

''.........''

''அம்மா! என்ன பேச்சையே காணோம்? வீட்ல யாருக்காவது உடம்பு சரியில்லையா?''



குக்கூ...

'பழம் போட்டால் கூழ் எடுக்கலாம்'
எனும் அளவு நெரிசலுள்ள பேருந்தில்
நான் தொட்ட பிடி கம்பி இடத்தையே
நீயும் தொட்டாய்;
பேருந்தில் வெப்பம் கடத்துகிற காற்று
என் அன்பையும் கடத்துவதாக!

- பா. சத்தியமோகன்

''உடம்புக்கு எந்தக் கேடும் கிடையாது. எல்லாம் பாழாய்ப் போன இந்த மனசுக்குத்தான்.''

''ஏம்மா! இன்னைக்கு இப்படி பேசறே?''

''பேசற மாதிரி பண்ணிட்டியே...''

''அம்மா...! எனக்குப் புரியற மாதிரி பேசு.''

''நீ அமெரிக்காவுக்குப் படிக்கப் போனியா. இல்லை... மாப்பிள்ளை பார்க்கப் போனியா?''

''அ...ம்...மா...!''

''நீ அங்கே யாரையோ விரும்பறியாமே. உண்மையா?''

''ஓ...! அந்த ஓட்டைவாய்க்காரி புனிதா வத்தி வெச்சுட்டாளா?''

''அவளைத் திட்டறது இருக்கட்டும். அவ சொன்னது உண்மையா.?''

''உண்மைதான்! சமயம் வரும்போது நானே சொல்லலாம்னு இருந்தேன். அம்மா! அவர் நான் படிக்கிற யூனிவர்சிடியில் தான் ஸ்காலரா வொர்க் பண்றார். பேரு ஃப்ரெட்ரிக். அவரோட அப்பா இந்திய வம்சாவழியில் வந்தவர். பேரு ஹென்றி ராக்கேஷ். யூனிவர்ஸிடியின் பதினொரு செனட் மெம்பர்களில் அவரும் ஒருத்தர். ஃப்ரெட்ரிக் ரொம்பவும் நல்ல டைப். நம்ம இந்தியக் கலாசாரத்தின் கோட்பாடுகள், பழக்கவழக்கங்கள் எல்லாமே அவர்க்கு ரொம்பவும் பிடிக்...''

''நிறுத்தடி! உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா இப்படி பேசிக்கிட்டு இருப்பே! உங்கப்பாவைப் பற்றின பயம் உன்னோட மனசுக்குள்ளே கொஞ்சமாவது இருக்கா?''

''அம்மா! இதுல பயப்பட என்ன இருக்கு! அப்பா என்ன சிங்கமா புலியா? அவரைப் பார்த்துப் பயப்படறதுக்கு! நான் படிப்பை முடிச்சதும் எப்படியும் எனக்குக் கல்யாணம் பண்ணி வெக்கப் போறீங்க. நான் ஒருத்தரைக் கைகாட்டி அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொன்னா,

அவர் எனக்குக் கணவனாய் வரத் தகுதியுள்ளவர் தானான்னு ஜட்ஜ் பண்ணுங்க. உங்களுக்குப் பிடிச்சிருந்தா கல்யாணம் பண்ணி வையுங்க. பிடிக்கலைன்னா ஏன் பிடிக்கலைன்னு சொல்லுங்க. உங்களுக்குப் பிடிக்கிற மாதிரி அவரை மாத்தறேன்.''

''நிறுத்தடி! நீ மொதல்ல படிப்பை முடிச்சுட்டு ஊர் வந்து சேர். அதுக்கப்புறம் உன்னோட கல்யாணத்தைப் பத்திப் பேசிக்கலாம். இப்போதைக்கு நான் உங்கப்பாகிட்டே எதைப் பற்றியும் சொல்லப் போறதில்லை. நீயும் சொல்லிடாதே!''

''என்னிக்கவாது ஒருநாள் சொல்லித் தானேயாகணும்?''

''எப்ப சொல்லணுமோ அப்ப சொல்லிக்கலாம். அதுவரைக்கும் உன்னோட பெரிய மனுஷத்தனத்தையெல்லாம் மூட்டை கட்டி வெச்சுட்டு படிப்பை முடிச்சுட்டு வா'' கோபம் கொப்பளிக்கச் சொன்ன சம்பூர்ணம், ரிஸீவரை வைத்து விட்டு அனல் தருகிற உடம்போடு திரும்பினாள்.

உறைந்து போனாள்.

பொன்னுரங்கம் கண்களில் சிவப்பு பரவ நின்றிருந்தார்.

''ஃபோன் யார்கிட்டயிருந்து?''

சம்பூர்ணத்துக்கு நாக்கு உலர்ந்து போயிருக்க, பேச்சு தடுமாற்றமாய் வந்தது.

''அது வந்துங்க... நம்ம பொற்கொடி தாங்க.''



''அங்கே அவ யாரையோ லவ் பண்றா போலிருக்கே?''

''பொற்கொடிகிட்டயிருந்து ஃபோன் வந்தா நீ சந்தோஷமாத்தானே இருப்பே. ஆனா நீ சந்தோஷமாயில்லையே!''

''அ...அ... அவளுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லையாம்.''

''பொய் பேச ஆரம்பிச்சுட்டே. இனி உன்னை நிறுத்த முடியாது. உம் பொண்ணு ஃபோன் பண்ணிப் பேச ஆரம்பிக்கும்போதே நான் வந்துட்டேன். அங்கே அவ யாரையோ லவ் பண்றா போலிருக்கே?''

சம்பூர்ணத்தின் கண்களில் நீர் சிறியது.

''ஆ...ஆ... ஆமாங்க. அந்த...''

பொன்னுரங்கம் குறுக்கிட்டார்.

''பொற்கொடி நாம பெத்த பொண்ணு. இப்படி கெட்ட வார்த்தையில் திட்டாதே. தப்பு பண்ணினது நாம. ஒரே பொண்ணு. அமெரிக்காவுக்குப் போய்ப் படிச்சுட்டு வரட்டும்னு ஆசைப்பட்டோம். அவ என்னடான்னா படிச்சதோடு மட்டும் இல்லாமே ஒரு மாப்பிள்ளையையும் பார்த்துகிட்டா. எல்லாமே வயசுக் கோளாறு.''


சம்பூர்ணம் சட்டென்று உடைந்து போய் கணவரின் கால்களில் விழுந்து அழுதாள். ''பெத்த வயிறு பத்தி எரியற மாதிரி பண்ணிட்டாளே...! இந்த விஷயம் நம்ம சாதிசனத்துக்குத் தெரிஞ்சா எவ்வளவு மானச்சேதம்? சொந்தத்துல எவ்வளவோ நல்லது கெட்டது வரும். எதுக்கும் போய் சபையில் உட்கார முடியாதே?''

அழுது புலம்பிய மனைவியை இரண்டு கைகளாலும் பற்றித் தூக்கி நிறுத்திய பொன்னுரங்கம், தீர்க்கமாகப் பேச ஆரம்பித்தார்.

(அடுத்த வாரம் முடியும்)

''மேக்-அப்'ன்னு சொன்னதும் அது என்னமோ சினிமாக்காரங்களுக்கும், மேல்தட்டுப் பெண்களுக்கும் மட்டுமேயான ஒரு சமாசாரம் என்பது போல பலர் நினைச்சுக்கறாங்க. அது தப்பு. மனித வாழ்க்கையில் எல்லோருமே மேக்-அப் போட்டுக்கறவங்கதான்'' என்று பொரிந்து தள்ளுகிறார் சுந்தரமூர்த்தி. சினிமா உலகத்தின் ஒப்பனை சாம்பியன். இவருடைய நாற்பதாண்டு அனுபவம், ரூஜ், பான்கேக், லிப்ஸ்டிக் சாதிக்காததையும் சாதிக்க வல்லது.

''காலையில தூங்கி எழுந்திரிச்சதும் நாம பல் துலக்கி, முகம் கழுவறமே, குளிச்சிட்டு வந்து நெத்தியில பொட்டு வெச்சுக்கறமே... அதெல்லாம் என்னங்க? மேக்-அப் தானே? அவ்வளவு ஏன்? பிறந்த குழந்தையைக் குளிப்பாட்டி பவுடர் போடறோம்; பொட்டு வைக்கிறோம்; கன்னத்துல திருஷ்டிப் பொட்டு வைக்கிறோம். செத்தப்புறம்




* சுந்தரமூர்த்தி

கூட சடலத்தைக் குளிப்பாட்டி, புதுத் துணி போர்த்தி, ...''

''ஸார் போதும்...'' என்ற கெஞ்சலுடன் வேறு கேள்விக்கு நாம் டிராக் மாற,

''சினிமாவில் மேக்-அப்னா இல்லாததை இருக்கிறா மாதிரிக் காட்டுவது; இருக்கிறதை இல்லாத மாதிரிக் காட்டுவது. அவ்வளவு தாங்க. அதுல கொஞ்சம் டீப்பா போய், மேக்-அப் போடறது நடிகர், நடிகையோட அழகை அதிகரிக்கறதுக்கா இல்லை கேரக்டருக்கு ஏத்தபடியான்னு கேட்டா, என் பதில், 'இரண்டுக்காகவும்தான்; இரண்டும் முகத்தோட இரண்டு கண்கள் மாதிரி'ன்னு சொல்லுவேன்'' என்கிறார்.

''நாடகத்துல நடிக்கும்போது போடற மேக்-அப்புக்கும், சினிமாவுல நடிக்கிறபோது போடற மேக்-அப்புக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. மேடையில ஒரு குறிப்பிட்ட அளவு வெளிச்சம் பர்மனெண்ட்டா இருக்கும். பின்னாடி உட்கார்ந்து நாடகம் பார்க்கிற ரசிகர்களுக்கும், நடிக்கிறவங்க முகம் பளிச்சுன்னு தெரியணும்ன்னு கொஞ்சம் வெளுப்பா மேக்-அப் போடுவாங்க. ஆனால், சினிமாவுல அதுக்கெல்லாம் அவசியமில்லை. ஷாட்டுக்கு,





மேக்கப் இல்லாத

ஷாட் எப்படி தேவையோ அப்படி ஸ்பெஷலா லைட்டிங் செஞ்சுக்கலாம்.

''பாலசந்தர் சாரோட மரோசரித்ரா கறுப்பு வெள்ளை படம். ஹீரோயின் சரிதாவும் கறுப்பு. ஆனா அவங்களுக்கு இளமையான கல்லூரி மாணவி ரோல். அதனால, அவங்களை ரொம்பவும் அழகா தெரியும்படியா மேக்-அப் பண்ணினேன். ஆனால், தப்புத் தாளங்கள் படத்துல அவங்களுக்கு விலை மாது ரோல். அப்போ, அந்த

கேரக்டருக்கு ஏத்தபடி மேக்-அப் போட வேண்டி இருந்தது.

"பாலு மகேந்திரா மாதிரி ஒன்றிரண்டு டைரக்டர்கள், 'மேக்-அப்பே வேணாம்'ன்னு சொல்லுவாங்க. நான் பாலு மகேந்திராவிடம், 'அதெப்படி சார்! மேக்-அப்பே வேணாம்னு சொல்றீங்க. மேக்-அப் போட்டிருக்கறதே துளியும் தெரியாம ரொம்ப இயற்கையா இருக்கும் அளவுக்கு மேக்-அப் போடணும்; அப்போதான் நல்லா இருக்கும்'ன்னு சொல்லுவேன். சமீபத்துல வந்த 'சுப்ரமணியபுரம்', 'நாடோடிகள்' மாதிரியான படங்களில் கூட மேக்-அப் போட்டிருக்கறதே தெரியாத மாதிரி நேச்சுரலா மேக்-அப் போட்டது ரொம்ப நல்லா இருந்திச்சு.

"டைரக்டர் மணிரத்னத்துக்கு, லைட்டா மேக்-அப் போட்டாத்தான் பிடிக்கும், ஆர்டிஸ்ட்டோட நேச்சுரல் ஸ்கின்டோன் அப்படியே இருக்கும்படியா மேக்-அப் போடச் சொல்லுவாரு.

"ரஜினிக்கு முதன் முதலில் மேக்-அப் டெஸ்டுக்கு மேக்-அப் போட்டது நான்தான். ரஜினிக்குப் போட்ட மேக்-அப்களில் எனக்கு மிகவும் பிடிச்சது ஸ்ரீ ராகவேந்திரர் படத்துக்குப் போட்டதுதான். இளைய வயதில் ஆரம்பித்து மகான் ஆகிறதுவரை படிப்படியா மேக்-அப் ஸ்டைல் மாறிக் கிட்டே இருக்கும். அதுக்கு அடுத்த படியா, பாட்ஷா படத்துல அவருக்கு நான் போட்ட மேக்-அப் பிடிச்சிருந்தது."



வாழ்க்கையே இல்லை!



சந்திப்பு :

எஸ். சந்திரமௌலி

கொடைக்கானல் போண்டா!



"பொண்ணுக்குக் கோபம் வந்தா பேயாட்டம் ஆடிடுவா..."

"வெரிகுட், உங்களுக்குச் சொந்தமா எத்தனை புளிய மரம் இருக்கு?"

- லெ.நா.சிவகுமார்



"உங்க பையன் சின்னவனா இருந்தப்ப எல்லாரையும் கெட்ட வார்த்தையாலயே திட்டிக்கிட்டிருப்பானே... இப்ப என்ன பண்ணிக்கிட்டிருக்கான்?"

"ஒரு கட்சியில இணைஞ்சு பெரிய மேடைப் பேச்சாளனா இருக்கான்!"

- கே.தண்டபாணி

"நீங்க சைக்கிள் கடையில வேலை செய்றீங்களே உங்க முதலாளி எப்படி?"

"நல்லா பெண்டு எடுப்பாரு."

- வி.சாரதி டேச்சு







"சூடா மைசூர் போண்டா இருக்கா?"

"கொடைக்கானல் போண்டாதான் இருக்கு!"

"அது எப்படி இருக்கும்?"

"ஆறிப்போய் ஜில்லுன்னு இருக்கும்!"

- அ.பேச்சியப்பன்

"இந்த ஜனங்க நல்லது கெட்டது தெரியாத ஜென்மங்கய்யா!"

"உண்மைதான் தலைவரே... அது தெரிஞ்சிருந்தா உங்களுக்கு வோட்டுப் போட்டு ஜெயிக்க வைச்சிருப்பாங்களா?"

- கே.தண்டபாணி



"மயிலுக்கும் கிளிக்கும் என்ன வித்தியாசம்?"

"மயில் தேசியப் பறவை, கிளி ஜோசியப் பறவை!"

- ஜி.ராஜா



குழந்தையின் பாடம்

வகுப்பில் முதலாவதாக
வருவதற்கான சூட்சுமங்களை
விளக்கிக் கொண்டிருக்கிறேன்
மடியிலமர்ந்திருக்கும் எல்கேஜிக்கு.
முள்வேலியில்
குதித்துக் கொண்டிருக்கும்
இந்த மழைக்கு வலிக்காதா
என்கிறாள்
பால்யம் தொலைத்த
எனது மொழியின் சிரசு
சுக்கலாய் வெடித்துச் சிதற...

-பா.உஷாராணி





அம்மாவின் கடவுள்

அம்மாவின் கடவுளுக்கு வேறு முகம்;
பூஜை நாளில் மஞ்சளால் பிள்ளையார் பிடித்துக்
கும்பிடச் சொல்வாள்:
நோன்பு அன்று தானே ச்ரத்தையாய் வரைந்த
வரலக்ஷ்மிக்கு அமுது படைப்பாள்
திவச நாளன்று முன்னோர்கள் தெய்வமாய் வந்து
சாப்பிடக் காத்திருப்பாள்.
என்னைப் பூஜையறையில் நிறுத்தி தினமும்
ஸ்வாமி கும்பிடச் சொல்வாள்.
மாட்டியிருக்கும் அத்தனை படங்களில் எது ஸ்வாமி
என்ற என் கேள்விக்கு - அவள் பதில்
'கேள்விகள் கேட்காமல் கும்பிடு' - பிறகு
நான் வளர்ந்து கடவுளை அறிந்து கொண்டபோது -
எனது கடவுளுக்கு இருந்தது அம்மாவின் முகம்!

-ரமேஷ் அனந்தபத்மநாபன்

கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

திண்டுக்கல் மாவட்டத்து கற்கண்டு வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...

- திக்கெட்டும் புகழ்பரப்பும் திண்டுக்கல் ஸ்பெஷாலிட்டி என்னென்ன?
- மனசை ரிலாக்ஸ் ஆக்கும் மகத்துவமான இடம் எது?
- குளுகுளு இடம் பற்றிய சூடான தகவல் எழுதலாமே...
- நெஞ்சை நிமிர வைக்கும் உங்க ஊர் பெருமை என்ன?
- மக்கள் மனத்தில் குந்திக் கொண்ட வி.ஐ.பி. யாரு?
- திண்டுக்கல் பூட்டு மாதிரி புத்தியை லாக் செய்ய எழுத்தாளர்கள் என்ன தருவீங்க?
- முட்டுக்கட்டை போடும் பிரச்னைகள் என்ன?
- வளம் சேர்ப்பதைப் புகழவும்... துயர் தருவதைக் களையவும்... இது நல்ல வாய்ப்பென்று பகிரங்கமா எழுதுங்க...

வாசகர்களே...

நீங்கதான் ரொம்ப முக்கியம். உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் திண்டுக்கல் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கே!



ஆமாம்! உங்கள் திண்டுக்கல் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திண்டுக்கல் மாவட்டத்தின்.... பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

  ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

  சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

  நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ் என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

வர்றோம்!

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 11.01.2010

கலக்க வருதுப்பா கல்கி
திண்டுக்கல் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

கிரிஜா ஆச்சர்யத்துடன் திகைத்து நின்றாள். சூர்யா பதற்றத்தில் இருந்தான்.

''எக்ஸ்கியூஸ் மீ... இங்க தேன்மொழின்னு யாராவது அட்மிட் ஆகியிருக்காங்களா?''

கிரிஜா அவன் கண்களைப் பார்த்தாள். அதில் ஒப்புமை இல்லாத உண்மை சுடர் விட்டது. மனத்தில் உயர்ந்த எண்ணங்கள் தொடர்ந்து லயித்தால் மட்டுமே ஒளியாக அது கண்களினுள் சுடர்விடும்.

கிரிஜா சுதாரித்தாள்

''அன்னிக்கு மேட்டுப்பாளையம் ரயில்வே ஸ்டேஷன்ல...'' புருவங்களைச் சுருக்கியபடி அவன் முன் விரலை நீட்டினாள்.

''ஓ... நீங்களும் அங்கே இருந்தீங்களா?''

கத்தினான்னு விலாவாரியா சொல்லுங்க''

''சாரி... உங்களைப் பத்தி நான் தெரிஞ்சுக்கலாமா..?''

''நான் அவளோட ஃப்ரெண்ட் கிரிஜா. ஐயாம் ரன்னிங் அன் அட்வர்டைஸிங் ஏஜென்ஸி''

விசிட்டிங் கார்டை எடுத்து அவள் நீட்ட, சூர்யா தன்னுடைய கார்டையும் கொடுத்தான்.

கிரிஜா கார்டைப் பார்த்தபடி, ''ஓ... ஸ்டெம்செல்ஸ்ல இருக்கீங்களா... ஃபைன்...'' எனத் தனக்குத்தானே தலையசைத்துக்கொண்டே, சட்டெனத் தலை நிமிர்த்தி, ''ம்.. சொல்லுங்க சூர்யா, மான்குட்டி மாதிரி துள்ளிக்கிட்டிருந்தவ... இப்ப அப்படியே பூனைக்குட்டியா சுருண்டுட்டா... எதுக்காக அன்னிக்கு அவ அப்படி

பகல் மீன்கள்

ஒரு நிமிடம் நடந்துவிட்ட தவறுக்காக தனக்குத்தானே வருந்துபவனைப் போல நெற்றியில் கைவைத்து, பின் ''ஸ்ஸ்... ப்ச்... இப்ப எப்படி இருக்காங்க?''

''ஷி இஸ் ஆல்ரைட்... ஆனா உங்களை இப்ப நான் உள்ளே விடமுடியாது'' எனக் கண்டிப்பாகக் கூறிய கிரிஜா... சட்டென உள்ளே எட்டிப்பார்த்துவிட்டு.. ''இங்கே வாங்க'' என வேகமாக லாபியில் நடந்தாள்.

சற்றொரு நிமிடம் அவளையே பார்த்தான் சூர்யா.

கேன்டீனில் கூட்டம் குறைவாக இருந்தது. காலியாக இருந்த நாற்காலியில் இருவரும் எதிரெதிரே அமர்ந்தனர்.

''முதல்ல நீங்க யாரு..? எதுக்காக அன்னிக்கு அவ உங்களைப் பார்த்து அப்படி கத்தினா? உங்க ரெண்டு பேருக்குள்ள அப்படி என்ன பிரச்னை. அவளுக்கும் உங்களுக்கும் எப்படி பழக்கம்?''

சூர்யா அவளை விரக்தியுடன் பார்த்தாலும், அவனது மூளை ஆயிரம் மைல் வேகத்தில் உள்ளுக்குள் சுழன்றது. பழைய ஃபிலிம் ரோல்களில் அவசர அவசரமாக சில காட்சிகளைக் கத்தரித்து, சில காட்சிகளைச் சேர்த்து ஒரு காதல் கதையை ஜோடனை செய்தான். அதில் சில உண்மைகள், சில பொய்கள்.

முதன் முதலாக இரண்டு மாதங்களுக்கு முன் கல்கத்தாவுக்குத் தான் பயணித்த கதையிலிருந்து துவங்கி, ரயில் பாதியில் நின்றபோது பஜனை கோஷ்டியில் அவளைப் பாடகியாகப் பார்த்து குரலால்

ஈர்க்கப்பட்டு தன் மனதுள் அவள் தேவதையாக அமர்ந்து கொண்டது முதல் அவளுக்காக டி.டி.ஆரிடம் தான் கட்டிய ஃபைனைத் திருப்பி அனுப்ப முகவரியும் ஃபோன் நம்பரும் அவள் கேட்டபோது தான் தரமறுத்தது வரை சொன்னான்.

''ஏன்...ஏன்... தந்திருக்கலாமே?''

''இல்லை... அப்படி நான் தந்திருந்தா அவ மனசுல நான் பத்தோடு பதினொன்றாவது ஆளா மட்டும்தான் இருந்திருப்பேன். எனக்கு அவங்க கேரக்டர் ரொம்பப் பிடிச்சிருந்தது. அதனால அவங்க எனக்குக் கிடைக்கலன்னாகூடப் பரவாயில்லை. ஆனா அவங்க மனசுல உயர்ந்த மனுஷனா மட்டும் இருந்தா போதும்னு நெனச்சேன். அதுமட்டுமில்லாம நாம அதிகமா நேசிக்கிற பொருள் எதுவா இருந்தாலும் நம்மோட உயர்ந்த அன்பே நம்மகிட்ட அதனை எப்படியாவது கொண்டுவந்து சேர்க்கும்ங்கிறது என்னோட நம்பிக்கை.''

''ம்ம்ம்ம்... அதனால..?''

''எனக்குத் தரவேண்டிய காசை ஒரு கர்ச்சீஃப்ல கட்டி வையுங்க... இந்த உலகத்துல என்னிக்காவது ஒருநாள் நாம கண்டிப்பா சந்திப்போம். அன்னைக்கு வாங்கிக்கறேன்னு சொல்லியிருந்தேன்.''

அஜயன் பாலா





"அவர் புது சீரியல் எடுக்கறாராம்..."

"அதெல்லாம் கண் துடைப்பு வேலைங்க."

- சாயம் வெ. ராஜாராமன்

''ம்ம்... அதெப்படி அவ்வளவு ஸ்ட்ராங்கா ப்லீவ்னெஸ்.''

''ஐ பிலீவ் இன் மிஸ்டிக்ஸ்... என் வாழ்க்கையில நெறைய்ய நடந்துருக்கு.''

''கடவுள் நம்பிக்கையா..?''

''இல்ல மேடம் மனித நம்பிக்கை, ஆன்மீகம்... மனித மனசு ஒரு கடல். அதுக்குள்ள பல சக்திகள் இருக்கு. எப்படி பிரார்த்தனை பலிக்கும்னு நம்பிக்கையோ அது மாதிரிதான் பரிசுத்தமான அன்பும் காதலும்...''

இப்படி பேசும்போது சூர்யாவுக்கே தன் வசன திறமை உள்ளூர வியக்க வைத்தது.

கிரிஜா முழு சரண்டர். அவள் முகமும் கண்ணும் அப்படி இப்படி அசையவில்லை.

''ம்ம்... அப்புறம்...''

''ம்ம்... அப்புறம் அதான் அன்னிக்கு ரெண்டாவது முறையா அவளை மேட்டுப்பாளையத்துல எதேச்சையா மீட் பண்ணேன்''

சட்டென கிரிஜாவுக்கு அன்று தேன்மொழி ஓடிய காட்சி மனசுக்குள் வர, ஒருவேளை அங்கே முதன்முறையாக இவனைப் பார்த்துத்தான் அப்படி ஓடியிருப்பாளோ..? கிரிஜாவுக்கு உடல் சிலிர்த்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டாமல், ''ம்ம்... அப்புறம் ஏன் அவ அன்னிக்குக் கத்தணும்?''

''என்ன ஆச்சுன்னா... அன்னிக்கு நான் ரொம்ப பதற்றத்துல இருந்தேன்... இ டிக்கட் கன்ஃபார்ம் ஆகாம இருந்தது... உங்களுக்குத்தான் தெரியுமில்லியா... கன்பார்ம் ஆகலைன்னா இ டிக்கட் செல்லாதுன்னு. உடனே ஓபன் டிக்கட் வாங்கிக்கிட்டு வாங்க... சீட் இருந்தா அலாட் பண்ணிடறேன்னு டி.டி.ஆர். சொன்னார்''

''ம்ம்...''

''அந்த அவசரத்துல இருந்தப்பதான் எதிர்க்க இவங்க வந்தாங்க. சட்டுன்னு அந்த பாதி இருட்டுல எதிர்வெளிச்சத்துல அவங்க முகம் எனக்கு ஞாபகத்துல வரலை... அவங்க என்னைப் பார்த்துட்டு ஆச்சர்யத்தோட கைநீட்டினாங்க... எனக்கோ ஓபன் டிக்கட் வாங்க வேண்டிய அவசரம். அடையாளம் தெரியாம குழப்பத்துல பதற்றத்துல ஒரு நிமிடம் திகைச்சுட்டேன்''

ம்ம்ம்... கிரிஜாவுக்கு இப்போது விளங்கிவிட்டது. தேன்மொழி அன்று கத்திக் களேபரப்படுத்தியதற்கு இந்த சூர்யாவின் மீதான அவளது ஆழமான காதல்தான் காரணம் என்பதை ஊகித்துக்கொண்டாள். தேன்மொழியின் மென்மையான [illegible]ாவம் காரணமாக வைசாக் சம்பவம் இவன் மேல் ஒரு அதீத ஈடுபாடு ஏற்படக் காரணமாகியிருக்கும். இந்த ஸ்கிரிப்ட்டில் லாஜிக் பக்காவாக இருப்பதாகப் பட்டது. அன்று இவனது ஒரு நிமிடக் குழப்பத்தைக்கூட அவளால் தாங்க முடியவில்லை. அதனால்தான் அழுத்திக்கொண்டிருந்த உணர்ச்சிகள்

வெடித்துவிட்டன. கிரிஜா தனக்குத் தெரிந்த சைக்காலஜியை வைத்து ஒரு முடிவுக்கு வந்தாள். அதுதான் உண்மையும்கூட.

''ம்ம்... சொல்லுங்க. அப்புறம் ஏன் நீங்க வரலை? எங்கே போனீங்க அதுக்கப்புறம்..?''

''சரி அந்த நேரத்துல நான் அங்கே இருந்தா இன்னும் பிரச்னையாயிடுமோன்னு பயந்துதான் அங்கேயிருந்த மேனேஜர்கிட்ட ஃபோன் நம்பர் வாங்கிட்டு வந்துட்டேன்... இப்ப அவங்களைப் பார்த்து நான் மன்னிப்பு கேக்கணும்னு நெனைக்கறேன்''

கிரிஜாவுக்கு மனக வெளிச்சமாகி விட்டது; இருண்டுகிடந்த அறையின் ஜன்னலை யாரோ திறந்துவிட்டது போல.

''காஃபி சாப்பிடுவோமா?''

சூர்யா தலையசைத்ததும், இரண்டு என விரல்களை விரித்து கல்லாவில் காண்பித்து ''காஃபி... ஒண்ணு சுகர்லெஸ்'' என்றாள்.

சூர்யா ரிலாக்ஸ்டாக கைகளை மேலே உயர்த்தி சோம்பல் முறித்தான். மனசில் பாரம் விலகியது போலிருந்தது.

''இன்னிக்கு அவங்களை நான் பார்க்க முடியுமா?''

''கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க... அவங்க அப்பா அங்கே இருக்காரு. முதல்ல முழுசா தெரிஞ்சுக்கிட்டு அப்புறம் சொல்லலாமேன்னுதான் உங்களை இங்கே கூட்டிட்டு வந்தேன். பொண்ணு மேல உயிரையே வெச்சிருக்காரு அவரு. கொள்ளை பாசம். அன்னிக்கு அவ அப்செட் ஆகறதுக்கு நீங்கதான் காரணம்னு தெரிஞ்சா எமோஷனானாலும் ஆகிடுவார். இருங்க அவர்கிட்ட பேசிடறேன். அவ முழிச்சிட்டாளான்னு பார்ப்போம்'' பேசிக்கொண்டே கிரிஜா செல் ஃபோனை எடுத்து நம்பரைத் தட்டினாள்.

''டாடி...''

''சொல்லும்மா... காஃபி நல்லாயிருந்ததா? இப்படித்தான் விட்டுட்டு வந்துடறதா..?''

ஃபோனைக் கையில் வைத்துக் கொண்டே கிரிஜா ஆச்சர்யத்துடன் அக்கம் பக்கம் பார்க்க...

''திரும்பிப் பாரும்மா...''

பின்னால் குரல் கேட்டு கிரிஜா ஆச்சர்யத்துடன் திரும்ப, அங்கே அருணாச்சலம் சிரித்துக்கொண்டே கையசைத்தார்.

''டாடி... சொல்லவே இல்லை... எப்ப வந்தீங்க?''

''பார்த்தேன்... ரொம்ப இன்ட்ரஸ்ட்டா பேசிக்கிட்டிருந்தீங்க. தொந்



''பழைமையைப் பக்குவப்படுத்தினா புதுமை''

* அன்பு

எல்லா இலக்கியக் கூட்டங்களிலும் முதல் வரிசையில் அமர்ந்து ருசிக்கும் தேர்ந்த வாசகர் அன்பு. ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் திரைப்படக் கலை பயின்று, இந்திரா பார்த்தசாரதியிடம் நாடகத்தின் பின்னணி வேலைகளுக்குப் பயிற்சி எடுத்தவர். கலைஞர் டி.வி.யில் 'தாயம்' தொடரில் சகாதேவனாக நடித்துள்ள இவர், ''மகாபாரதத்தில் ஐந்து சகோதரர்கள் கதைதான் இந்தக் காலத்துப் பிரச்னைக்கு ஏற்றாற்போல மாறியுள்ளது. பழைமையைப் பக்குவப்படுத்தினா புதுமைதானே ஸார். எல்லா யுத்தத்துக்கும் நம்ம முன்னோர்கள் கதை பொருந்தும்'' என்கிறார்.

– அமிர்தகுமாரி

தரவு பண்ண வேணான்னுதான் அப்படியே அமைதியா உட்கார்ந்துட்டேன்''

கிரிஜா பதற்றத்துடன், ''நான் சொன்னேன் இல்ல... தேன்மொழியோட அப்பா...'' என சூர்யாவிடம் சொல்லிக் கொண்டே எழுந்து அருணாச்சலத்தின் மேசை முன் அமர, உடன் சூர்யாவும் அவளைப் பின் தொடர்ந்து அமர்ந்தான்.

''தோ வர்றேன்னு சொன்னியேன்னு யோசிச்சுக்கிட்டே கேன்டீனுக்கு காஃபி சாப்பிடலாம்னு வந்தா நீ உட்கார்ந்துக்கிட்டிருந்தே... பார்த்தாலே தெரிஞ்சது சீரியஸ் டிஸ்கஷன்னு. அதான் இப்படி பின்னாலயே உட்கார்ந்துக்கிட்டேன்''

''கண்முழிச்சிட்டானாப்பா?''

''ம்ம்... கொஞ்சம் பெட்டர்... தம்பி யாரு?''

கிரிஜாவுக்குள் இரண்டு மனசு சடசடவெனப் பகடை உருட்டியது.

சரி சொல்லிவிடுவது என முடிவெடுத்தவள், ''ப்பா... இவர் பேரு சூர்யா'' என்றாள்.

''ஐயாம் அருணாச்சலம்'' என்றபடி புன்னகையுடன் அருணாச்சலம் கைநீட்ட, சூர்யா பதற்றத்துடன் கைகுலுக்கினான்.

''ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க. ரிலாக்ஸ்... என்ன பண்றார்..? உங்க யூனிட்ல இருக்கிறவரா?''

''இல்லப்பா... இவர் மெடிக்கல் டிப்பார்ட்மெண்ட்... ஸ்டெம் செல்ஸ் இருக்கில்லப்பா... அதுல மார்க்கெட்டிங்ல இருக்கார்...''

''அப்படியா? இங்க டாக்டர் யாரையாவது பார்க்க வந்திருக்கீங்களா?''

அருணாச்சலம் கேட்க, சூர்யா,



''உங்க மகளைத் தெரியும். ஆனா உங்களை இப்பத்தான் முதன் முறையா பார்க்கறேன்!''

''இல்லை சார்... உங்களை, உங்க டாட்டரைப் பார்க்கத்தான் வந்திருக்கேன்''

மகள் நிலைமைக்குக் காரணமானவன் இவன்தான் எனத் தெரிந்தால் டாடி எப்படி ரியாக்ட் பண்ணப் போகிறாரோ எனப் பயந்தாள் கிரிஜா.

''அப்படியா... குட்... என்னை, என் மகளை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?''

''உங்க மகளைத் தெரியும். ஆனா உங்களை இப்பதான் முதல்முறையா பார்க்கறேன்.''

அருணாச்சலத்தின் முகம் சுருங்கியது.

சூர்யா கிரிஜாவின் முகத்தைப் பார்த்தான்... 'நீங்களே சொல்லுங்களேன்' என்பது போல.

''இவ்வளவுதூரம் வந்துட்டீங்க... அப்புறம் என்ன... எல்லாத்தையும் இங்கேயே சொல்லிடுங்க''

கிரிஜா இப்படி சொன்னதும் அருணாச்சலத்தின் முகம் மாறியது. சூர்யா துவக்கத்திலிருந்து மீண்டும் சொல்லத் துவங்கினான்.

(தொடரும்)

வால் வாசகர்

யுகக் கண்ணாடி!

"பள்ளி இறுதி நாட்கள்லயே எனக்கு கல்கி அறிமுக மாகிடுச்சு. 1963ல் நான் ஓல்டு எஸ்.எஸ்.எல்.சி மாணவன். தேசியக் கல்லூரியில் என் மேல்படிப்பு தொடர்ந்தபோதும், கல்கி வாசிப்பு தொடர்ந்தது. வாசிக்க வாசிக்க அத்தனையும் மனசுக்குள் சிம்மாசனம் போட்டு அமர்ந்துகொண்டன. பொன்னி யின் செல்வனை மட்டும் பத்துப் பன்னிரண்டு தடவைகளுக்கு மேல் வாசித்த அனுபவங்கள் இன்னமும் என்னால் மறக்க முடியாதவை!" என்கிறார் திருச்சி திருக்குறள் கு.முருகானந்தம்.

"எப்போதுமே எனக்குத் தமிழ் இலக்கியங்கள் மீது தீராத காதல். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அறிமுகம் மற்றும் இலக் கியத் தொடர்புகளின் பயனாக, திருச்சியில் 1982ல் திருக்குறள் பேரவை கிளை உதயமானது. அது பின்னர் திருக்குறள் அஞ்சல் வழிக் கல்வி மையமாக உதித்தது. 1988லிருந்து இயங்கி வரும் மையம் வாயிலாக தமிழகத்தில் இதுவரை சுமார் மூவாயிரம் பேர் 'திருக்குறள் இளம் புலமையர்' பட்டயம் பெற்றுள்ளனர். சரி, என்னுடைய கல்கி அனுபவங்களுக்கு வந்து விடு கிறேன்.

சரித்திர ஓவியங்கள் கல்கியில் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அமரர் கல்கியின் வண்ணத் தூரிகை ஓவியம் வாரா வாரம் மனத் தைக் கொள்ளை கொள்கிறது. கல்கி வெளியிட்ட சுதந்திரப் பொன்விழா மலர் என்கிட்டே பத்திரமாக இருக்கு. அதனைக் காலப் பெட்டக மாகப் பாதுகாத்து வெச்சிருக்கேன்.

சமீபத்தில் வந்த த.கி.நீலகண்டனின் இலக்கியத்தில் அணி கலன்கள் தொடர் அற்புதம். தமிழன்னைக்கு அணிகலன்களாக தலைக்குச் சூடாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக் குண் டலகேசி, கைக்கு வளையாபதி, இடைக்கு மணிமேகலை, காலுக் குச் சிலம்பு என தமிழ்த்தாத்தா உ.வே.சா. பேசியதாகக் குறிப் பிட்டிருந்தது மிக மிக அருமை. சமீபத்தில் ஆர்.வெங்கடேஷ் தயாரித்திருந்த இன்டர்நெட் சிறப்பிதழும் குறிப்பிடத்தக்கது. நவீன கால வாசகர்களுக்குமான யுகக் கண்ணாடி கல்கி!" எனக் கூறுகிறார் இவர்.



* உறவினருடன் கு.முருகானந்தம்



கனவுகளை

* ஜே.கே.வின் ஓவியம்



* ஜே.கே.

குருதிப்புனல், மகாநதி, பள்ளிக்கூடம், பெரியார் போன்ற திரைப்படங்களில் ஆர்ட் டைரக்டராகப் பணி புரிந்தவர் ஜே.கே. என்கிற ஜெயக்குமார். சமீபத்தில் ஓவியக் கண்காட்சியையும் நடத்தி அசத்தினார். அவரைச் சந்தித்து உரையாடியதிலிருந்து...

ஸார்! உங்களுக்கு வயது அறுபதா... ஆச்சரிய மாயிருக்கே?

''சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு இல்லாம இருந்தா அழகாக வயதாகும்.''

74ல் ஓவியக் கல்லூரியில் படிச்சீங்க. பிறகு 2000-லும் படிச்சீங்க. உங்க கல்லூரி நாட்களின் சுவாரஸ்யமான சம்பவம் சொல்லுங்களேன்...?

''முக்கியமான சுவாரஸ்யம் - 2000ல் முதுநிலை படிப்பு படிக்கை யில் என் மகன் இளநிலை படிப்பைத் துவங்கினான். இருவருக்கும் ஓவியம் தான் படிப்பு. இருவரும் ஒரே கால கட்டத்தில் ஒரே கல்லூரிக்குப் போய்

நேசிக்கிறவன்!

வந்தோம். படிப்புக்கு வயது வரம்பை அன்றைய அரசு தளர்த்தியிருந்ததால் இது சாத்தியமாயிற்று.''

இயக்குநர் நேதாஜி மூலம் 'ஜனனி' படத்தில் 85ல் அறிமுகமாகி இன்று வரை கலை இயக்குநராக இருக்கும் உங்களுக்குப் பெருமைசேர்த்த படங்கள்..?

''மகாநதியில் கொல்கத்தா சோனாகஞ்ச் பகுதியைப் பலரும் பார்த்து வியந்தனர். ஆனால் அது திருவல்லிக்கேணியில் உருவாக்கப்பட்டது. புதிய பகுதியில் பழைய காலத்தை நிர்மாணிப்பது சவாலான பணி. அது எப்போதும் பெருமைக்குரியதாகவே அமையும். இப்போது கமலின் மர்மயோகி ஐந்தாம் நூற்றாண்டுக் கதை - காலங்களைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும் சவாலாய்.''

ஓவியராக இருத்தல், கலை இயக்குநராகச் செயல்படுதல் - எது மகிழ்ச்சிக்குரியது?

''சினிமாவில் உழைத்து வரும் பணத்தைக் கொண்டு என் ஆத்மதிருப்திக்கான ஓவியத்துக்குச் செலவு செய்வதுதான் மகிழ்ச்சியானது.''

காதல் காட்சி, பாடலுக்கு செட் போடுவது போன்ற அபத்தங்கள் யதார்த்த வாழ்வைப் பிரதிபலிப்பது இல்லை. இதை ஒரு கலைஞனாய் எப்படி ஜீரணித்துக் கொள்கிறீர்கள்?

''கனவுகளை நேசிக்கிறவன் இதனைச் சந்தேகப்பட மாட்டான். கற்பனை பொய்யல்ல - கற்பனை என்பது நிரூபிக்கப்பட வேண்டிய உண்மை... அவ்வளவுதான்! - எனது இந்தச் சிந்தாந்தம் அதை ஜீரணித்துவிடும். கல்லறையை அழகாகச் செதுக்கும் போது கீழே இருக்கும் பிணத்தைப் பற்றி கலைஞன் யோசிக்க மாட்டான்.''

உங்கள் ஓவியங்களில் பெண்களின் பிம்பம் நிரம்பி வழிவது ஏன்?

''நான் வரையும் பெண்கள் வேறு யாருமில்லை - நான்தான். என்னைப் பெண்ணாக நான் பாவிக்கும் தருணங்கள்தான் அந்தப் பதிவு.''

உங்கள் இலக்கு என்ன?

''மலை உச்சியிலிருந்து உருண்டு விழுந்து கொண்டேயிருக்கும் பாறை, கிழிக்கும். கூர் மழுங்கி மழுங்கி கங்கைக் கரைக்கு வரும்போது வாயில் போட்டுக் குதப்பி விளையாடும் அளவு சிறிய கூழாங் கற்களாய் அவை மாறியிருப்பதுதான் வாழ்வின் வெளிப்பாடு. அதை உணர்ந்து, அதை நோக்கிப் பயணிப்பது என் இலக்கு.''



* ஜே.கே. போட்ட செட்

சந்திப்பு: **அமிர்தா**

ஒரு பெர்ஃபெக்ஷனிஸ்ட்!

அவரு சாதாரண ஆள் இல்ல. 'ஸ்டீவ்'னு பேரு. எதைச் செஞ்சாலும் அவருக்கு ரொம்பச் சரியா இருக்கணும். ஒரு பாயிண்ட், மில்லி மீட்டர் அளவு கூட மாறக் கூடாது. அவரு வசிக்கிற ஊரு பெர்ஃபெக்ட் வில்லா. வாழுற வீடு பெர்ஃபெக்ஷன். படிக்கிற ரூம்ல தலைக்கு மேல தொங்குற போர்டுல பெர்ஃபெக்ட். அவ்வளவு ஏன்? அவரு படிக்கிற புத்தகங்களே பெர்ஃபெக்ஷனிஸ்ட் ரூல் சம்பந்தப்பட்டவைதான்.

இப்ப புரியுதா... அவர் எப்பேர்ப்பட்ட ஆளுன்னு? அப்பேர்ப்பட்ட ஆசாமி, விடுமுறை நினங்களைக் கழிக்க வெளியூர் போக வேண்டி முன் கூட்டியே ஏர் டிக்கெட் புக் பண்ணி வெச்சிருக்காரு. இப்ப வெளியூர் கிளம்புறாரு.

ஒரு பெரிய பெட்டியில தனக்கு வேண்டிய பொருட்களை ரொம்ப நேர்த்தியா அழகா ஒழுங்குமாறாம அடுக்கி வெச்சு பேக் பண்றாரு. பேக் பண்றதுக்கு முன்னாடி ஒவ்வொண்ணையும் ரொம்ப 'ரொம்பக் கவனிச்சு செய்றாரு. ஏன்னா... அவருக்கு எதுலயும் எந்தத் தப்பும் நேர்ந்துடக் கூடாது. பேக் பண்ணி முடிச்சாச்சு. பெர்ஃபெக்ட் வில்லாவிலேருந்து வெகேஷன் வில்லாக்குக் கிளம்புறாரு.

பெர்ஃபெக்ட் ஏர்போர்ட்டைச் சென்றடையுறாரு. டிக்கெட் செக்கிங் கவுண்ட்டர்ல வரிசையில நிக்கறாரு. இவர் நேரம் வருது. டிக்கெட் எடுத்து ரிசப்ஷன் லேடியிடம் நீட்டுறாரு. டிக்கெட் படிச்சுப் பார்த்த அந்த லேடியோட புருவங்கள் மேலே உயருது. ஸ்டீவ்வை அவ ஒரு மாதிரியா பார்க்குறா. விறைப்பா என்னன்னு கேக்குறாரு ஸ்டீவ். காலண்டரைக் காட்டுறா அந்த லேடி. அப்பதான் தேதி பார்க்குறாரு ஸ்டீவ். பயண டிக்கெட் தேதி, ஒரு நாள் கடந்து போயிடுச்சு.


கை விரிக்கறா ரிசப்ஷன் லேடி. தொங்கிய முகத்துடன் சோர்வா திரும்புறாரு. பெட்டியைத் தூக்கறாரு. கைப்பிடி மட்டும் கழண்டு போயி அவரு கையோட வருது. இப்ப அவரைக் கழட்டி விட்டது இந்தக் கைப்பிடி மட்டுமல்ல, அவரோட பயண டிக்கெட் தேதியும்தான்.



ஸ்டீவ்ஸ் பெர்ஃபெக்ட் வெகேஷன் (Steve's perfect vacation) என்ற குறும்படத்தின் கதை இது.


"கலிபோர்னியாவில் உள்ள Films Skillet என்கிற அமைப்பு, உலக அளவில் குறும்படப் போட்டிகள் நடத்தியது. உலகின் நிறைய நாடுகளின் குறும்படங்கள் அதில் பங்கேற்றன. அனிமேஷன் பிரிவுக்கு இருபது நாடுகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட குறும்படங்கள் வந்திருந்தன. பிரபல ஹாலிவுட் இயக்குநர் பேட்ரிக் நாரிஸ், நடுவர் குழுவின் தலைவர். இறுதிச் சுற்றுக்குப் பதினெட்டு படங்கள் தேர்வாகின. அதில் எனது குறும்படம் இடம் பிடித்திருந்தது. அந்தப் பதினெட்டு குறும் படங்களையும் Films Skillet இணையதளத்தில் வெளியிட்டு, பார்வையாளர்

* ஆனந்த் ரமேஷ்



களிடமிருந்து வாக்குகள் பெறப்பட்டன. அதில் மிக அதிக வாக்குகள் பெற்று முதலிடம் பிடித்திருந்தது எனது குறும்படம்!'' எனச் சொல்கிறார் ஆனந்த் ரமேஷ்.

கண்ணாடி அணிந்து பார்க்கக்கூடிய இந்த 3டி அனிமேஷன் குறும்படத்தை இயக்கி, சர்வதேச அளவில் முதல் பரிசு பெற்றுள்ள இவர் லால்குடி இளைஞர். கோவையில் பி.டெக்., ஐ.டி.



தேர்ச்சி பெற்ற ஆனந்த் ரமேஷ், அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ். கம்ப்யூட்டர் சயன்ஸ் பயின்றுள்ளார்.

''கனடாவின் வேன்கூவர் ஃபிலிம் ஸ்கூல், பதினேழு வருடங்களாக இயங்கி வருகிறது. அதில் பயின்ற எழுபத்தைந்தாவது செட் மாணவர்களில் நானும் ஒருவன். கடந்த பதினேழு வருடங்களில், மாணவனாக இருந்தபோதே 3டி அனிமேஷன் குறும்படம் இயக்கி வெளியிட்டது நான் ஒருவன் மட்டுமே. இது தொடர்பாக வேன்கூவர் ஃபிலிம் ஸ்கூலின் முதல் மாணவன் என்பது, எனக்குக் கிடைத்திருக்கும் தனிச்சிறப்பு!'' என்கிறார் இருபத்தைந்து வயது இளைஞரான ஆனந்த் ரமேஷ்.

அந்தப் பள்ளியின் ஆறு மாதப் பயிற்சிக் காலத்தில், நான்கே மாதங்களில் டிவிடி வெளியிட்ட முதல் மாணவன் என்கிற தனிச்சிறப்பும் பெற்றுள்ளார் அவர்.

பெர்ஃபெக்ஷனிஸ்ட் பத்திப் படமெடுத்தவர், தமிழ்த் திரைத்துறைக்கு பெர்ஃபெக்ட்டா பங்களிப்பாரா... பார்க்கலாம்!

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ரீல் நியூஸ்; ஆனா ரீல் இல்ல!

ஆஹா! அற்புதம்!

மலையாள இயக்குநர் ஜெயராஜ் இயக்கிய மலையாளம், ஆங்கிலம் இரு மொழிப் படம் அற்புதம். 2005ல் கருணைக்கொலை செய்துகொள்ள தனக்கு அனுமதி வேண்டும் என்று சட்டரீதியாகப் போராடிய ஒரு அமெரிக்கப் பிரஜையின் உண்மைக் கதைதான் இந்தப் படம். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதன் தீவிரம் தாங்காமல் சாக விரும்பும், இந்தியாவில் பிறந்து அமெரிக்காவில் வசிக்கும் ஒரு நாடக ஆசிரியர் தான் கதையின் பிரதான பாத்திரம். இந்த 74 நிமிடப் படத்துக்கு மிகவும் நீளம் குறைவான சினிமா என்ற பெருமையும் உண்டு.



அமெரிக்காவின் டாப் 20யில் ஐஸ்!

நம் ஊர் டெலிவிஷன் சேனல்களில் வாரா வாரம் எந்த அடிப்படையில் டாப் 10 படங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். ஆனால், அமெரிக்காவின் டாப் 20 வரிசையில் வசூல் ரீதியாக இடம் பிடித்த முதல் இந்தியப் படம் சுபாஷ் கை இயக்கிய சூப்பர் டூப்பர் ஹிட் படமான 'தாள்'. ஐஸ்வர்யா ராய், அக்ஷய் கன்னா, அனில் கபூர் நடித்த அந்தப் படத்துக்கு இசை ஏ.ஆர்.ரஹ்மான். படத்தில் மொத்தம் 12 பாடல்கள். அமெரிக்காவில் 'மியூசிக்கல் லவ் ஸ்டோரி' என்று விளம்பரப்படுத்தினார்கள்.

இது குற்றமில்லை!

கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி எழுதிய தனிப் பாடல் அது. சினிமாவுக்காக எழுதப்படவில்லை. அந்தப் பாட்டு எம்.ஆர்.ராதாவுக்கு மிகவும் பிடித்துப் போக, அவர் அதனைத் தம்முடைய ரத்தக் கண்ணீர் நாடகத்தில் இடம்பெறச் செய்தார். மக்கள் மத்தியில் நாடகம் மிகுந்த வரவேற்பைப் பெற்று, பின்னர் திரைப்படமாக எடுக்கப்பட்டது. படத்திலும் அந்தப் பாடல் இடம்பெற்று, பெரும் ஹிட் ஆனது. அந்தப் பாடல்: 'குற்றம் புரிந்தவன் வாழ்விலே நிம்மதி!'

பாகவதர் வாய்ஸ்!

இயக்குநர் கே.சுப்ரமணியம், தியாகராஜ பாகவதரை வைத்து ஒரு படம் எடுக்க முடிவு செய்து, அவர் பாட ஒரு பாடலையும் பதிவு செய்துவிட்டார். ஆனால், சில காரணங்களால் அந்தப் படம் எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அடுத்து பி.யூ.சின்னப்பா - டி.ஆர்.ராஜகுமாரி நடிக்க 'விகடயோகி' என்ற படத்தை எடுத்தார். ஒரு விஞ்ஞானி ஒரு மருந்து கண்டுபிடிப்பதாகவும், அந்த மருந்தைச் சாப்பிட்டால் யாரும், எவருடைய குரலில்

வேண்டுமானாலும் பாட முடியும் என்றும் ஒரு காட்சியைப் புகுத்தினார். கதையின் கதாபாத்திரம், அந்த மருந்தைச் சாப்பிட்டுவிட்டு, தியாகராஜ பாகவதர் குரலில் ஒரு பாட்டு பாடுவதாகச் செய்து, ஏற்கெனவே ஒலிப்பதிவு செய்த பாகவதர் பாடிய பாடலைப் படத்தில் சேர்த்து விட்டார். பி.யூ.சின்னப்பா, பாகவதர் இருவரது பாடல்களையும் ஒரே படத்தில் கேட்டு மகிழ்ந்தார்கள் ரசிகர்கள்.



மியூசிக்கல் லவ் ஸ்டோரி!

வார்த்தை விளையாட்டு

சிவகவி படத்துக்காக பாபநாசம் சிவன் எழுதிய பாடலின் முதல் வரி 'முக மது சந்திர பிம்பமே!' பாடல் ஒலிப்பதிவின் போது அங்கே வந்த தயாரிப்பாளர், பாடல் வரிகளைப் படித்து விட்டு, பாபநாசம் சிவனிடம், ''ஐயா! முகமது சந்திர பிம்பமே என்று எழுதியிருப்பதால் இஸ்லாமியர்களிடமிருந்து ஏதாவது ஆட்சேபணை வரக்கூடும். எனவே அந்த வார்த்தையை மட்டும் மாற்றிவிடுங்கள்!'' என்று சொல்ல, அடுத்த நிமிடமே சிவன், ''வதனமே சந்திர பிம்பமே!'' என மாற்றிக் கொடுத்து விட்டார்.

புதுப் பொறுப்பு!

எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகிறது, சிவாஜிகணேசன் திரைப்படக் கல்லூரி. ஐ.ஏ.எஸ். பணியிலிருந்து விடுவிப்பு பெற்றுக்கொண்டு அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார், பாரதியார், பெரியார் படங்களை இயக்கிய ஞான ராஜசேகரன்.

- **சி.எம்**

பாடகி கனி



பாடாத

கோடானுகோடி (சரோஜா), ஓடி ஓடி விளையாடு (மாசிலாமணி), துப்பாக்கிப் பெண்ணே (பேராண்மை) ஆகிய பாடல்கள் மூலம் தமிழ் சினிமாவில் முக்கிய இளம்பாடகி ஆகியிருக்கிறார் சுவி. எஸ்.எஸ் மியூசிக் சேனல் நடத்திய பாட்டுப் போட்டி ஒன்றில் தேர்வானவர் இவர். இயற்பெயர், ஸ்வேதா.

ம்...ம்... சொல்லுங்க சுவி உங்களைப் பற்றி...?

◆ எஸ்.எஸ். மியூசிக்கிலேயே எனக்கு நிறையப் பிரச்னை வந்தது. ஸ்வேதானு ஒவ்வொரு தெருவுக்கும் நாலு பேர் இருக்காங்க. என்ன பேர் மாத்தலாம்னு நினைச்சபோதுதான் குருவி படத்தோட கேசட்ல என் பேரை சுவினு எழுதியிருந் தாங்க. அடடா, ரொம்ப வித்தியாசமா இருக்கேனு அதே பேரைத் தொடர்ந்து வைச்சுக்கிட்டேன்.

◆ இசை தவிர எனக்குத் தடயவியல் துறையில ஆர்வம் அதிகம். அமெரிக்கா வுக்குப் போய் அதைப் படிக்கலாம்னு இருக்கிறபோதுதான் சினிமாவுல பாடற துக்கு வாய்ப்புகள் வந்துச்சு.

◆ என் தனித்துவம் மேற்கத்திய பாணி யில பாடறதுதான். 'காக்க காக்க'ல வர்ற 'ஒன்றா ரெண்டா' பாடல் மேற்கத்திய பாணிப் பாடல்தான். அதுபோல பாடல்கள் எனக்குக் கிடைச்சா ஓகே.

◆ இந்தத் துறையில இருக்கற ஒரு கஷ்டமான விஷயம், படத்தோட கேசட் வெளிவர்ற வரைக்கும் நாம பாடின பாட்டு தான் வரும்னு உறுதியா சொல்லமுடியாது. இதுல யாரையும் குத்தம் சொல்லமுடியாது. நம்ம குரல் சில சமயம் இசையமைப் பாளருக்குப் பிடிச்சிருந்தாலும் இயக்குநருக் குப் பிடிக்காம போயிடும். பில்லா படத் துல வர்ற 'வெச்சுக்கவா' பாட்டை முதல்ல நான்தான் பாடினேன். ஆனால் எனக்கே நான் பாடினது பிடிக்கலை. யுவன்கிட்ட என் தரப்பைச் சொன்னேன். அவரும் ஓகேனு என் கருத்தை ஏத்துக்கிட்டார். இப்படி புரிதலோடு இருந்தாதான் யாருக் கும் எந்த ஏமாற்றமும் பயமும் இல்லாம இருக்கும்.

◆ என் வயசுக்கேத்த மாதிரி நானும் டிஸ்கோதேக்கு அடிக்கடி போயிட்டு இருந் தேன். இப்போதான் அது எவ்வளவு டைம் வேஸ்ட்டுனு புரிஞ்சது. என் எல்லா நேரங்களையும் இசைக்கு அர்ப்பணிக் கிறதுலதான் பரம சந்தோஷம் கிடைக்குது.

◆ 'கொஞ்சம் நிலவு' பாட்டைக் கேட்டா இன்னைக்கும் எனக்குச் சிலிர்க் கும். அந்தப் பாட்டை நான் பாடியிருந்தா எப்படியிருக்கும்னு அடிக்கடி நினைச்சுப் பேன்.

◆ எனக்கு நடிக்க ஆசைதான். ஆனா நல்ல கதாபாத்திரமா இருக்கணும். பாடும் போது நமக்குப் புரியுது, தமிழ் சினிமாவுல ஹீரோயின்களுக்கு அவ்வளவா நல்ல வாய்ப்புகள் வர்றதில்லைனு. இன்னைக்கு ஹீரோயின்களுக்கென்று தனிப்பாடல்களே கிடையாதே!

- செந்தில்

ஹீரோயின்கள்!

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

துலாம்:

உதய சூரியன் உச்சிக்கு வரும் காலம் போல இந்த வருஷம் 'பளிச்'னு இருக்கும். சுபகாரியங்கள் நடக்கும் ஆண்டு. அப்புறம் மகிழ்ச்சிக்குக் குறைவேது? கல்வி, சொத்து, அணிகலன்கள் எல்லாம் உங்க விருப்பம் போலவே கிடைக்கும். ஜமாய்ங்க! ஃபாரின் ட்ரிப்புக்கு சான்ஸ் இருக்கு. கல்யாணப் பேச்சு நடக்குதா... இந்த வருஷம் டும்டும்டும்தான்! சனிக்கிழமை ஆஞ்சநேயரைச் சந்திச்சா சங்கடம் தீரும்.

விருச்சிகம்:

இந்த வருஷம் ஆரம்பமே டாப் கியர் தான்! அப்புறம் என்ன... வம்புப் பேச்சு இல்லாம உங்க வேலையைப் பார்த்தா ரேஸ் ட்ராக்குல முந்தலாம். கல்வி, கொடுக்கல் - வாங்கல், வாகனப் பிரயாணங்களில் ரொம்ப கவனம்! வீடு, வேலையில் ட்ரான்ஸ்ஃபர் இருக்கலாம். புதுசா அறிமுகமாகறவங்களை கொஞ்சம் தள்ளியே வையுங்க. ஆரோக்கியத்துக்கு கேர் எடுத்துக்கங்க. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் ராகு, கேதுவையும், வியாழக் கிழமைகளில் குரு பகவானையும் வணங்குங்க. சங்கடங்களைத் தீர்ப்பாங்க.

தனுசு:

'வந்ததே லக்கு வந்ததே...'னு பாட இந்த ஆண்டு அற்புதமான வாய்ப்புகளைத் தரும். திருமணம், கல்வி, புதிய தொழில் முயற்சி, வேலை வாய்ப்பு... உங்கள் நீண்ட காலக் கனவு எதுவா இருந்தாலும் நிறைவேறும். பொருளாதாரப் பற்றாக்குறை, வேலைப் பளு, வராத நிலுவைகள்... இந்தப் பிரச்னையெல்லாம் தீர்ந்து நிம்மதியா இருப்பீங்க. தொல்லையா இருந்த சொந்தக்காரங்க தூரமா போவாங்க. செவ்வாய், வெள்ளி, சனிக்கிழமைகள்ல நவக்கிரகத்தை நமஸ்காரம் செய்யுங்க... நற்பலன் கிடைக்கும்.

மகரம்:

நூறு ரன்னைத் தாண்டியும் அசராம அடிச்ச கம்பீர் போல ஆட, இந்த ஆண்டு அருமையான களம். இவ்வளவு பிரகாசமான காலத்தை நீங்க சந்திச்சு ரொம்ப நாளாச்சு. வீடு, வாகனம், கல்வி, தொழில், குடும்ப வாழ்க்கை எதுவாயிருந்தாலும், வெற்றிதான். விரோதிகள்கூட உங்களை மனசாரப் பாராட்டுவாங்க மனசுக்குள்ள. நல்ல காரியங்களுக்கான செலவுகள் இருக்கும். என்றாலும் அதனால மனமகிழ்ச்சி தானே... மொத்தத்துல 100% இது உங்க ஆண்டு!

கும்பம்:

மாற்றம்தான் மாற்றம் இல்லாததுங்கறதைச் சொல்ற மாதிரி இந்த ஆண்டு தொடக்கமே நல்ல மாறுதலைத் தரும். வீடு, தொழில் போன்றவற்றில் மாற்றம் இருக்கும். க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ் கொஞ்சம் தள்ளிப் போவாங்க... ஏத்துக்கத்தான் வேணும்! வியாபாரம், கல்வியில் முன்னேற்றம் இருக்கும். இன்வெஸ்ட்மென்ட்ல கொஞ்சம் கவனம்! ராகு, கேது, குரு, சனி இவங்களைக் கும்பிடுங்க... கஷ்டங்களைத் தீர்த்து வைப்பாங்க.

தஞ்சை பரத்வாஜ்

புத்தாண்டு

மீனம்:

ரன்வேயிலிருந்து டேக் ஆஃப் ஆகற ஃப்ளைட் போல ஏற்றம் மிக்க ஆண்டு! மண வாழ்க்கை, பண வரவு, பதவி உயர்வு எல்லாம் கிடைக்கும். கடன் தொல்லை, ஆரோக்கியக் குறைவு போன்ற சின்னச் சின்ன சச்சரவுகள் க்ளியர் ஆகிடும். நண்பர்களால நல்லது நடக்கும். செலவு இருந்தாலும் சுபமாகத்தான் இருக்கும். ராகு, கேதுவை வணங்குங்க. சனி, வியாழக் கிழமைகளில் ஆஞ்சநேயர், குரு பகவானைக் கும்பிடுங்க. நல்ல பலன்கள் ஏற்படும்.



பலன்கள் - 2010

அம்பிகை என்னும் அமுத மழை

ஸ்ரீ லலிதா 13

நான்காம் பாகம்

சுதா சேஷய்யன்

சித்கலா - சித் ஸ்வரூபமாக, சித் கலையாக இருக்கக்கூடியவள்.

பிரேமரூபா - பக்தர்கள் செலுத்தக்கூடிய பிரேமையின் ரூபமாக - அன்பின் ரூபமாக இருக்கக்கூடியவள்.

ப்ரியங்கரி - ப்ரியத்தை எல்லோருக்கும் சித்திக்கச் செய்யக்கூடியவள்.

நாமபாராயண ப்ரீதா - பிரேமையின் உருவமாக, ப்ரியத்தின் ஸ்வரூபமாக இருக்கக்கூடிய ஸ்ரீ லலிதாம்பிகை, நாமபாராயணம் செய்தால் அதற்காக மேலும் ப்ரீதி அடைகிறாள்.

இந்தத் திருநாமத்துக்கு இரண்டு விதமாகப் பொருள் சொல்வதுண்டு:

ஒன்று, அக்ஷர பீடங்களில் உள்ள அம்பாளை நாம் எப்படியெல்லாம் பாராயணம் செய்யலாம் என்பது. இது ரொம்ப ஆழமாக, உபாஸனா மார்க்கத்தில் இருக்கக்கூடியவர்கள், அல்லது குருமுகமாக உபதேசம் பெற்றவர்களுக்கு மட்டுமே சாத்தியம்.

மற்றது, சாதாரணமாக நாமாவளியைத் திருப்பித் திருப்பிச் சொல்லும் முறை. தெரிந்து செய்தாலும், அதிகம் தெரியாமல் செய்தாலும், எந்தப் பாராயணத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவள்தான் **நாமபாராயண ப்ரீதா**.

நந்திவித்யா நந்திகேசுவரருடைய வித்தையின் ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள்.

தக்ஷிணாமூர்த்தியிடமிருந்து சிவஞானம் முதலில் நந்திகேசுவரருக்கு வந்ததாக கணக்கு. அதனால், சிஷ்யர்களில் குரு பரம்பரை எங்கே ஆரம்பிக்கும் என்றால், நந்திகேசுவரரிடமிருந்துதான். வித்யா குரு பரம்பரை அவ்விடத்திலிருந்துதான் தொடங்குகிறது என்று கணக்கு. அப்படிப்பட்ட வித்யா ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள் லலிதாம்பிகை.

நடேஸ்வரி - நடனமாடக்கூடியவள். நடனமாடுகின்ற ஈசுவரனுக்கு - நடராஜனுக்கு - அருகிலே இருக்கக்கூடியவள். சிவகாம சுந்தரிக்கு 'அனுகாரிணி' என்றே ஒரு பெயர் உண்டு. கூடவே ஆடக்கூடியவள் என்று பொருள். அனு என்றால் உடன், கூட என்று அர்த்தம். நடராஜர் மட்டும் தனியாக ஆடவில்லை. அவருக்கு அம்பாள் தாளம் போடுகிறாள். அப்போதுதான் அவரால் சரியாக ஆட முடியும். அவர் லயத்தில் கட்டுப்பட்டு ஆடுவதற்காக அம்பாள் எப்படியெல்லாம் தாளம் போட்டாள் என்பதை, பழைய சங்க இலக்கியம் சொல்லும்:

பாணி என்று ஒரு தாளம் போட்டாள். தூக்கு என்று ஒரு தாளம் போட்டாள்; அவர் கொடுகொட்டி ஆட்டம் ஆடினார் என்றெல்லாம் விவரங்கள் வரும்.

தோற்றப் பொய் துளைக்கும் மெய்யொளி

நித்யாஜகத்அதிஷ்டானா - நித்யமாக இருக்கக்கூடிய ஜகத்தைத் தனது



அதிஷ்டானமாகக் கொண்டவள். ஜகத் (உலகம்) பொய்யானது என்றல்லவா சொல்லப்பட்டிருக்கிறது? இங்கே ஜகத்தை நித்யம் என்று சொன்னது எவ்வாறு எனத் தோன்றும். நித்யம் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பாரதி பாடுகிறபோது, 'நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே - நீங்களெல்லாம் சொற்பனந்தானோ பல தோற்ற மயக்கங்களோ' என்று கேள்வி எழுப்பினார்.

தோற்றம் மட்டும்தான் பொய்! 'இதுதான் வடிவம்' என்று நாம் புரிந்து கொள்கின்ற உருவங்கள் பொய்யானவை. ஆனால், அவற்றுக்கு உள்ளே இருக்கிற வஸ்து உண்மையானது.

ஜகத் நித்யமானது என்று சொல்கிறபோது, வெளியே தெரியக்கூடிய வடிவங்கள் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டு நீளமாக இருக்கலாம், குட்டையாக இருக்கலாம்; கறுப்பாக இருக்கலாம் அல்லது சிவப்பாக இருக்கலாம்... இந்த வடிவ மாறுபாடுகள் என்பது அல்ல மெய்மை; வடிவம் மாறுபட்டாலும் உள்ளே உறைகின்ற தெய்வத்தன்மை இருக்கிறதே... அது எல்லாவற்றிலும் ஒன்றுதான். அந்த உள்ளுறை பொருள் சத்தியமானது, உண்மையானது.

ஆகவே பாரதியார் பாடுகிறபோது, 'நீங்களெல்லாம் அற்ப மாயைகளோ, உம்முள் ஆழ்ந்த பொருள் இல்லையோ?' என்று கேட்கிறபோது என்ன அர்த்தம்...? உள்ளே உயர்ந்த பொருள்தான் உறைகிறது; வெளித் தோற்றம் மட்டும் பொய் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

அம்பிகை பராசக்தி, இவ்வுலகின் அழியக்கூடிய, நிலையற்ற வடிவங்களுள் நிலையாக உறைகின்ற உண்மை. அந்த உண்மையின் வடிவமாக எல்லாவற்றுக்குள்ளேயும் அவள் உறைகிறாள்.

முக்திதா - முக்தியின் ஸ்வரூபமாக இருக்கக் கூடியவள்.

முக்திரூபிணி - முக்தி ஸ்வரூபமாக இருந்துகொண்டு, நமக்கு முக்தியைத் தரவும் வல்லவள்.



மென்மையான நடனம்

லாஸ்யப்ரியா - லாஸ்யம் என்றால் பெண்கள் ஆடக்கூடிய நடனம். ஆண்கள் ஆடும் நடனத்துக்குத் தாண்டவம் என்று பெயர். 'தட் தட்'டென்று தட்டும் ஒலியுடன் ஆடுவதால் தாண்டவம் என்ற பெயர் ஏற்பட்டதாம். லாஸ்யம் என்

பதோ மென்மையான அசைவுகள் கொண்டது. அந்த லாஸ்யத்தின் மீது ப்ரீதி கொண்டவளாக இருக்கிறாள் அம்பாள்.

இதற்கு இன்னொரு அர்த்தமும் சொல்லலாம்: சாதாரண ஜீவன்கள் மென்மையானவர்கள் (அதனால்தான் அவர்களுக்குப் பசுக்கள் என்று பெயர்.) அந்த ஜீவன்கள் பரம்பொருளின் நடனத்துக்குள் ஐக்கியப்படும்போது, அவர்கள் ஆடும் நடனத்தைப் (லாஸ்யத்தை) பார்த்து ப்ரீதி அடையக்கூடியவள் லாஸ்யப்ரியா. ஜீவன்களைப் பரம்பொருளோடு கொண்டு சேர்ப்பதில் அவ்வளவு ஆனந்தமாம் அம்பிகைக்கு!

லயகரி - லயம் தரக் கூடியவள். லயம் என்றால் பேதமில்லாத, தடையற்ற இயக்கத்தில் நகரும் விஷயம் என்று அர்த்தம்.

வாழ்க்கையில், ஜகத்தில் இந்த லயத்தைத் தரக்கூடியவள் அம்பிகை. அனைத்தையும் சரியான விதத்தில் பொருத்தக்கூடியவள். ஆகவே **லயகரி**.

அழகான நாணம்

லஜ்ஜா - லஜ்ஜையோடு இருக்கக் கூடியவள். பெண் ஸ்வரூபமாக இருப்பதனாலே, அதற்குரிய நாணம் படைத்தவள். எதெதற்கு நாணப்பட வேண்டுமோ அததற்கு நாணப்பட்டு, எதற்கு நாணப்பட வேண்டாமோ அதற்கு நாணாமல் இருப்பதுதான் லஜ்ஜை.

உணர்வுகளை மொத்தமாகத் தூக்கிப் போட்டு விட முடியாது. பயம் வேண்டாம், கூடாது என்கிறோம். ஆனால், எதற்குப் பயப்பட வேண்டுமோ அதற்குப் பயப்பட வேண்டும்; எதற்குப் பயப்படக் கூடாதோ அதற்குப் பயப்படக் கூடாது. அதே மாதிரி தான் நாணமும், அப்படிப்பட்ட உயரிய நாணம் என்கிற உணர்வையும் கொண்டிருக்கக் கூடியவள் **லஜ்ஜா**.

ரம்பாதி வந்திதா - ரம்பை போன்றவர்களால் வந்திக்கப்படக் கூடியவள்.

இதற்குப் பிறகு வரக்கூடிய சில திருநாமங்கள், அம்பாள் எவ்வாறு அவரவருக்கும் தேவையோ அப்படியெல்லாம் அருள் கடாக்ஷிக்கிறாள் என்பதைச் சொல்கின்றன.

சம்சாரம் எனும் காட்டுத் தீ!

பவதாவசுதா வ்ருஷ்டி - பவதாவ சுதா வ்ருஷ்டி என இதைப் பிரித்துப் பார்க்க வேண்டும். சுதா வ்ருஷ்டி என்றால் அமுத மழை. அவள் அமுத மழையைப் பொழிகிறாள். எதற்காக...? **பவதாவ** - ஒரு பெரிய காட்டுத் தீ - பிறவி என்கிற காட்டுத் தீ - சம்சாரம் என்கிற காட்டுத் தீ அப்படியே பற்றிப் பரவி எரியும்போது அமுத மழையைப் பொழிந்து அந்தக் காட்டுத் தீயை அணைக்கிறாள்.

பவதாவ - பவ ரோகம் என்று சொல்கிறோமே, அந்த சம்சாரப் பிணி. - பவம் - என்பது பெரிய நெருப்பாகப் பற்றி எரிகிறது. காட்டிலே தீப்பற்றினால் அணைப்பது ரொம்ப கஷ்டம். தானாகவே பற்றிக் கொண்டு அங்கங்கே பரவிக்கொண்டே போகும். கட்டுப்படுத்தவே முடியாது. சம்சாரமும் அப்படித்தான். அதில் சிக்கிக் கொண்டு விட்டோமானால், எப்படிக் கட்டுப்படுத்துவது என்றே தெரியாது!

(வளரும்)

'நீங்களெல்லாம் அற்ப மாயைகளோ, உம்முள் ஆழ்ந்த பொருள் இல்லையோ?'

ம.ந.ராமசாமி

"டாக்ஸி!"

மெல்லச் சென்ற டாக்ஸி ஓட்டுநரின் காதுகளில் குரல் விழுந்தது. நிறுத்தித் திரும்பிப் பார்த்தான். ஓர் இளைஞனும், அவனது மனைவியும், சின்னஞ்சிறு பொம்மையான சிறுமியும் சாலை ஓரமாக நின்றிருந்தனர். வண்டியை ரிவர்ஸ் செய்து அவர்களை நெருங்கி நிறுத்தினான்.

அருகில் அவர்களைப் பார்த்த போது, மனத்துள் கல் விழுந்தாற் போல திடுக் என்றது. அந்தப் பெண் சாரதா. சந்தேகமே இல்லை. தெரிந்தவள். மிக நன்றாகத் தெரிந்தவள். சற்றுப் பூசினாற்போல இருக்கிறாள். மற்றபடி மாற்றம் இல்லை.

அவனைக் கண்டதும் அவளும் திடுக்கிட்டு இருக்க வேண்டும். முகம் சற்று வெளிறியதைக் கண்டான்.

"மேலப்பாக்கம் போகணும்" என்றான் கணவனான இளைஞன்.

"ஏறுங்க, சார்."

"மீட்டர் சார்ஜ்தான் கொடுப்பேன்."

"கொடுங்க, சார்!" மீட்டரை ஆன் செய்தான்.

"அப்புறம் அங்கே வந்து தகராறு செய்யக் கூடாது."

"நீங்க இப்படிப் பேசுறதாக இருந்தா, டாக்ஸி வராது."

"கோவிச்சுக்கிடாதே. முன்னதாகவே சொல்லி வைக்கிறேன்."


"ஏறுங்க."

அமர்ந்தனர்.

அமர்ந்திருந்தவர்களிடையே இயல்புக்கு மாறான மௌனம். நகரில் அரை கிலோ மீட்டர் வண்டி ஓடிய பிறகு அந்தப் பெண் சாரதா, கவிந்த மௌனத்தைக் கலைத்தாள்.

"ஸ்டேட்ஸுக்கும் இந்தியாவுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கு."

தான் இப்போது அமெரிக்காவில் வாழ்வதாக அவள் அவனிடம் தெரிவிப்பதான தகவல்.




"அங்கே வெறும் மெடீரியலிசம். இங்கே ஸ்பிரிச்சுவலிசம். வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்" என்றான் கணவனான இளைஞன்.

"இருந்தாலும் அங்கே இருக்கிற சுத்தம், ஒழுங்கான பராமரிப்பு இங்கே இல்லை."

"வாஸ்தவம்தான். அமெரிக்கர்கள்

பொறுப்புள்ளவர்கள். இங்கே பொறுப்பு கிடையாது.''

''அதோ அந்தத் தபால் பெட்டியைப் பாருங்க. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆக்கிரமித்தபோது ஏற்படுத்திய தபால் துறையின் முதன்முதலான தபால் பெட்டியாக அது இருக்க வேண்டும். நசுங்கி, நிறம்



போய், சாய்ந்து அடிமரத்தில் தொங்குகிறது.''

''அதைச் சொல்கிறாயே, மின்சாரக் கம்பத்தில் இருக்கிற ஸ்விட்ச் பாக்ஸைப் பார்த்திருக்கிறாயா? திறந்து போடப்பட்டு, ஃப்யூஸ் ப்ளக் இல்லாமல், ஒயர் எல்லாம் முறுக்கி விடப்பட்டிருக்கும். ஒரு லைன் மேனிடம் கேட்டேன். 'ஏனப்பா இப்படி இருக்கு, பராமரிப்புக்கு நிதி ஒதுக்குவது உங்க எலக்ட்ரிசிடி போர்டுலே கிடையாதா?' என்று. 'உண்டுங்க. அது எல்லாம் பெரிய இடத்துக்குப் போயிடுதுங்க' என்றான். ஊழல் உலகம் முழுதும்தான் இருக்கு. அமெரிக்காவில் தேன் எடுத்தால், புறங்கையை மட்டுமே நக்குவார்கள். இங்கே எடுத்த தேனையே கபளீகரம் செஞ்சிடுவாங்க...''

''இங்கேயும்தான் ஊட்டி, கொடைக்கானல், சிம்லா, டார்ஜிலிங் என்று மலை வாசஸ்தலங்கள் இருக்கின்றன. ஆனால், நாம் வீடு கட்டிக்கொண்டு இருக்கிறோமே, மலைச் சரிவு, அதுபோல வராது. நம் வீட்டு வாசல்புறம் வழியாக மேகம் வீட்டுக்கு உள்ளே வந்து கொல்லைப்புறம் வழியாக வெளியே போறது. ஏர்கண்டிஷனரே வேண்டாம்.''

கணவன் இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

இப்படி அமெரிக்காவில் இனியதாக வாழ்க்கையைக் கழிப்பதாக அவள் தன்னிடம் தெரிவிப்பதாக ஓட்டுனரான இளைஞன் புரிந்துகொண்டான்.

கவனத்தில் இன்றும் பசுமையாக இருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்

சுழல்வதான உலகம்

நடந்த அதிர்ச்சி தருவதான நிகழ்ச்சி அது. இதே பெண், கணவன் அருகில் அமர்ந்து மனம் விட்டு இப்போது பேசி வருகிறாளே, இந்தப் பெண் ஒரு மாலைப் பொழுதில் அவனுடைய டாக்ஸியின் பின் பக்கக் கதவைத் திறந்து, ஏறி இருக்கையில் அமர்ந்தாள். அன்றைய மாலை நேர

நாளிதழைப் பார்த்துக்கொண்டு இருந்தவன், அதை மடித்துப் பக்கத்து இருக்கையில் வைத்து விட்டு, ''எங்கேம்மா போகணும்?'' என்று கேட்டான்.

''உங்க வீட்டுக்கு.''

''என்னங்க?''

''உங்க வீட்டுக்கு.''

''என் வீட்டுக்கு எதுக்கு?''

''உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

அதிர்ச்சி! அதிர்ச்சி என்றால் அப்படி ஓர் உயர்மின் சக்தி அதிர்ச்சி.

''இறங்குங்கம்மா.''

''மாட்டேன்.''

திரும்பி அவளைப் பார்த்துப் பேசிக்கொண்டு இருந்தவன், கூர்ந்து கவனித்தான். கல்லூரி மாணவியாக இருக்க வேண்டும். பார்க்கும்போது மனத்தில் எவ்வித வக்கிர எண்ணங்களும் தோற்றுவிக்காத ஒருவித தெய்விகமான, தரிசிப்பதான உருவம். இருந்தாலும் அந்தக் கண்களில் தெளிவு இல்லை. மயங்கிய கிட்டப் பார்வை. குடித்துவிட்டு வந்து இருக்கிறாளோ? இருக்காது. பேச்சில் குளறல் இல்லை. தெளிவாக, புத்தகத்தைப் படிப்பது போல திருத்தமாகப் பேசுகிறாள்.

''உங்க வீடு எங்கே?''

''சொல்ல மாட்டேன். வீட்டுக்குக் கொண்டு போய் இறக்கி விட்டுட்டுப் போயிடுவீங்க.''

மிகத் தெளிவாகத்தான் இருக்கிறாள் என எண்ணிக் கொண்டான்.

''போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவேன். அங்கே உங்களை ஒப்படைக்கப் போறேன்.''

''ஐயோ வேணாங்க. தயவுசெய்து என்னை உங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்க.''

''எதுக்கு?''

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'' - அதே பதில்.

நிதானித்தான். ''உங்க பேர் என்ன?''

''சாரதா.''

''கையிலே பெட்டி, துணிமணி இல்லாம வந்து இருக்கீங்களே, மாற்றிக் கட்டிக்க சுடிதார்-கமிஸ், சேலை வேணாமா?''

''அட, ஆமா! தோணல்லே.''

''என்னை உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''கனா கண்டேன்.''

''என்ன கனா?''

''நீங்க இப்படி இதே இடத்தில் இருந்தீங்க. உங்களுக்கு மாலை போட்டு நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். பகல் பூரா இதை இன்னிக்கு யோசிச்சுப் பார்த்தேன். கனாப்படி இருக்குதான்னு பார்க்க வந்தப்ப, கனாவுலே பார்த்த அதே டாக்ஸி இங்கே இருக்கு. கனாவுலே பார்த்த அதே மனுஷர் நீங்க...'' சொல்லிக்கொண்டே சென்றாள் பெண்.

தான் இப்போது கனவு காண்கிறோமா என்ற எண்ணம் அவனுள் எழத் தொடங்கியது. இது உண்மையாக இருக்குமா, இல்லை, பொய் சொல்கிறாளா?

''தயவுசெய்து இறங்குங்கம்மா. நான் பெரிய குடும்பக்காரன். அப்பா, அம்மா, அண்ணன், அவர் மனைவி, என் தங்கச்சின்னு கூட்டுக் குடும்பம் எங்களோடது... நீங்க வந்தீங்கன்னா, படுக்கக்கூட இடம் கிடையாது வீட்டுலே. இறங்குங்க'' கெஞ்சினான்.

''மாட்டேன்.''

டாக்ஸியைக் கிளப்பி, அவளுடன் தன் வீடு சென்றான். தன் குடும்பத்தினரிடம் அவளைப் பற்றித் தெரிவிக்க, அவர்கள் சந்தேகப்பட்டார்கள். மறுநாள் திரும்பி அதே இடத்துக்கு வந்து, அந்தப் பக்கம் பெண் எவளாவது காணாமல் போய் இருக்கிறாளா என்று தெருவுக்குத் தெரு சென்று

''நாம காசு தர்றோம். அவன் அழைச்சிண்டு வரான். இதுக்கு நன்றி எதுக்கு?''

விசாரித்தான். களேபரமாகக் கிடந்த ஒரு வீட்டில் அவனுக்குப் பதில் கிடைத்தது. பெண்ணின் தாய், தந்தை இருவரையும் தன் டாக்ஸியில் ஏற்றி வந்து வீட்டில் அந்தப் பெண்ணைச் சந்திக்க வைத்தான்.

அவளைத் தங்களுடன் திரும்பக் கூட்டிச் செல்லப் பெற்றோர்களுக்குப் பெரும்பாடாக இருந்தது. வீடு திரும்ப மறுத்து விட்டாள். அவனுக்கே இப்படியும் ஒரு பெண் இருப்பாளா என்று இருந்தது.

முடிவாகக் கூடிப் பேசினர். ''இதோ பாரு, பொண்ணு. இப்படி எல்லாம் மாற்றுத் துணி கூட இல்லாம வர்ற பொண்ணை எங்க மகனுக்கு நாங்க கல்யாணம் கட்டித் தர மாட்டோம். பேசாம வீட்டுக்குப் போ. பொண்ணு கேட்டு நாங்களே உங்க வீட்டுக்கு வர்றோம். உன்னோட அப்பா, அம்மா சம்மதத்தோடு உன்னை எங்க மருமகளா நாங்க ஏத்துக்கறோம்'' என்றார் அவனுடைய தாய். தன் தாயின் அறிவாற்றலில், பேச்சுத் திறமையில் என்றுமே அவனுக்கு நம்பிக்கை உண்டு.



தயங்கினாள் சாரதா. முடிவில் பெற்றோருடன் சென்றாள். அவனை உட்காரச் சொல்லி, கத்தை ரூபாய் நோட்டுக்களைக் கொடுக்க முன்வந்தார் அவள் தந்தை. ஏற்க மறுத்து விட்டான். விலையா?

மேலப்பாக்கத்தில் அதே வீட்டின் முன் டாக்ஸி நின்றது. கணவன், மகளுடன் சாரதா இறங்கினாள். டாக்ஸி சத்தத்தைக் கொடுக்க கணவன் பர்ஸைத் திறந்து கொண்டிருந்தபோது, அவனைப் பார்த்து அவள், ''ரொம்ப நன்றிங்க!'' என்றாள். முகத்தில் மலர்ச்சி.

தலையசைத்து அவன் ஏற்றுக் கொண்டான். மனம் நிறைந்தது.

திரும்பிய கணவன் அவளிடம், ''எதுக்கு நன்றி? நாம காசு தர்றோம், அவன் அழைச்சின்டு வரான். இதுக்கு நன்றி எதுக்கு?'' என்றான்.

இருக்கையில் ஏறி அமர்ந்து வண்டியைக் கிளப்ப முயன்றவன் காதுகளில் இந்தப் பேச்சு தெளிவாக விழுந்தது. ●

நடனக் கலைஞரும், பெரிய திரை, சின்னத்திரை நடிகையுமான சொர்ண மால்யா, பழங்கால கல்வெட்டுகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டு, ''அப்படியா மேடம்?' என்றபடி, அவரை அணுகினோம். கலைஞர் தொலைக் காட்சிக்கான தொடருக்காக ஏ.ஆர்.எஸ். கார்டனில் படப்பிடிப்பில் இருந்த அவர் உற்சாகமாகப் பேசத் தொடங்கினார்.

''பரத நாட்டியம் குறித்து எனக்கு ஆர்வமூட்டி அது தொடர்பான விஷயங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் மறைந்த டி.எஸ்.பார்த்தசாரதி. இவர் மியூஸிக் அகடமியின் செயலாளராக இருந்தவர். அவர் எனக்குள் உண்டாக்கிய அறிவுத் தாகம், கல்வியிலும் நடன முயற்சியிலும், புதுப்புதுக் கதவுகளைத் திறந்து வைத்தது. சோஷியாலஜி, எம்.பி.ஏ என்றெல்லாம் முடித்துவிட்டு சென்னை பல்கலையில் பரதநாட்டியம் முதுகலையில் தேர்ச்சி பெற்றேன்.

ஆராய்ச்சி

பரதக் கலையின் மூலத்தைக் குறித்து டாக்டர் பத்மா சுப்பிரமணியம் நிறையவே ஆராய்ச்சி செய்து புதிய விஷயங்களை உலகுக்குச் சொல்லியிருக்கிறார். தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சியில் இயல், இசை, நாடகம், நாட்டியம் ஆகியவை எந்த நிலையில் இருந்தன; எப்படி வளர்ந்தன என்பது குறித்துப் பல ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன. பத்மா எனக்குள் உண்டாக்கிய இன்ஸ்பிரேஷன்தான் என்னையும் பரதம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட வைத்தது.

நாயக்கர் காலம்

நான் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட தலைப்பு 'நாயக்கர் காலத்து நாட்டிய முறைகள்'. இது தொடர்பாக அடிக்கடி தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்துக்குப் போக வேண்டியிருந்தது. அந்த நூலகம் ஒரு பொக்கிஷம். ஒவ்வொரு புத்தகம் மற்றும் சுவடியையும் துருவினால் கிடைப்பது பழம்பெருமை பேசும் புதையல். அந்தச் சமயத்தில்தான் எனக்கு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் டாக்டர் சத்திய மூர்த்தி மற்றும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் டாக்டர் ராமச்சந்திரன் ஆகியோரோடு அறிமுகம் கிடைத்தது.

காஞ்சி முனிவர் காட்டிய வழி

ஒவ்வொரு மனிதனும் தன் குலப் பெருமையை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்வார் பரமாச்சாரியார். அந்த வகையில் முயற்சியைத் தொடங்கினேன். என் அம்மாவின் முன்னோர்கள் வசித்த ஊர் திருச்சி - முசிறி பாதையிலுள்ள காட்டுப்புத்தூர் கிராமம். நாங்கள் அப்பய்ய தீட்சிதர் பரம்பரை. எங்கள் முன்னோர்களில் ஒருவரான வைத்திய நாத தீட்சிதர் லலிதா சஹஸ்ரநாமத்துக்குப் பாஷ்யம் எழுதியவர். காட்டுப்புத்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கோயில் பிராகாரச் சுவர்களில் எழுதியுள்ளவற்றைப் படித்தால் என் மூதாதையர் பற்றிய மேலும் பல விவரங்கள் தெரியக் கூடும் என்று நினைத்தேன். அதேசமயம் என் நாட்டிய ஆராய்ச்சிக்கான தேடுதலில் சில பழங்காலக் கல்வெட்டுக்களை அடையாளம் காண முடிந்தது. ஆனால் ஒரு வருத்தம். கல்வெட்டுகளில் உள்ளவற்றைப் படிக்க முடியவில்லையே என்பதுதான்

வேர்களைத்

அது. 'நான் வழி காட்டுகிறேன்' என்று டாக்டர் ராமச்சந்திரன்தான் கோயில் சுவர்களிலும் கல்வெட்டுகளிலும் உள்ள வட்டெழுத்தைப் படிக்கக் கற்றுக் கொடுத்தார். அவர் அப்படி கண்ணைத் திறந்துவிட, என் பயணம் வித்தியாசமான பாதையில் தொடர்ந்தது.

பழம்பெருமை!

கிருஷ்ண தேவராயர் காலத்தில் என் மூதாதையர்களான யஜுர்வேதி பிராமணர் களுக்கு ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்பட் டிருக்கிறது. இவையெல்லாம் எங்கள் ஊரைச் சுற்றியுள்ள கோயில் கல்வெட்டுக் களில் இருந்து தெரிய வந்தது. வேர் களைத் தேடிச் சென்ற என் பயணம் இப்போது முழுக்க, முழுக்க என்னைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளராகவே மாற்றிவிட்டது. நேரம் கிடைக்கும் போது காட்டுப்புத்தூருக்கும், தஞ் சைக்கும் பயணித்து வருகிறேன். நான் பிரபலமாக இருப்பது என் ஊர் மக்களின் ஒத்துழைப்பைப் பெற உதவியாக இருக்கிறது. என் தேடுதல் வேட்டையில் அய்யலூர் என்ற ஊரில் பாண்டியர் காலத்தில் கட் டப்பட்ட கோயில் ஒன் றைக் கண்டுபிடித் தோம். அது தொடர் பான கல்வெட்டுக் களைத் தீவிரமாக ஆராய்ந்து கொண் டிருக்கிறோம்.

வித்தியாசமான சொர்ணமால்யா!

தொல்லியல் ஆராய்ச்சி தொடர்பான பல்வேறு குழுக்கள், அமைப்புகளின் அறி முகம் இப்போது கிடைத்துவிட்டது. கண்டு பிடிக்கும் ஒவ்வொரு புதிய விஷயமும் மனம் முழுக்க உற்சாகம் தருகிறது. வெளி நாடுகளில் பாரம்பரியப் பெருமைகளைத் தோண்டியெடுக்கும் தொல்பொருள் நிபு ணர்களுக்கு மக்களிடம் நல்ல மரியாதை உண்டு. அது போன்று இந்தியாவிலும் வர வேண்டும்.

- ஸ்ரீநி



தேடி....!

அம்மாவோட சேல... அந்த ஆகாசத்துப்போல...

வந்து குவிந்த கடிதங்களில் பத்து வாசகர்களின் 'இதயம் தொட்ட இசை' அனுபவங்கள் பதிவாகியுள்ளன. பங்கேற்ற வர்களுக்கு நன்றிகள். வெற்றி பெற்றவர் களுக்கு ஒய்.ஏ.சி.எம். வழங்கும் சி.டி. பரிசு அனுப்பி வைக்கப்படும். (ஆ-ர்)

❁ 1954-ல் நடந்த திருவையாறு ஆரா தனை மனத்தை விட்டு அகலாத நாள். வேட்டி, ஜிப்பா, அங்கவஸ்திரத்தோடு ஒரு அமெரிக்க இளைஞர் பாடிய 'ஈவகதா'



என்ற சஹானா உருப்படி என் இதயம் தொட்ட இசை. இன்னும் அந்தச் சுகத்தை மறுபடி யாரும் தரவில்லை.

- வி.ராமசாமி, காரைக்குடி.

❁ ஐந்து ஆண்டுகளுக்கு முன் என் மனைவி இறந்து தனிமையில் பைத்தியம் பிடித்தது போன்ற சூழலில்... என் செவி யில் வந்தடைந்த 'மன்னவனே அழலாமா? கண்ணீரை விடலாமா..?' பாடல் ஆறுதல் படுத்தி, பொறுப்பை உணர்த்தி என்னைத் தெளிவாக்கியது. இன்றும் அப்பாடல் பழைய சூழலை நினைவூட்டும்.

- என்.சண்முகம், திருவண்ணாமலை

❁ ராஜாஜி எழுதி எம்.எஸ். அம்மா பாடிய 'குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா' பாடல் அன்று மட்டு மல்ல, இன்றும் சக்தி மசாலா விளம்பரத் தில் மாற்றுத் திறன் கொண்ட தொழிலாளர் களைக் காண்பித்துப் போடுகையில் இத யத்தை வருடிக் கொண்டேயிருக்கிறது.

- பூ.ச.சேஷன், பெங்களூரு

❁ மயான காண்டம் நாடகத்தில்... பஃபூன் கழுகுமலை சுப்பையா பாடிய, என் இதயம் வருடிய இசை, 'நாக்குல மூக்குல நத்துப் புல்லாக்குல... ஓலச் சுருட் டுல ஒன்னப்புத் தட்டுல'. படுவேகப் பாடலில் மயங்கி அந்த நள்ளிரவில் கிராமத்தில் நண்பர்களோடு ஆடிய காலம் கல்வெட்டாய் மனத்தில் நிற்கிறது. இன்றைய 'நாக்க மூக்க' திரைப்பாடலின் ஒரிஜினல் அது. அந்த உல்லாசத்தை வேறு பாடல் இதுவரை தந்ததில்லை.

- இரா.கல்யாணசுந்தரம், மதுரை-9

❁ ஓராண்டு இடைவெளியில் தாயும் தந்தையும் காலமாக, கவலையோடு இருந்த சமயம் சகோதரியோடு கோயிலுக்குப்

'இதயம் தொட்ட இசை' -போட்டி முடிவுகள்

போனபோது... லதா ரஜினி பாடிய.... 'கடவுள் உள்ளமே; கருணை இல்லமே தந்தையில்லை, தாயுமில்லை, தெய்வ மின்றி யாருமில்லை' கேட்க நேர்ந்தது. அப்பாடல் கண்ணீரை வரவழைத்து என்னை ஆறுதல்படுத்தி என் இதயம் வருடியது. அனாதை இல்லக் குழந்தைகளிடம் அன்பைத் திருப்பச் செய்தது.

- என்.சாந்தினி மதுரை

❁ ஒருமுறை வானொலி நிகழ்ச்சியில் (பாடியவர் பெயர் தெரியாது) ஒரு கிராமியப் பாடலைக் கேட்டேன். 'அம்மாவோட சேல அந்த ஆகாசத்தப் போல' என்று ஆரம்பிக்கும் பாடல் தாயின் மகத்துவம் சொல்லும். இன்று வரை அந்தப் பாட்டை மிஞ்சி எந்தப் பாட்டும் என்னை மயக்கவில்லை. பெயர் தெரியா அந்தக் கலைஞனை வாழ்த்தியபடியே இருக்கிறேன் இன்றும்.

- ஸ்ரீதேவிராஜன், திருவிடைமருதூர்

❁ மகளைக் காண வெளிநாடு போக முடிவெடுத்து விமானம் ஏறியவுடன் அண்ணன் இறந்ததாய் தகவல் வர, அன்று இரவே மீண்டும் சென்னை வந்தோம். வந்ததும் கடும் ஜுரத்தில் ஹாஸ்பிடலில் அட்மிட் ஆனோம். வெளிநாடும் போகாமல் காலமான அண்ணனையும் காண முடியாத போது என் காதுகளில் ஒலித்த பாடல்: 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை.'

- என்.சீத்தாலட்சுமி, சென்னை

❁ தருமபுரி - அரூர் காட்டுப் பகுதியில் மரம் வெட்டியவர்களின் டேப் ரிக்கார்டரில் கேட்ட 'துளித்துளியாய்... கொட்டும் மழைத்துளியாய்' என்ற பாடல் வனப் பகுதியை இன்னும் அழகாக்கியது. நெஞ்சை விட்டு அகலா பாடல்.

- எச்.குருசாமி, ஒத்தக்கடை

❁ பத்தாம் வகுப்பு படித்த சமயம்... அம்மாவுக்கும் எனக்கும் சண்டை. என்னைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல வண்டியை ஸ்டார்ட் செய்தபடி வெளியே நின்ற அப்பா, 'அம்மா காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுட்டு வா' என்றார். நான் விழவில்லை. அம்மாவோ, 'பரவாயில்லை போடி' என்றார். அதிசயமாய் என்



காதில் விழுந்தது... 'அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை. அவர் அடி தொட மறுப்பவர் மனிதரில்லை.'

- ஜி.கிருஷ்ணவேணி, பெங்களூரு

❁ மயிலாப்பூர் ராககதா ஹாலில் சுதா ரகுநாதனின் மாலைக் கச்சேரி. அவர் பாடிய முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பைரவி ராக கீர்த்தனை 'பால கோபால' என் காதில் கணீரென்று ஒலித்தது; சரஸ்வதியே நேரே வந்து பாடியது போல. இன்னும் என் நெஞ்சைத் தொடும் இசை அதுதான்.

- தே.பார்த்தசாரதி, சென்னை



சுதந்திரத்தையே விற்ற நாடு

வாமன தேசங்கள்

ஆண் வாரிசு இல்லாமலேயே அந்த இளவரசர் இறந்து விட்டால் மொனாகோ ஃபிரான்ஸுக்குச் சொந்தமாகி விடும்!

சென்னையை விடுங்கள். அதிலுள்ள ஒரு சராசரி தொகுதி அளவுக்குக் கூட இருக்காது மொனாகோ. இரண்டு சதுர கிலோமீட்டரைவிடக் குறைவான பரப்பளவு.

அப்படியானால் பிரபல பன்னாட்டு நிறுவனங்கள் மொனாகோவில் தங்கள் கிளைகளைத் திறக்க ஆர்வம் காட்டுவது ஏன்? தெரிந்து கொள்ள மொனாகோவின் சரித்திரப் பக்கங்களைக் கொஞ்சம் புரட்ட வேண்டும்.

சில வருடங்களுக்கு முன் இப்போது இருப்பதைவிடக் குறைவான பரப்பளவு கொண்டதாகத்தான் மொனாகோ இருந்தது. கடல் கொஞ்சம் பின்னடைந்ததால் இலவசமாக 100 ஏக்கர் பரப்பளவு வந்து சேர்ந்திருக்கிறது!

1861க்கு முன்பு இப்போதைப் போல இரண்டு மடங்கு அதிகமானதாக இருந்தது மொனாகோ. என்ன செய்ய..! நிதி தேவைப்பட, தன்னில் பாதியை ஃபிரான்ஸுக்கு விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது மொனாகோவுக்கு.

இதனால் நிலப்பகுதியை மட்டுமல்லாமல் அதில் உள்ள இயற்கை வளங்களையும் சேர்த்தே இழந்ததனால் மொனாகோவின் பொருளாதாரத்துக்கு மிகவும் பாதிப்பு. அதைச் சரிக்கட்ட அப்போதைய இளவரசர் மொனாகோவில் 'மாண்டே கார்லோ'வை உருவாக்கினார். அதற்குப் பிறகு உலகத்து கோடீஸ்வரர் எல்லாம் இங்கு வந்து ஆனந்தமாகத் தங்கள் பணத்தைத் தொலைத்துவிட்டுப் போவது வாடிக்கையாகிவிட்டது.

'ஜி.எஸ்.எஸ்.' மற்றும் 'அருண் சரண்யா' என்ற பெயர்களில் எழுதும் ஜி.எஸ்.சுப்ரமணியன் பல தளங்களில் தடம் பதித்தவர். குருக்ஷேத்ரம், தீராத விளையாட்டு விட்டலன் போன்ற தொடர்களை கல்கியில் எழுதியவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட இவரது நூல்கள் வெளியாகியுள்ளன. அதிகம் அறியப்படாத குட்டி நாடுகளைப் பற்றி பெட்டிப் பெட்டியாய் செய்திகளை இந்தத் தொடரில் அளிக்கிறார்.

ஜி.எஸ்.எஸ்





மொனாகோ 1

* கிரேஸ் கெல்லி

மாண்டே கார்லோ பகுதியில் உலகப் புகழ்பெற்ற காசினோக்கள் (சூதாட்ட நிலையங்கள்) இருக்கின்றன. (007 ரசிகர்களுக்கு ஒரு கூடுதல் தகவல் - முதல் ஜேம்ஸ்பாண்ட் கதைகூட மொனாகோவில் உள்ள காசினோக்களைப் பின்னணியாகக் கொண்டு உருவானதுதான்).

தனக்கு ராணுவப் பாதுகாப்பு வேண்டும் என்று ஃபிரான்ஸை அணுகியது மொனாகோ. ஒப்பந்தம் போட்டுக் கொள்ளத் தயாரானது ஃபிரான்ஸ். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் உள்ள ஒரு முக்கிய நிபந்தனை மொனாகோவை அதிர வைத்தது!

'இனி மொனாகோ தன் சுதந்திரத்தை ஃபிரான்ஸுக்கு விட்டுத் தந்துவிட வேண்டும்'. மறுத்தது மொனாகோ. மீண்டும் இருதரப்பிலும் பேச்சுவார்த்தை. கடைசியில் மிகமிக விநோதமான ஒரு நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டது மொனாகோ.


அப்போது மொனாகோவை ஆண்டு வந்த இளவரசர் மூன்றாம் ரெய்னியர் (Rainaear) திருமணமாகாத இளைஞர். 'ஆண் வாரிசு இல்லாமலேயே அவர் இறந்துவிட்டால் மொனாகோ ஃபிரான்ஸுக்குச் சொந்தமாகி விடும்!'.

இளவரசருக்குத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணமே இல்லை என்று தெரிந்தே ஃபிரான்ஸ் இதனை வலியுறுத்தியது.

மனம் மாறியதோ அல்லது உடன்படிக்கை காரணமாக மனத்தை மாற்றிக் கொண்டாரோ தெரியாது; இளவரசர் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தார். அந்தப் பெண் உலகெங்கும் பல ஆண்களின் கனவுநாயகியாக விளங்கிய நடிகை கிரேஸ் கெல்லி (Grace Kelly)!

திருமணம் நடந்தது. குழந்தையும் பிறந்தது. அது ஆண் வாரிசு! 'விடுதலை





விடுதலை' என்று ஆனந்தக் கூத்தாடினார்கள் மக்கள்!

இன்றுவரை மொனாகோவில் மன்னர் ஆட்சிதான். இதன் அதிகாரபூர்வமான பெயர்கூட (பிரின்ஸ் என்ற ஆங்கில வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட) 'The Principality of Monaco' என்பதுதான். ஏழு நூற்றாண்டுகளாக மொனாகோவை ஆட்சி செய்வது கிரிமால்டி (Grimaldi) குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள்தான்.

1297-ல் ஃபிராங்காயிஸ் கிரிமால்டி என்பவர் துறவி வேடத்தில் ஒரு சின்னப் பையோடு நுழைந்து மொனாகோ கோட்டையைத் தம் வசமாக்கிக் கொண்டதிலிருந்தே அது அவர்கள் ராஜ்ஜியம்தான். (சமீப காலமாக, போனால் போகிறது என்று ஒரு தேசியக்குழுவுடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க பெரிய மனது செய்திருக்கிறார் இளவரசர்).

மண்ணின் மைந்தர்களுக்கு வருமான வரி கிடையாது. ஆனால் அவர்கள் காசினோக்களில் ஆடக்கூடாது.

1943ல் இத்தாலிய ராணுவம் மொனாகோவைக் கைப்பற்றியது. ஒருவிதத்தில் கொடுங்கோல் ஆட்சிதான். பின் ஜெர்மனியைச் சேர்ந்த நாஜிக்களின் பிடிக்குள் அது சென்றது. இந்த நிலையில் தான் மூன்றாம் ரெய்னியர் பட்டத்துக்கு வந்து ஃபிரான்ஸின் ராணுவ உதவியைக் கோரினார். 56 வருடங்கள் இவர் தொடர்ந்து ஆட்சி புரிந்ததைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.


மொனாகோவில் இன்று ஐந்தில் ஒருவர்தான் உள்ளூர்வாசி. வெளிநாடுகளிலிருந்து மொனாகோவுக்கு வந்து நிரந்தரமாகத் தங்குபவர்களின் எண்ணிக்கை இந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன தெரியுமா? காசினோக்களா? இல்லை. மொனாகோவில் வருமான வரி கிடையாது என்பதுதான் முக்கியக் காரணம். இதனால்தான் பன்னாட்டு நிறுவனங்கள் மொனாகோவில் தங்கள் கிளையைத் திறப்பதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றன.


ஆனால் இதற்கும் வந்தது வேட்டு. பல நாடுகளும் இப்படித் தங்கள் செல்வம் மொனாகோவில் குவிவதைக் குறித்து எதிர்ப்பு தெரிவிக்க, மொனாகோ சமீப காலமாக ஒரு வித்தியாசமான நடைமுறையைப் பின்பற்றுகிறது.


வெளியூரிலிருந்து வந்து தங்குபவர்களுக்கு வருமானவரி உண்டு. காசினோக்களில் தாராளமாக அவர்கள் சூதாடலாம்.

மண்ணின் மைந்தர்களுக்கு வருமான வரி கிடையாது. ஆனால் அவர்கள் காசினோக்களில் ஆடக்கூடாது. ஆடுவது மட்டுமல்ல. நுழையவே கூடாது!

சூதாட்டத்துக்கு மட்டுமல்ல வேறொரு சாகச விளையாட்டுக்கும் உலகப் புகழ்பெற்றது மொனாகோ. இங்கே நடைபெறும் 'மொனாகோ கிராண்ட் ஃப்ரீ' பந்தயம் ஒரு மாபெரும் திருவிழா. உலகின் பல பகுதிகளில் இந்தப் பந்தயம்









★ காசினோ கிளப்

நடந்தாலும், மொனாகோவில் ஜெயிப்பது தனிப் பெருமைதான். காரணம் இங்கு அமைந்துள்ளது மிகவும் சவாலான பந்தயப் பாதை. நடுவே மிக மிகக் குறுகலான கடினமான சந்துகளையெல் லாம் கடக்கவேண்டும்.

1993ல் ஐ.நா.சபையின் உறுப்பினரா னது மொனாகோ. 2002ல் ஃபிரான்ஸுக் கும் மொனாகோவுக்கும் இடையே புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. இனி கிரிமால்டியின் வம்சம் மொனாகோவை ஆளக்கூடாது. தனி சுதந்திர நாடாகவே மொனாகோ இருக்கும். ஆனால் அதற் கான ராணுவப் பாதுகாப்பை ஃபிரான்ஸ் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்!

ஃபிரான்ஸ் முதலாளியா? முன்னாள் முதலாளியா? இப்படி ஒரு கேள்வி அடிக் கடி எழுந்தாலும் மொனாகோ மக்கள் தங்களுக்கு விட்டுவிட்டுக் கிடைத்து வரும் சுதந்திரத்தை அனுபவித்துப் பூரிக்கிறார்கள்தான்.

★ மொனாகோவில் இது தலைநகரம், இது நாடு என்று எந்தப் பிரிவுக்கோடும் கிடையாது- அதுவே இது, இதுவே அது! அங்கே தங்கியிருப்பவர் களில் 84 சதவிகிதம் வெளி நாட்டவர்கள்.

★ கிரேக்க வார்த் தையான 'மொனோக் கோஸ்' என்ற வார்த் தையிலிருந்து வந் ததுதான் மொனாகோ. அந்த கிரேக்க வார்த்தைக்கு அர்த்தம் 'ஒரே குடியிருப்பு'.

★ மொனாகோ கொடியை வரைவது ரொம்ப சுலபம். மேல்பாதி சிகப்பு, கீழ் பாதி வெள்ளை அவ்வளவே.

★ ஹெர்குலிஸ் தெரியுமல்லவா? பலத்துக்கு உதாரணமாகக் கருதப்படும் கிரேக்க வீரன். அவன் ஒரு முறை மொனாகோ வழியாகச் சென்றானாம். அங்கிருந்த தெய்வங்களையெல்லாம் அனுப்பிவிட்டானாம். எனவே ஹெர் குலஸுக்கு என்றே ஒரு ஆலயமும் இங்கு எழுப்பப்பட்டிருக்கிறது.


★ புகையிலையிலிருந்து தபால்துறை வரை பலவும் அரசின் பிடியில்தான்.

★ ஐரோப்பாவில் இருந்தாலும், ஐரோப்பிய யூனியனில் மொனாகோ உறுப்பினர் அல்ல. எனினும் நாணயம் யூரோதான்! மொனாகோவில் பாரம்பரியச் சின்னங்கள் கலந்த யூரோ நாணயங்களை வெளியிடுகிறது மொனாகோ.

★ அதிகாரபூர்வமான மதம் கத் தோலிக்க மதம்.

★ மொனாகோவில் எத்தனை நகராட் சிகள் தெரியுமா? இரண்டுக்கு முந்தைய எண் எது? ஆம், அதுதான் விடை!

அடுத்த வாரம் **வாடிகன்...**



● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? "வன்னியர்கள், வன்னியர்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும்" என்று ராமதாஸ் கூறியிருக்கிறாரே?

! குறுகிய நோக்கு. வன்னியர் அல்லாதார் வாக்குகள் கிடைக்காமல் போகும் என்பது ஒருபுறமிருக்க, இவ்வளவு ஜாதி உணர்வோடு பேசும் அவர், வன்னிய மக்கள் கட்சி என்று பெயர் மாற்றம் செய்யலாம்.

● என்.காளிதாஸ், சிதம்பரம்.

? சமீபத்தில் தங்கள் மனத்தைப் பாதித்த சம்பவம்...?

! பழநி முருகன் கோயில் கோபுரக் கலசம் ஒன்று காணாமல் போய்விட, அது குறித்து தங்களுக்கு ஏதும் தெரியாது என்று அதிகாரிகள் சொன்ன பதில்! களவைக் காட்டிலும் அதிகக் கவலை தருகிறது இந்த அலட்சியம்.

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அனுமதி இல்லாத பள்ளிகள் ஐம்பத்து நான்காமே?

! தமிழகமெங்கும் இதே போன்ற ஏராளமான பள்ளிகளில் பயின்று வரும் லட்சக்கணக்கான மாணவர்களின் நிலையை எண்ணிப் பாருங்கள்... எளியோரின் அறியாமையைக் காசாக்கும் இந்தக் கல்வி வியாபாரத்துக்கு அடிப்படையான சமச்சீர் ஊழலைக் களையாமல் சமச்சீர் கல்விக்குத் திட்டமிட்டு என்ன பயன்?! அரசு இத்தகைய பள்ளிகளை இனம் கண்டு மூடி விடலாம். ஆனால் அங்கு படித்து வரும் குழந்தைகளுக்கு என்ன மாற்று ஏற்பாடு?

● ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிசெட்டிபாளையம்

? திருப்பதி வெங்கடாசலபதி பற்றிய பாடல்களுக்கு ஏ.ஆர்.ரஹ்மானைக் கொண்டு இசையமைக்கச் செய்து, ஆல்பம் வெளியிடப் போவதாக அறிவித்துள்ள தேவஸ்தானத்தைக் கண்டித்து, 'இந்து தர்மத்தில் நம்பிக்கை உள்ளவர் இசையமைப்பதே சிறப்பாக இருக்கும்' என்று ஹிந்து முன்னணி மாநிலச் செயலாளர் வெள்ளையப்பன் சொல்வது சரிதானே?

! இசைக்கு ஏதுங்க ஜாதி, மதம்...? இறைமையை அடைவதற்கான சிறந்த ஏற்பாடாக இசையைக் கொள்ளலாம். யார் மன்னிப்புக் கேட்கிறாரே

மன்னிப்புக் கேட்கிறாரே



* இறைமையை நோக்கி...

இசையமைப்பது என்பதல்ல; எவ்வளவு தூரம் இறைமையை நோக்கி அது நம்மை உயர்த்துகிறது என்பதே முக்கியம்.

● த.குமார், பொள்ளாச்சி

? களவுக்கும், கொள்ளைக்கும் வித்தியாசம் தெரியாமல், பல பத்திரிகைகள் எழுதுகின்றன என்று சென்னை போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் தாம் அளித்த பேட்டியில் கூறியுள்ளாரே?

! பத்திரிகைகள் திருத்தமாகச் செய்தி வெளியிட வேண்டியது அவசியம்தான், மறுக்கவில்லை; ஆனால் செய்தி வெளியீட்டை அலசும் நுணுக்கத்துடன் காவல் துறையின் செயல்பாட்டையும் கமிஷனர் அலசுவாரேயானால் களவு, வழிப்பறி,

எடியூரப்பா?

கொள்ளை எல்லாமே குறையும்; இல்லாவிட்டால் காவல் துறையின் நற்பெயரும் கௌரவமும் கொள்ளை போய்விடும்!

● க.குழந்தைவேல், மேட்டுத்திருக்காம்புலியூர்

? வளர்ந்து வந்த தே.மு.தி.க., திருச்செந்தூர், வந்தவாசி இடைத்தேர்தலில் தேய்ந்து விட்டது எதைக் காட்டுகிறது?

! தே.மு.தி.க. தேயவுமில்லை; வளர்ந்து விடவுமில்லை. கடந்த முறை அது பெற்ற வாக்கு விகிதத்தில் பெரிய மாற்றமில்லை என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? "காவிரி பிரச்னையில் கர்நாடகம் தொடர்ந்து வஞ்சித்தால் தமிழன் பொறுத்துக் கொள்ள மாட்டான்," என்று கூறுகிறாரே வீரபாண்டி ஆறுமுகம்?

நீங்கள் கேட்டவை

தராசு

! இந்த வறட்டு வீராவேசத்தை விட்டு விட்டு, நல்லெண்ணம் தொனிக்கப் பேசினாலே போதும்; காவிரி மட்டுமல்ல; பல்வேறு பிரச்னைகளையும் தீர்த்துவிட முடியும்.

● த.பரதன், திருவாரூர்


? குடியிருப்புப் பகுதிகளில் நாய் வளர்ப்பதை உரிமையாகக் கருத



* அனுதாபத் தேடல்!



* வேஸ்ட் பத்து



* விழா வருத்தம்!

முடியாது என்று உயர்நீதிமன்றம் கூறி''ள்ளது பற்றி...?

! லைசென்ஸ் பெற்று, உரிய கட்டுப்பாடுகளுடன் ஒரு நாய் வளர்த்தால் ஆட்சேபிப்பதற்கில்லை. நாய் பண்ணையே நடத்தினால் எதிர்ப்பு தோன்றுவது இயல்பே. பண்ணை நடத்தியவர்களை விட அதை அனுமதித்த அதிகாரிகள் அதிக கண்டனத்துக்குரியவர்கள். குடியிருப்புப் பகுதிகளில் கடைகள் போடுவதும் கிடங்குகள் வைப்பதும் சர்வசாதாரணமாகி வரு

கின்றன. காரணம் அனைவரும் அறிந்ததே.

● எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி

? மு.க. அழகிரியைப் பிரதமராக்குவதே லட்சியம் என்றபடி அவர் பெயரில் பேரவை ஒன்று துவங்கப்பட்டுள்ளதே?

! யார் கண்டது? பாரத புண்ணிய பூமியில் எதுவும் நடக்கலாம்! சிபு ஸோரன் ஜார்கண்ட் முதல்வராக முடியும் போது அழகிரி ஏன் பிரதமராகக் கூடாது?

★ வ.ம.க!



★ வறட்டு வீராவேசம்!



★ அவசிய அலசல்



அவர் மத்திய அமைச்சராவார் என்று யாராவது சில ஆண்டுகளுக்கு முன் நினைச்சுப் பார்த்திருப்பாங்களா?

● அ.சுகுமார், காட்பாடி

? "நான் பல தவறுகளைச் செய்துவிட்டேன்; மன்னியுங்கள்" என்கிறாரே எடியூரப்பா?

! குற்றத்தை ஒப்புக் கொள்ளும் பக்குவத்தைப் பாராட்டலாம்; ஆனால், அனுதாபம் தேடும் தந்திரத்தைக் கண்டனம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்று, அரசியல் நிர்ப்பந்தத்துக்காக தவறு இழைக்காமல் இருக்க நெஞ்சுரம் வேண்டும்; அல்லது பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு மனசாட்சிப்படி நடக்கும் நாணயம் வேண்டும்.

● லெ.நா.சிவகுமார், சென்னை-33

? உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டின் மூலம் இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழை ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என முதல்வர் சொல்கிறாரே?

! இதுபோன்ற சவால்களும் முயற்சிகளும் தமிழ் மீது வெறுப்பு வளர உதவுமே தவிர அதன் வளர்ச்சிக்கு உதவாது. தமிழ் ந வீ ன யுகத்துக்கு ஏற்ப துரிதமாக வளர வழி கண்டால், அதன் ஆளுமை, முதல்வரின் முயற்சி இன்றியே தன்னால் விரிவடையும்.

● மயில்வீரன், திருவண்ணாமலை ★

? காங்கிரஸை வீழ்த்த பா.ஜ.கவின் பத்து அம்சத் திட்டம் தயாரித்துள்ளாரே கட்கரி?

❑ ரூ.150 பரிசு பெறுபவர்:
ந.சந்திரமௌலி, ஊத்துக்குளி

★ ரூ.75 பரிசு பெறுபவர்:
மயில்வீரன், திருவண்ணாமலை

! பா.ஜ.க.வை உயர்த்த பத்து அம்சத் திட்டம் தீட்டியிருந்தால் கட்கரி கெட்டிக்காரர்; அப்போது காங்கிரஸ் தானே வீழ்ந்திருக்கும். அதை விடுத்து, காங்கிரஸை வீழ்த்தும் பத்து அம்சத் திட்டம் வெட்டி வேலை! பயன் தராது.

● ந.சந்திரமௌலி, ஊத்துக்குளி ❑

? சென்னை புத்தகக் கண்காட்சியைத் துவக்கி வைத்த முதல்வர், முந்தைய ஆண்டில், தமது சாதனைகள் பற்றிய செய்திகள் இடம்பெறாத (சென்னை பற்றிய) நூலுக்குப் பொற்கிழி வழங்கியதைக் குறையாகச் சுட்டிக்காட்டியது குறித்து உங்கள் கருத்து?

! ஒரு நூலிலே உள்ள நிறை குறைகளை எடுத்துக்காட்டி விமர்சிக்க யாருக்கும் உரிமை உண்டு என்றாலும் தம்மைப் பற்றிக் குறிப்பிடாததே பெரிய குறை என்பதாக முதல்வர் விழா மேடையில் வருந்தியது 'காலம் கருதி இடத்தாற் செய்யாத' காரியம் - அவரிடம் நாம் காணும் குறை.

ஊசிதான் தேவை!

போளூர் ஆர்.பஞ்சவர்ணம்

மின்னல் கதை



ஆரம்பக் காலத்தில் தையல் வேலை செய்து வந்த ஒருவர் பெரிய துறவியானார். அவரைச் சந்தித்து அவருடைய அற்புத ஆற்றலை அறிந்த அரசர், அவருடைய ஆரம்பத் தொழிலையும் தெரிந்து கொண்டார். துறவிக்கு அழகான வைரங்கள் பதித்த தங்க கத்தரிக்கோல் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். துறவி அதை வாங்கிக் கொள்ள அன்புடன் மறுத்து விட்டார்.

''என்ன கொடுத்தால் ஏற்றுக் கொள்வீர்கள்?'' என்று அரசர் கேட்டார் பவ்யமாக.

''ஒரே ஓர் ஊசி இருந்தால் கொடுங்கள்!'' என்றார் துறவி. அரசரும் உடனே ஒரு ஊசியை வரவழைத்துக் கொடுத்துவிட்டு, ''ஐயா! தங்கக் கத்தரிக்கோலை மறுத்துவிட்டு இந்தச் சாதாரண ஊசியை வாங்கிக் கொண்டதன் காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

துறவி சொன்னார்: ''கத்தரிக்கோல் ஒரு பொருளை இரண்டாக, மூன்றாக வெட்டும், பிரிக்கும். ஆனால், ஊசியோ பொருளை இணைக்கும்; தைக்கும். இன்றைய மனித குலத்துக்குத் தேவை இணைக்கக்கூடிய ஊசிதானே தவிர, பிரிக்கக்கூடிய கத்தரிக்கோல் அல்ல!''



எப்பொழுதெல்லாம் உடலின் நோய் எதிர்ப்பு சக்திக்குப் பிரச்னை ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் நம் உடலின் இம்யூனிட்டி அதை எதிர்த்துப் போராட இயற்கையாகவே கற்றுக்கொண்டிருக்கிறது. உடலில் ஏற்படும் சிறு காயங்கள் தானாகக் குணமாவதும், ஜலதோஷம் மற்றும் சிலவகை சிறு உடல் உபாதைகள் எந்தச் சிகிச்சையுமின்றி தானாகச் சரியாவதும் இம்யூனிட்டி என்கிற இந்த நோய் எதிர்ப்பு சக்தியினால்தான்.

அதே போல மனித மனமும் இயற்கையாகவே தற்காப்புக் கலையை மனிதகுலம் தோன்றிய காலம்தொட்டே பல்லாயிரம் ஆண்டுகளில் படிப்படியாக வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறது. அதுதான் ஈகோ.

அன்றாடம் பிரயோகிக்கப்படும் ஈகோ என்ற பதம் அகம்பாவம், திமிர், 'தான்' என்ற முனைப்பு என்ற பொருளில்தான் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மனவியலில் ஈகோ என்பது ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் இயற்கையாகவே வளர்ந்து வந்திருக்கக் கூடிய ஒரு சிறப்பியல்பு.

உதாரணமாக:

குடிப்பழக்கத்துக்கு அடிமையானவரின் மாண்பு மிகு மனம் ஈகோவை எப்படி வெளிப்படுத்தும்



1

டாக்டர் பி.ஆனந்தன்

மனநல மருத்துவத்தில் மனப் பதற்றம், மன உளைச்சல் சம்பந்தமான மற்றும் எண்ண சுழற்சி, மனம் சார்ந்த உடல் நோய்களில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார் டாக்டர் ஆனந்தன். மனநல மருத்துவம் பற்றியும், மருத்துவத் துறையில் நம் நாட்டில் நிலவும் அவலங்கள் பற்றியும், இவரது கட்டுரைகள் பல்வேறு சிற்றிதழ்களில் வெளியாகியுள்ளன. அவை 'மனத்தின் புதிர்பாதைகள்', 'பூட்டிய அறைகளில் கேட்ட குரல்கள்' என்ற புத்தகங்களாக வெளி வந்திருக்கின்றன.

தெரியுமா?

நியாயப்படுத்துதல் (Rationalization):

''இந்தக் காலத்துல யார்தாம்பா குடிக்கல?''

''அமெரிக்காவுல பொம்பளைங்களே குடிக்கிறாங்க.''

''தெனமும் கொஞ்சம் குடிச்சா ஹார்ட்டுக்கு நல்லதுன்னு டாக்டருங்களே சொல்லியிருக்காங்க.''

காரணத்தைச் சூழ்நிலைகளின் மீது காட்டுதல் (Projection):

''என் வேலை அப்படிப்பா! உடம்பு வலி போறதுக்காக தினமும் நைட்டு தூங்குறப்ப கொஞ்சம் குடிப்பேன்.''

''ஆஃபீஸ்ல பயங்கர டென்ஷன், வீட்டுக்கு வந்தா வொய்ஃப் 'நை நை'ன்னு ஏதாவது சொல்லிக்கிட்டே இருப்பா, ஃப்ரெண்ட்ஸ் கூட்டிட்டுப் போய்ட்டாங்க, பெரிய மனுஷங்ககூட பிஸினஸ் பேசும்போது குடிக்காட்டி மரியாதையா இருக்காது. பிஸினஸும் படியாது'' என சூழ்நிலைகளின் மீது கை காட்டித் தப்பிக்க முற்படுவது.

குறைத்துக்காட்டுதல் (Minimization):

''என் லிமிட் என்னன்னு எனக்குத் தெரியும்.''

''நான் ஒண்ணும் மொடாக்குடியன் கிடையாது.''

''மத்தவங்க மாதிரி குடிச்சிட்டு சண்டை போடுறது, சுயநினைவில்லாம வாந்தி எடுத்துக்கிட்டுச் சரிஞ்சு கிடக்குறது, வேலைக்குப் போகாம இருக்குறதுங்கறதெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''நைட் ஆனா ஒரு குவார்ட்டர் அடிச்சிட்டு வயிறு நிறைய சாப்பிட்டுட்டு நல்லாத் தூங்கிடுவேன்.''

''கண்ட்ரோல் என்கிட்ட இருக்கு. இன்னைக்கு நினைச்சாகூட நிறுத்திடுவேன். வருஷாவருஷம் மலைக்குப் போறப்ப நாப்பது நாளு ஒரு சொட்டு கூட குடிக்கமாட்டேனே? இதுலேர்ந்து தெரியலையா என் கண்ட்ரோல்.''

புதிய தொடர்

மாண்புமிகு மனம்

'எல்லாம் மனசுதான்ப்பா! முடியும்னா முடியும். முடியாதுன்னா முடியாதுதான். நம் மனை மீறியா போயிடப் போவுது இந்த மனசு.''

''ச்சே! ச்சே! நான் ஒண்ணும் குடிகாரன் இல்ல. பீர் மட்டும்தான் குடிப்பேன். வொயின், பீர்ல ஆல்கஹால் பர்சன்டேஜ் ரொம்ப கம்மி.'' இப்படியெல்லாம் மனம் தவறின் தன்மையைக் குறைத்துக் காட்டும்.

குடிக்கு அடிமையான மனிதர் தம் செயலை நியாயப்படுத்தாவிட்டால், காரணத்தைச் சூழ்நிலைகளின் மீது காட்டாவிட்டால், அளவைக் குறைத்துக் காட்டாவிட்டால் என்னவாகும் தெரியுமா?

தீவிரமான மனச்சோர்வுக்குள்ளாகி தற்கொலை எண்ணம் வந்துவிடும்!

'தான் குடிக்கு அடிமையானவன்' என்பதை ஒருவன் உண்மையாக ஒப்புக் கொண்டானென்றால் ஒன்று சிகிச்சைக்காக மருத்துவரைத் தேடுவான் அல்லது தற்கொலைக்கு முயற்சி செய்வான்.

''இப்படித் தினமும் குடித்து உடலைக் கெடுத்துக் கொள்கிறேனே! சம்பாதிப்பதில் கணிசமான தொகை குடிக்குப் போய் விடுகிறதே! தினமும் குடிப்ப

தால் மனைவியுடன் சண்டை சச்சரவு ஏற்படுகிறதே! சண்டைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் பாதிக்கப் படுவார்களோ?

குடிப்பதால் அலுவலகத்தில் மட்டு மின்றி நண்பர்கள், உறவினர்கள், குடும் பத்தினரிடையே கூட வர வர மரியாதை குறைந்து வருகிறதே!



இன்னையோட விட்டுடணும்னு ஒவ் வொரு நாளும் நினைக்கிறேன். ஆனால் முடியலையே ஏன்?

நம்மனால யாருக்கும் உதவியில் லையோ? குழந்தைகளும் - மனைவியும் மனவேதனையடைகிறார்களோ? நான் எதுக்கும் லாயக்கு இல்லையோ? இப் படியே போனா எதிர்காலம் எப்படி இருக்குமோ? ப்ச்! இந்த ஈனப் பிறவியை வைச்சுக்கிட்டு இருக்கறதுக்கு, பேசாம செத்துடலாம். பென்ஷன் வாங்கியாச்சும் பொண்டாட்டி புள்ளைங்க சந்தோஷமா இருக்கட்டும்'' - என எண்ணங்கள் தோன்ற லாம்.

குடிக்கு அடிமையான ஒருவர், இவ் வாறு தற்கொலை செய்து கொள்ளாமல் அவருடைய ஈகோ அவரைத் தற்காலி கமாகக் காக்கிறது. அப்படிக் காப் பதற்கு ஈகோ பயன்படுத்தும் கலை தான் மனோ தற்காப்பு. அதுவே, 'நியா யப்படுத்துதல்', 'காரணத்தைச் சூழ் நிலைகளின் மீது காட்டுதல்', 'குறைத்துக்காட்டுதல்' என வெளிப் படுகிறது.

“எல்லாம் மனசுதான்ப்பா! முடியும்னா முடியும். முடியாதுன்னா முடியாதுதான். நம்மளை மீறியாப் போயிடப்போவது இந்த மனசு.”

மதுவுக்கு அடிமை யானவன் இப்படியே தற் காத்துக் கொண்டிருப்பது சரியா?

மனவியலில் இதை முதிர்ச்சியற்ற மனோதற்காப்பு முறைகள் (Immature ego defence mechanism) என்கிறார்கள். மதுவுக்கு அடிமையானவர் இந்த முதிர்ச்சியற்ற மனோதற்காப்பிலிருந்து வெளியே வர வேண்டும், குடிக்கக் கூடாது, தற்கொலை யும் செய்து கொள்ளக்கூடாது. எப்படி அவருக்கு உதவலாம்?

(தொடரும்)

மதுர் தர்மலிங்கம் என்பவர் 1970களில் தி.மு.க. எம்.எல்.ஏவாக இருந்தவர். இவர் சமீபத்தில் அதிரடியாக 'மு.க. அழகிரி பேரவை' என்ற அமைப்பைத் தொடங்கினார். மாவட்டவாரியாக பொறுப்பாளர்களையும் நியமிக்கத் தொடங்கினார். இதில் ஏதோ பணம் விளையாடுவதாக வந்த தகவலை அடுத்து தி.மு.க. தலைமை, கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு முரணாக இந்த அமைப்பு தொடங்கப்பட்டிருப்பதாகவும், அதனுடன் தொடர்பு கொள்பவர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்றும் அழகிரி பேரவைக்கு ஆப்பு வைத்துவிட்டது. ''சமீபத்தில் தியாகராய நகரில் அஞ்சுகம் மகளிர் மன்றம், தளபதி மன்றம் என்றெல்லாம் துவக்கப்பட்டதே. அந்த அமைப்புகளை அனுமதித்துள்ளீர்களே'' என்று ஒரு மேல்மட்டப் பிரமுகரிடம் கேட்டோம். ''அவையெல்லாம் பகுதிக் கழகத்துக்குட்பட்ட அமைப்புகள். மாநில அளவிலான அமைப்புகள் அல்ல. முன்பு கூட முரசொலி மாறன் பேரவை என்று மாநில அளவில் துவங்க முயற்சித்தபோது தடுத்து நிறுத்தியது தலைமை'' என்றார் அந்தப் பிரமுகர்.





வன்னியர் சத்தியம்; வாக்கு நிச்சயம்!

பெண்ணகரம், டாக்டருக்கு அக்னிப் பரீட்சை. ஜாதி, சனத்தை நம்பிக் களத்தில் குதித்திருக்கிறார். செல்ஃபோன், மின்னஞ்சல், கேபிள் தொலைக்காட்சி போன்றவற்றைப் பயன்படுத்தி பிரசாரம் செய்வோம் என்று அவர் சொன்னாலும், மற்றொரு யுக்தியும் கைவசம் உண்டாம். பா.ம.க. வன்னியர் மகளிர் அமைப்பினர் தட்டில் தேங்காய், வெற்றிலை பாக்கு, மஞ்சள், புடைவையுடன் பெரும்பான்மையாக உள்ள வன்னியர் வாக்காளர் பகுதிகளுக்குச் செல்வார்களாம். வீட்டில் உள்ள பெண்களை சாமி படத்துக்கு முன்னரோ அல்லது இறந்த பெரியவர்களின் படத்துக்கு முன்னரோ நிற்க வைத்து தட்டைக் கொடுத்து. ''மாம்பழத்துக்கே வோட்டு'' என்று சத்தியம் வாங்குவார்களாம். ''அள்ளி விடப்படும் பணத்தைப் புறக்கணித்து சத்தியம் ஜெயிக்கும்'' என்கிறார்கள் பா.ம.க. பிரமுகர்கள். இதற்கிடையில் தர்மபுரி வடக்கு தி.மு.க. மாவட்டச் செயலாளர் முல்லைவேந்தனைத் தொகுதிக்குள் அனுப்ப வேண்டாம் என்று தி.மு.க. தலைமைக்கு வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது.

– சஞ்சயன்



ணும்னு வரம் வாங்கிண்டு வந்திருக்கேன். ஏம்மா... எங்கேருந்தும்மா இவளைப் பிடிச்சு என் தலையில கட்டிட்டு இப்படிச் சிரிச்சுக்கிட்டு போஸ் கொடுக்கற...'' அழுதவாறே கோண்டு மாமா அம்மா ஃபோட்டோவுக்கெதிரே கேவுவது, ரொட்டீனாக நடக்கும் நிகழ்வு.

'ஷாப்பிங் ஒரு ஸ்ட்ரெஸ் பஸ்டர்' என்று மருத்துவர்கள் சொல்லவும், ஷாப்பிங் மேனியாக்களுக்கு குஷி அதிகமாகி மூணு வேளையும் அவரவர் ஏரியா டாக்டர்களுக்கு பக்கெட்டில் திக் பால் பாயசம் சப்ளை பண்ணு கிறார்கள்; மானசீகமாகத்தேன்...

''என் பொண்டாட்டி மோஸ்ஸமானவ. அரக்கி. அவ கண்ணு ரவுண்டு கட்டி ரகளையா ஆடும். லேசா தலைவலிக்கற மாதிரி இருக்குன்னு சொல்லிட்டு வெளில போனவ வர்றச்சே ஆறு பொடவை

சிரிப்பாலஜி

''எங்கேடா உன் அம்மா? ஷாப்பிங் போயிட்டாளா... மானேஜர் சறுக்கி விழுந்ததற்கு, ஃப்ரெண்டு பொண்ணு ஃபெயில் ஆனதுக்கு, நாய் பார்த்டேக்கு, நாத்தனார் பையனுக்கு ஐ.ஐ.டி.யில சீட் கெடக்காததுக்கு... இப்படி ஏதாச்சும் சாக்கு சொல்லி தி.நகர் போய் ஷாப்பிங் பண்றாளே.. வைத்தியம் பண்ண டாக்டரே கெடையாதா? ஈஸ்வரா... ஷாப்பிங் ரோகத்தை நிவர்த்தி பண்ண கோயில்களே இல்லையா.. கடாமுடான்னு ஏதேனும் வாங்கி என் பணம் ஆஸ்யூஷுவல் விரயம் ஆகளோட வர்றா ஸ்வாமி.. மனசே சரியில்லைன்னு போயிட்டு சின்னச் சின்ன குக்கர், ஃபில்டர், அடுக்கு செட்டுன்னு வாங்கி வந்து அடுக்கினா என் மனசு மாத்திரம் சரியாயிருக்குமா... தெய்வமே கண்ணைத் தொறந்து பாக்கவே மாட்டியா? அவ தலைவலி, மண்டைக்கோளாறு.. இதைச் சரி பண்ணப் போறயா இல்லையா..?'' கபாலீஸ்வரர் கோயிலில் மனமுருகிய ஒரு கணவரின் வேண்டுதலைக் கேட்டு குளமாகாத கண்களே கிடையாது.

பெரியவர்கள் என்றில்லை... சின்னச் சின்னப் பெண்கள் படுத்தும் பாடு உண்டே அது வேறு ரகம். ''எங்க பொண்ணு இங்க சென்னையில இருந்தாத்தான் துப்பட்டா, ஸ்டோல்ஸ், சப்பல்ஸ்"ன்னு வாங்கி ஷாப்பிங் மேனா நடத்தறான்னு. ஒரு பத்து நாளைக்கு ஏற்காடு அனுப்பி வைச்சுட்டு நிம்மதியா இருந்தோம்; ஏரி, அருவி, படகுச் சவாரி, பார்க், பசுமைன்னு நல்ல விஷயங்கள் கண்ல படட்டுமேன்னு. தவிடுபொடியாக்கற

லதா சேகர்

மாதிரி வர்றச்சே பெரீய்ய சூட்கேஸ் வழிய வழிய சல்வார் கமீஸ், குர்தீஸ் சைஸ் வாரியா வாங்கி அம்மா, பெரியம்மா, கஸின்ஸ், ஃப்ரெண்ட்ஸ்னு அதிரடியா வழங்கி எங்களை சைலன்ட்டாக்கிட்டா. 'வழக்கம் போல தி.நகர், மைலாப்பூர், ஸ்பென்ஸர், பட்டிக்... இதுலயே சஞ்சரியம்மா'ன்னு கதறி தப்பை உணர்ந்துட்டோம்'' என்கின்றனர் உறவினர்.

பையன்களுக்கும் ஷாப்பிங் மோகம் மெள்ள மெள்ள பற்றிக்கொண்டு வருகிறது. ''என் பிள்ளை ஏதோ ஆர்ட்டிஃபாக்ட்ஸாமே... கண்ட கண்றாவியையும் வாங்கி வீட்ல வைக்கறான். 'கம்மோடு' மாதிரியே ஒரு சின்ன கண்றாவி. டைனிங் டேபிளில் வைக்கணுமாம். முந்திரி, பாதாம், ட்ரை ஃப்ரூட்ஸ் போடணுமாம். பார்த்தால் குமட்டுது...'' ஆர்ட் மோகப் பிள்ளையின் தாயின் புலம்பல்.

ஷாப்பிங் மால், புடைவைக் கடைகளுக்குப் போனோமானால் வெளியில் வரிசை வரிசையாகப் போட்டிருக்கும் நாற்காலிகளில் ஆண்கள்தான் அதிகம். கூடவே கொசுறாக குழந்தைகள்.

''வெங்குட்டு பீ காம்... கொயட்... சமர்த்து... இதோ வந்துடுவாளே... பொடவ ஷாப்பிங்னா லேட்டுதானே ஆகும்... பீ ஸ்போர்ட்டிவ்.. எப்பவும் நடக்கறதுதானே...'' சொல்லிக் கொண்டிருந்தவர், ''உங்க பொறுமை யாருக்கு வரும்? இவ்வளவு அழகா குழந்தைக்கு எடுத்துச் சொல்றீங்களே'' என்ற நம் புகழ்ச்சியை ஒதுக்கிவிட்டு, ''நீங்க வேற, இது ஒரு செல்ஃப் சஜெஷன் டெக்னிக். வெங்குட்டு என் பெயர்...'' என ஷாக் கொடுத்தார்.

ஷாப்பிங் வரும் பெண்கள் கணவர்களை வீட்டிலோ, கோயிலிலோ, பிறந்தகத்திலோ, க்ரெஷ்ஷிலோ(!) விட்டு விட்டு நிம்மதியா பண்ணுவது வழக்கம்.

பேரம் எனும் வைபவம் ஷாப்பிங்குடன் சேரும்போதுதான் தனி கொண்டாட்டம். சொன்ன விலைக்கு வாங்கினால் சுகமேது? ''கொல்கத்தா கரியா காட்டில் ரோட்டில் கொட்டிண்டு பெங்கால் காட்டன் ஸேல் நடக்கும். அறுநூறு ரூபாய் புடைவை நூத்தம்பது ரூபாய்க்கு வாங்கிட்டேன்...'' எனக் கூறும் த்ரில் த்ரிஷாக்கள் ஏராளம்.

சில பெண்கள் காதுத் தோடு, வளையல்கள்... என விதவிதமாக வாங்கி அடுக்குவார்கள். எவ்வளவு பழசு, கிழிசல், அறுந்தது என்றாலும் தூரப் போடக் கூடாது என அடம் பிடித்து சாப்பிடாமல் சாதிக்கும் தாறுமாறு ஷாப்பிங் கன்னிகைகள் ஏராளம்.

கோபம், வெறி, டிப்ரஷன், மகிழ்ச்சி, உற்சாகம், பண்டிகை என எல்லாவித கண்டிஷன்களிலும் பெண்கள் படுமகிழ்ச்சியாக இருப்பது ஷாப்பிங்கில்தான். ஆண்கள்?

அவர்களுக்கு இதெல்லாம் பழகிப் போச்சு... ●



பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் பூங்குழலி குதிரையின் காலடிச்சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள். ஊமை ராணி குதிரை மேல் ஏறிப் புறப்படுவதைப் பார்த்தாள். அவளைத் தடுப்பதற்காக எழுந்து ஓடினாள். அவள் கப்பலிலிருந்து இறங்கிக் கரைக்குச் செல்வதற்கு முன்னால் குதிரை பறந்து சென்றுவிட்டது.

உதய நேரம் மிக்க மனோகரமாயிருந்தது. பூங்குழலியின் உள்ளத்தில் என்றுமில்லாத உற்சாகம் ததும்பியது. அங்கிருந்தபடியே கப்பலின் மேல் தளத்தைப் பார்த்தாள். இளவரசர் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி நதிக்கரையோரமாகப் பறவைகளின் இனிய கானத்தைக் கேட்டுக் கொண்டு நடந்தாள். ஒரு மரத்தின் வளைந்த கிளையில் ஒரு பெரிய ராட்சசக் கிளி உட்கார்ந்திருந்தது. பூங்குழலியைக் கண்டு அது அஞ்சவில்லை. 'எங்கே வந்தாய்?' என்று கேட்பதுபோல் அவளை உற்றுப் பார்த்தது.

''கிளித்தோழி! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இளவரசர் இங்கிருந்து போய்விடுவார். பிறகு எனக்கு நீதான் துணை. என்னோடு பேசுவாய் அல்லவா?'' என்று பூங்குழலி கேட்டாள்.

அச்சமயம், ''பூங்குழலி! பூங்குழலி!'' என்ற குரல் கேட்டது. முதலில் கிளிதான் பேசுகிறது என்று நினைத்தாள் இல்லை; குரல் கப்பலிலிருந்து வருகிறது என்று உணர்ந்தாள். இளவரசர் அழைக்கிறார் என்று அறிந்து குதித்தோடினாள். ஆனால் கப்பல்

கிளித்தோழி!



மேலேறிப் பார்த்தபோது இளவரசர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி அவர் அருகில் சென்ற போது அவருடைய வாய் மீண்டும் 'பூங்குழலி!' என்று முணுமுணுத்தது. உடல் புளகாங்கிதம் கொண்ட அப்பெண் இளவரசரின் அருகில் சென்று, அவருடைய நெற்றியைத் தொட்டு எழுப்பினாள்.

- 'பொன்னியின் செல்வன்' புதினத்திலிருந்து...

வண்ணத் தூரிகை



அமரர் கல்கி

மூத்த சபா அங்கத்தினர் ஒருவர் இசைக் கலைஞர்களுக்காகப் பரிந்துரைக்கும் மாறுபட்ட விருதுகள் இதோ...



சர்வாலங்கார சிகாமணி

புது மணப்பெண் ரேஞ்சில் பளபளக்கும் இப்பாடகி, 'ராக அலங்காரங்களை விஞ்சி உடை அலங்காரம் நிற்க வேண்டும்' என்றிருப்பது, 'இன்று எந்த வகைப் புடைவை, ஜிமிக்கி, நெக்லஸ்?' என்று அறிய ஆவலுடன் வரும் ரசிகைகளுக்காகத்தான். தலையை விசுக் விசுக் என்று கோல மயிலாக ஆட்டுவது சங்கதியின் பாவத்துக்கு ஏற்ப அல்ல; வைரங்கள் ஒளிக்கற்றைகளை அங்கிங்கெனாதபடி எங்கும் வீசவே! செவியையும் கண்ணையும் குளிர வைக்கும் இவருக்கு இவ்விருது பரிந்துரைக்கப்படுகிறது.

வித்தியாச விருதுகள்

ஜே.எஸ்.ராகவன்

கன்'ஃப்யூஷன்' கலாமணி

ராமநவமி பானகத்தில் கஸாட்டா ஐஸ்க்ரீமைக் கலந்து குடிப்பதற்கு ஒப்பாக, தன் குழுவில் நாகஸ்வரத்தை டிரம்ஸுடனும், டிரம்பெட்டைத் தபேலாவுடனும் இணைத்துப் பரீட்சிக்கும் இவர்தம் ஃப்யூஷன் இசை ஒரு மாதிரியான ஜுகல் 'பிராந்தி'! சம்பிரதாயமாக அமைத்த மெட்டுக்கள் ஏதோ தள்ளாடுவது போலும், அவற்றுக்கு மேற்கத்திய இசை எனும் வாக்கிங் ஸ்டிக் தேவைப்படுகிறது என்றும் கணித்து, இவர் கேட்பாரற்று அமைக்கும் இரைச்சலிசை பலரைக் குழப்புவதால், இவர் கன்ஃப்யூஷன் கலாமணிக்குத் தகுதியாகிறார்.



சங்கீத 'ஆச்சர்'யா

எல்லாம் ஆச்சர்ய மயம் என்றிருக்கும் இவர், வர்ணத்தைத் தொடங்கியவுடனே இன்ப லாகிரி ஆலாபனைகளை ஆலோலமாக அள்ளி வீசிடுவார். அவ்வப்போது வயலினைப் பார்த்து ஒரு பலத்த தலையசைப்பு, மிருதங்கம் பக்கம் கையை முழ நீளம் நீட்டி ஒரு சப்...பாஷ், தேவையறிந்து மிளகுப் பாலை நீட்டும் சிஷ்யனைப் பார்த்தும் ஒரு பலே-பலே என்று தூள் கிளப்பி 'இவர்களுக்கு இவ்வளவு திறமையா?' என்று ஆச்சரியப்பட்டு ஆடியன்ஸைப் பெருமிதப் பார்வை பார்க்கும் இந்த சங்கீத ஆச்சார்யா ஒரு 'ஆச்சர்'யா!





சாகித்ய 'கல்லா' நிதி

கீர்த்தனை வரிகளைக் கல்லாமல் சாய்ஸில் விட்டு விட்டவர். மேதகு ஆளுனர் சட்டசபையில் உரையைப் படிப்பது போல, காகிதங்களைப் பார்த்துப் பார்த்து வாதாபியிலிருந்து பாடினாலும், இவர் கச்சேரி என்றால் சபாவின் கல்லா மழைக் கால மேட்டூர் அணையாக நிரம்பி விடுவதால், இவருக்கு சாகித்ய 'கல்லா'நிதி விருது கன கச்சிதம்.

உப-வாத்ய வேதாந்தி

கச்சேரி என்கிற விருந்தின் இலை ஓர ஊறுகாயாகத் திகழும் இவர், மிருதங்க வித்துவானின் அடிப்பொடியாக தன்னை பாவிப்பவர். அவ்வப்போது லைட்டாக அடித்து அடங்கிவிடும் தூறலாக டிங், டிக்-டிக்; டிடிங்-டிக்-டிக் என்று கட வாத்தியத்தை விரல் நுனிகளால் சிலமுறை தட்டிவிட்டு 'தேமே' என்று அடங்கிவிடும் இந்த வேதாந்தி, ஒரு பானைக்கு ஒருசில தட்டுக்கள் பதம் என்று உணர்த்துவதால், 'தனி'யாகக் கவனிக்கப்பட வேண்டியவர் ஆகிவிடுகிறார்.



வட்டமேஜை

✉ 'ஒரு வெற்றிப் படத்துக்கு நல்ல கதையே ஆணி வேர்' என்பதை உணராத வேட்டைக்காரனை, பிரிச்சு மேய்ஞ்சுட்டீங்க தலைவா...!

- எம்.சம்பத்,
வேலாயுதம்பாளையம்

✉ கோடம்பாக்கத்துக்கு மறுபக்கம் கூட்டிப் போய், 'இவங்க... இப்படித்தாங்க' என்று யதார்த்தத்தைக் காட்டிய சபீதா ஜோசப்பின் 13 வாரப் பக்கங்கள் சுவாரசியக் கலக்கல்!

- மல்லிகா அன்பழகன்,
சென்னை - 78

✉ மிஸ்டர் அண்ட் மிஸஸ் மேல்மாடி தொடர் 13 வாரங்களும் பெண், ஆண் மூளையைப் பற்றி நன்கு விளக்கி ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள பெரும் உதவி புரிந்தது. நல்ல தொடர். நன்றி.

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

✉ கல்கி (03.01.2010) திருச்சி மாவட்ட ஸ்பெஷல் - I படித்தேன். நானும் அன்பில் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன்தான். இந்த இதழ் 94ம் பக்கத்தில் பச்சிலை சாறு பிழிந்து கண்ணில் விடுவது குறித்த செய்தி வந்துள்ளது. இது கண் பார்வையையே இழக்கச் செய்யும் என்று டாக்டர்களே சொல்கின்றனர். இது போன்ற செய்தி வந்திருப்பது வருந்தத்தக்கது!

-அன்பில் இரா. ஸ்ரீனிவாசன், திருச்சி

✉ கார்த்தி சிதம்பரத்தின் பிறந்த நாளுக்கு 'ஆலயமே இல்லாத ஆண்டவனே', 'இந்திய தேசத்தின் விடிவெள்ளியே!' என்ற வாசகங்களோடு பேனர் வைத்தது சில தொண்டர்களின் ஆர்வக் கோளாறினால் நிகழ்ந்த செயல். அதற்கு தலைவர்கள் எப்படி பொறுப்பாவார்கள்? இது குறித்து வாசகரின் கேள்விக்கு கல்கி (6.12.09) இதழின், 'நீங்கள் கேட்டவை' தராசு - பகுதியில் ப.சிதம்பரத்தையும் கார்த்தி சிதம்பரத்தையும் கரும்புள்ளி என்று குறிப்பிட்டது ஏற்புடையதல்ல!

- பி. பாலகிருஷ்ணன்,
நுங்கம்பாக்கம்

பிரிச்சு மேய்ஞ்சுட்டீங்க தலைவா!



✉ அடியேனுக்குக் கோயில் எழுப்பப்பட்ட அந்த நாள் முதல் இந்தநாள் வரை உச்சிப் பிள்ளையார் கோயிலை நோக்கியபடி தெற்கு முகமாகவே நான் அமர்ந்துள்ளேன். உண்மை இவ்வாறு இருக்க, திருச்சி மாவட்ட கல்கி ஸ்பெஷல் - 2இல், நான் வடக்கு முகமாக வீற்றிருப்பதாகத் தவறாக எழுதியுள்ளீர்களே, இது நியாயமா?

- வை.கோபாலகிருஷ்ணன்
(ஏழைப் பிள்ளையாருக்காக),
திருச்சி

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

CHAMPA

சம்பாவின்

புதிய வரவுகள்



திருமணம் போன்ற எல்லா சுபகாரியங்களுக்கும் நாள் முழுவதும் சம்பாவின் பட்டோ என்று எல்லோருக்கும் வியக்கும் காட்டன் புடவைகளை அணிந்து கொண்டாடுங்கள், **Grand look Salwar Kameez**-களும் உள்ளன. சம்பாவிற்கு வாருங்கள்.

பொங்கல்

சிறப்புச் சலுகை

10%

01.01.2010 முதல்
13.01.2010 வரை





‘கிராண்ட் லுக்’
ஜரிகை வேலைப்பாடுடன்,
வண்ணமயமான
புடவைகளின் ஆலயம்

சம்பா!

Timings : 11 a.m to 1 p.m. and 3 p.m. to 8 p.m | Sunday Holiday | Visa, Master & BOB Cards Accepted

5, 3rd Street, Abiramapuram, Chennai - 600 018. Tel : 2499 6907

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 - 11 * Licensed t
post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

